கோகுலம்

GOKULAM


நவம்பர் '85 விலை ரூ 2/-





இந்திராகாந்தி

பிறந்தநாள்: 19-11-1917 மறைந்தநாள் 31-10-1984



கௌரவ ஆசிரியர் :

அழ. வள்ளியப்பா

உயிர்களிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
—பாரதியார்.

அருமைச் சிறுவர், சிறுமியரே,

இந்த நவம்பர் மாதத்தில் உங்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.

11—ஆம் தேதி தீபாவளி.

14—ஆம் தேதி குழந்தைகள் தினம்.

இரு நாட்களிலும் நீங்கள் குதூகலமாக இருப்பீர்கள். அந்த நாட்களைக் கோலாகலமாகக் கொண்டாடுவீர்கள்.

அரக்கன் அழிந்த நாள் என்கிறார்கள் தீபாவளியை. நாட்டிலுள்ள அரக்கத் தனங்கள் இன்னும் அழியவில்லையே!

குழந்தைகள் நாளில், உங்கள் உயர்வுக்காக அரசாங்கமும் பொது மக்களும் பல நல்ல நல்ல செயல்களில் ஈடுபடுவார்கள். நீங்கள் அன்றைக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?

'நான் பிறந்த நன்னாடு இந்தப் பாரத நாடு. இது உலகம் போற்றும் பொன்னாடாக விளங்க வேண்டும். அதற்கு என்னால் முடிந்த வரை தொண்டாற்றுவேன். அதற்கு இப்போதிருந்தே என்னை நான் தயார்ப்படுத்திக் கொள்வேன்' என்று உறுதி எடுத்துக் கொள்ளுங்கள்.

தேசத் தந்தை மகாத்மா காந்தியும், அருமை மாமா நேருவும், மற்றத் தலைவர்களும், லட்சக்கணக்கான தொண்டர்களும் அரும்பாடுபட்டுவாங்கித்தந்தசுதந்திரத்தைப்பேணிக் காப்போம். நம் நாடு உலகிலேயே மிக உயர்ந்த ஒரு நாடாக விளங்க இப்போதிருந்தே இயன்றதையெல்லாம் செய்வோம்.

—அழ. வள்ளியப்பா.



கோகுலம்

மலர்-3

இதழ்-10

1985

நவம்பர்

இதழ்


தனிப் பிரதி ரூ 2/-

ஆண்டுச் சந்தா ரூ 24/-

இந்த இதழ் எழுத்தாளர்கள்


சுப்ரபாலன்



அகிலா சிவராமன்



புதுவை அமலன்

பிருந்தாவனக் கவிஞர்கள்


டி.சிவராமகிருஷ்ணன்


ஜெ.செங்கமலம்


த.ராஜ்சங்கர்


டி.எம்.பர்வேஸ்

பிருந்தாவனக் கதாசிரியர்கள்


பி.துரைசாமி


சு.சாந்த மூர்த்தி



அடுத்த இதழில்....

என் குழந்தைப் பருவம்

தமிழக முன்னாள் முதல்வர்

எம். பக்தவத்சலம்

குழந்தைகள் தினம்

அகிலா சிவராமன்




பாருக்குள்ளே நல்ல நாட்டில் — சிறு
பாலர்களெல்லாரும்கூடிடும்நன்னாள்
நேரு மாமா தந்த பொன்னாள் — இன்று.
நேர்மையும் தீரமும் சேர்ந்திட்ட
திருநாள்.

ஊருக் குழைத்த நல்வீரர் — நேரு
உத்தம காந்தியின் உற்றநல் சீடர்,
பாருக்கென்றே பஞ்ச சீலம் — தந்து
பாங்குட னேவெற்றி கொண்டநம்
தீரர்.

அழகான ரோஜாவின் அன்பர் — நேரு
அன்பான பாலர்கொண் டாடிடும்
நண்பர்,

குழந்தைகள் நாளான இன்று — நாம்
குதூகல மாகவே ஆடிமகிழ்வோம்.

சித்திரப் புதிர்!




ஆழி ________

1. 'டால்பின்' என்னும் இந்தப் பிராணியை தமிழில் '____________' என்று சொல்லுவார்கள்.



2. இந்தக் கட்டங்களிலிருந்து எத்தனை சதுரங்களைக் கண்டுபிடிக்கலாம்?




3. முற்றுவதற்கு முன் இந்தப் பழம் இப்படித்தான் இருக்கும். இது என்ன பழம் தெரியுமா?

4. சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் இருந்த இந்தப் பறவை இப்போது ஒன்றுகூட இல்லை. என்ன பறவை இது?



5. கண்டுபிடிக்கப்பட்ட புதிதில் இப்படி இருந்த இந்தக் கருவி என்ன தெரியுமா?

கண்டுபிடித்தவர் யார்?



விடை : வேறு பக்கம்

மின்மினிக் கதைகள்


(மகாகவி பாரதியார் எழுதிய கதைகள், இங்கே சுருக்கித் தரப்பட்டுள்ளன. — ஆசிரியர்.)

அந்தரடிச்சான் சாகிப்

டில்லியில் அந்தரடிச்சான் சாகிப் என்று ஒருவன் இருந்தான். அவன் எடுத்ததற்கெல்லாம் பயந்து நடுங்குவான். ஒவ்வொரு தடவை பயப்படும் போதும் நூறு குட்டிக்கரணம் போடுவான். இப்படித் தெருவில் போகும் போதும், வீட்டில் இருக்கும் போதும் குட்டிக்கரணம் போட்டுப் போட்டு, அவனை நெட்டைக் குத்தலாக நிறுத்துவதே கஷ்டமாகிவிட்டது!

அன்று பாதுஷாவிற்குப் பிறந்த நாள். பலவிதமான வேடிக்கைகள், நகரில் நடந்து கொண்டிருந்தன. அரண்மனைக்கு அருகில், இரண்டு பயில்வான்கள் கத்திச் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயம் கர்ணம் போட்டுக் கொண்டு வந்த அந்தரடிச்சான் சாஹிப், கத்திச் சண்டை போட்டுக் கொண்டிருந்த பயில்வான்களின்மேல் போய் விழுந்தான். உடனே, அந்த பயில்வான்கள் 'ஹோ'வென்று கதற, ஒருவர் வாள் ஒருவர் மீது பாய்ந்து இரத்தம் கொட்டியது. பயில்வான்கள் கீழே சாய்ந்தனர்.

இவற்றையெல்லாம் அரண்மனையின் ஏழாவது மாடியிலிருந்து பார்த்த பாதுஷா 'ஆஹா!' இவனல்லவா பெரிய வீரன்! இவனைத்தான் நம் சேனாதிபதியாக நியமிக்க வேண்டும்' என்று நினைத்து, அந்தரடிச்சான் சாஹிப்பை உடனே வரவழைத்து, ''நீ நமது சேனாதிபதி வேலையை ஏற்றுக் கொள்'' என்றார் . உடனே, அந்தரடிச்சான் சாஹிப் பயந்து நடுங்கிப் போய், முப்பது குட்டிக்கரணம் போட்டுப் பாதுஷாவின் மேல் போய் விழுந்தான்.



"ஓஹோ! இவன் தன் வணக்கத்தையும் வலிமையையும் நம்மிடம் இப்படிக் காட்டுகிறான் போலிருக்கிறது! என்று பாதுஷா நினைத்து, உடனே அவனைச் சேனாதிபதியாக நியமித்துவிட்டார். அத்துடன் ஒரு வைர மாலையையும் பரிசாகக் கொடுத்தார்.

நல்லவேளையாக அந்தப் பாதுஷாவின் காலத்தில் எங்கும் சண்டையே நடக்கவில்லை. அதனால், அந்தரடிச்சான் சாஹிப்பிற்குத் தன் திறமையைக் காட்ட சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. ஒரு நாளுக்கு லட்சம் குட்டிக்கரணம் போட்டுக் கொண்டு, மிகுந்த புகழுடன் வாழ்ந்தான்.



மிளகாய்ப் பழச் சாமியார்

மிளகாய்ப் பழச் சாமியார், நாள்தோறும் இருபது மிளகாய்ப் பழங்களைத் தின்று, ஒரு மிடறு தண்ணீர் குடிப்பார். அவரிடம் ஒரு கிளி இருந்தது.

மடத்துக்கு வருவோருக்கு அவர் கந்தபுராணம் சொல்வார். சொல்வதற்கு முன்பு 'முருகா, முருகா, ஒரு கதை சொல்லு' என்று கிளியைப் பார்த்துக் கூறுவார்.

உடனே அது 'கங்கா மங்கா' என்று ஏதோ உளறும். அப்போது மி. ப. சாமியார் மக்களைப் பார்த்து, "இது சாதாரணக் கிளியன்று. இவர் சுகப்பிரம ரிஷி. இவர் சொன்னது என்ன தெரியுமா?

கங்கா மங்கை மைந்தன்
பாம்பைத் தின்றது மயில்
மயிலின் மேலே கந்தன்

என்றுதான் கூறுகிறது" என்று ஆரம்பித்து கந்த புராணம் சொல்வார்.

மக்கள் பரவசமடைந்து பொன் பொன்னாகக் காணிக்கை செலுத்துவார்கள். நிறையப் பொன் சேர்ந்தது.

ஒருநாள், திடீரென்று அவர் எங்கோ மறைந்துவிட்டார். மக்கள் அவரையும் கிளியையும் தேடிப் பார்த்தார்கள். அகப்படவில்லை.

அப்போது, அங்கே வந்த வாழைப்பழச்சாமி என்பவன், 'மிளகாய்ப் பழச்சாமி பொற்குடத்துடன் மேக மண்டலத்துக்குள் புகுந்ததை நான் என் கண்களால் பார்த்தேன். நான்தான் அவரை வழியனுப்பி வைத்தேன்' என்று கதை கட்டிவிட்டான். எல்லாரும் அதை நம்பிவிட்டனர்.

பிறகு, அந்த மடத்தை வாழைப்பழச்சாமியிடம் ஒப்படைத்தனர். அவன் ஒரு நாளுக்கு இருபது வாழைப்பழம் தின்று, ஒரு மிடறு தண்ணீர் குடிப்பான். அவனும் ஒரு கிளி வளர்த்துவந்தான்.

ஒருநாள் திடீரென்று மிளகாய்ப்பழச்சாமி தன் கிளியுடன் மடத்திற்குள் வந்துவிட்டார். இரண்டு சாமிகளுக்கும் குத்துச் சண்டை நடந்தது. கிளிகளும் ஒன்றையொன்று 'சங்கா, மங்கா' என்று திட்டிக் கொண்டன.

கூட்டம் கூடிவிட்டது. இருவரையும் சேவகர் பிடித்துச் சென்று நீதி மன்றத்தில் நிறுத்தினர்கள். வாழைப்பழச்சாமியை ஊரைவிட்டுத் துரத்தும் படியும், மிளகாய்ப்பழச்சாமியை மடத்தைக் கவனித்துக் கொள்ளும்படியும் தீர்ப்பு வழங்கப்பட்டது.



கவிராயரும் கொல்லரும்

ஐரோப்பாவிலே மிகுந்த புகழ் பெற்ற ஒரு கவிராயர் ஒரு கொல்லன் பட்டறை வழியாகப் போய்க் கொண்டிருந்தார்.

அப்போது, பாட்டுச் சத்தம் கேட்டது. பட்டறையிலிருந்த கொல்லன் ஒரு பாட்டைப் பாடிக் கொண்டிருந்தான். அந்தப் பாட்டு, அந்தக் கவிராயர் எழுதிய பாடலேதான். ஆனால் அப்பாடலை அவன் மனம் போனபடி மாற்றியும், சிதைத்தும் பாடிக் கொண்டிருந்தான். அதைக் கேட்ட கவிராயருக்குக் கோபம் வந்துவிட்டது.

உடனே பட்டறைக்குள் கவிராயர் சென்று, அங்கிருந்த சாமான்களையும், கருவிகளையும் தாறுமாறாக மாற்றி வைத்துக் குழப்பம் செய்தார்.

"யாரடா நீ, என் சாமான்களை ஏன் இப்படி தாறுமாறாகக் கலைத்து வைக்கிறாய்?" என்று கோபமாகக் கேட்டான் கொல்லன்.


"உன் சாமான்களைக் கலைத்து வைத்ததும் உனக்குக் கோபம் வருகிறதல்லவா? அப்படித்தான், நான் எழுதிய பாடலை நீ தாறுமாறாகச் சிதைத்துப் பாடியதும் எனக்குக் கோபம் வந்துவிட்டது. இனிமேல் நீ சரியாகப் படித்துக் கொள்ளாமல், ஒருவருடைய பாட்டைக் கொலை செய்யாதே!" என்று கூறி விட்டுப் போனார், கவிராயர்!




புகைப்படம்: மு. கணேசன்.

லைசென்ஸ் வேணுமாம்;
ஹெல்மெட் வேணுமாம்;
நாங்கள் எப்படி ஓட்டுவது?

புகைப்படம்: பி. சுந்தரம்.





என் குழந்தைப் பருவம்

அவ்வை டி.கே. சண்முகம்

அவ்வை டி. கே. சண்முகம் அவர்கள் இந்த நூற்றாண்டின் இணையற்ற நாடகக் கலைஞர். 6 வயது முதல் 60 வயதுவரை நீண்ட நெடுங்காலம் நடிகராகப் புகழ் பெற்றவர். வெவ்வேறு தலைப்புக்களில் அமைந்த 74 நாடகங்களில் 109 குணச்சித்திரப் பாத்திரங்களை ஏற்று நடித்தவர். இளம் வயதிலேயே அவ்வை மூதாட்டியாக அற்புதமாக நடித்து, அவ்வை சண்முகம் என்ற பட்டப் பெயர் பெற்றவர். சிறந்த நாடக இயக்குநர், தரமான நாடகத் தயாரிப்பாளர், இனிய பாடகர், கச்சிதமான பேச்சாளர், பண்பட்ட எழுத்தாளர். அவரது சிரித்த முகமும், கணீரென்ற குரலும் மறக்க முடியாதவை!

குழந்தைகளுக்காகவே 'அப்பாவின் ஆசை', 'பலாப் பழம்' போன்ற நாடகங்களைத் தயாரித்தவர். மேனகா முதல் கப்பலோட்டிய தமிழன்வரை பல திரைப்படங்களிலும் நடித்துப் புகழ் பெற்றவர். முத்தமிழ்க் கலா வித்வ ரத்னம், பத்மஸ்ரீ, கலைமாமணி, நாடகத் தொல்காப்பியர் முதலான பல சிறப்புப் பட்டங்களைப் பெற்றவர். இவர் தமது 61—வது வயதில் 15.2.1973ல் காலமானார்.

எனது குழந்தைப் பருவம் எனக்கு மிக நன்றாக நினைவிருக்கிறது.

இப்போது கன்னியாகுமரி மாவட்டம் என்று அழைக்கப்படும் நாஞ்சில் நாடுதான் எங்கள் குடும்பத்தாரின் பரம்பரையான மாவட்டம்.

ஆயினும் நான் திருவனந்தபுரத்தில் தான் பிறந்தேன். என் தந்தையின் பெயர் டி. எஸ். கண்ணுசாமி பிள்ளை; தாயார் சீதையம்மாள்.

என் தந்தைக்கு ஆண் மக்கள் நால்வர். நான் மூன்றாவது மகன். டி.கே. சங்கரன், டி. கே. முத்துசாமி இருவரும் எனக்கு மூத்தவர்கள். டி.கே. பகவதி என் தம்பி. பிற்காலத்தில் எங்களை நாடக நால்வர் என்று மக்கள் போற்றினார்கள்.





என் தந்தையாரும் ஒரு நடிகர் பெண் வேடம் ஏற்று நடிப்பதில் புகழ் பெற்றவர். பின்னணி இசை பாடுவதிலும் வல்லவர்.

அந்தக் காலத்தில் மிகவும் பெருமை வாய்ந்த வள்ளி வைத்தியநாதையர், அல்லி பரமேசுவரய்யர் ஆகியோர் நடத்தி வந்த நாடகக் கம்பெனியில் என் தந்தையார் நீண்ட காலம் நடிகராகப் பணியாற்றினார்.

பல நாடகக் கம்பெனிகளின் கூடாரமாக விளங்கியது மதுரை மாநகரம். எல்லா நாடகக் கம்பெனிகளும் தங்கள் பெயருடன் மதுரை என்ற பெயரைச் சேர்த்துக் கொண்டு பெருமைப்படுவது வழக்கம்.

என் தந்தையாரும் மதுரையை இருப்பிடமாகக் கொண்டார்.

நாடகக் குழுவில் சேர்ந்தோம்

அந்தச் சமயம் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளை ஆசிரியராகக் கொண்டு ஒரு நாடகக் குழு தொடங்கியது. எல்லா நடிகர்களும் இளம் சிறுவர்களாகவே இருந்தனர். அந்தக் குழுவின் பெயர் மதுரை தத்துவ மீனலோசனி வித்துவ பால சபா.

சங்கரதாஸ் சுவாமிகள் தூத்துக்குடியைச் சேர்ந்தவர். மிகச் சிறந்த புலவர். அற்புதமான பாடல்களையும் உரையாடல்களையும் கொண்ட பல நாடகங்களை இயற்றியவர். இசை ஞானமும் உடையவர்.

எல்லா நாடகக் கம்பெனிகளும், நடிகர்களும் சங்கரதாஸ் சுவாமிகளை குருவாகவே மதித்தார்கள்.

நடிப்பும் படிப்பும்

நாங்கள் நால்வரும் அழகான இளஞ் சிறுவர்களாக இருந்தோம். ஆதலால் சுவாமிகள் எங்களை அவரது நாடகக் கம்பெனியில் நடிகர்களாகச் சேர்த்துக் கொண்டார்.

எங்கள் படிப்பு வீணாகுமே என்று என் தந்தை கவலைப்பட்டார்.

''கவலைப்படாதே! கண்ணுசாமி! உன் குழந்தைகளுக்கு நானே படிப்பும் சொல்லிக் கொடுக்கிறேன்'' என்று சுவாமிகள் வாக்குறுதி அளித்தார். எங்கள் மீது அவருக்கு அவ்வளவு பாசம்.

ஆகையினால் எங்களுக்கு நடிப்பும் படிப்பும் கற்றுக் கொடுத்த ஆசான் சங்கரதாஸ் சுவாமிகளே.

அந்தக் காலத்தில் மதுரையில் அம்மன் சந்நிதியை அடுத்த சோற்றுக் கடைத் தெருவில் நாங்கள் குடியிருந்தோம்.

பள்ளிப் படிப்பையும் புறக்கணிக்க விரும்பாமல், தெற்குச் சித்திரை வீதியில் உள்ள வெள்ளியம்பலம் கலாசாலையில் ஆரம்பக் கல்வியும் நான் பெற்றேன்.

1918—ல் தத்துவ மீனலோசனி வித்துவ பால சபையின் நாடகங்கள் மதுரையில் ஆரம்பமாயின.

அப்போது பெரிய அண்ணாவுக்குப் பத்து ரூபாய் மாதச் சம்பளம். சின்ன அண்ணா முத்துசாமிக்கு எட்டு ரூபாய். ஆனால் எனக்குப் பதினைந்து ரூபாய் சம்பளம்.

நாரதர் வேடம்

நடிகர்கள் அனைவரிலும் நான்தான் மிகவும் சிறியவன். ஆதலால் சுவாமிகளுக்குநான் செல்லப்பிள்ளை. எனக்கு முக்கிய வேடம் கொடுத்தார்.

முதன்முதலாகசத்தியவான்சாவித்திரி நாடகத்தில் எனக்கு நாரதர் வேடம் கொடுக்கப்பட்டது. அந்தச் சமயம்சீமந்தனி, சதி அநுசூயா, சுலோசனைசதி, பார்வதி கல்யாணம் எல்லா நாடகங்களிலும் நான்தான் நாரதர்.

ஆதலால், மற்றச் சிறுவர்கள் என்னைப் பார்த்து, "நாரதா! கலகப் பிரியா!" என்று பெயர் வைத்து நையாண்டி செய்வார்கள்.

அப்போது, சுவாமிகள், "நாரதர் கலகம் நன்மையில்தான் முடியும்" என்று விளக்கம் சொல்லி, என்னைத் தட்டிக் கொடுப்பார்.

மதுரை புட்டுத் தோப்பில் நாடகக் கம்பெனி வீட்டுக்கு எதிரே வைகை ஆறும், மணல்வெளியும் கண்கொள்ளாக் காட்சி.

மாலை நேரங்களில் வைகை ஆற்று மணலில் நாங்கள் "பலீஞ் சடுகுடு" விளையாடுவோம்.

நான் எந்தப் பாடத்தையும் மிகவும் விரைவாக மனப்பாடம் செய்துவிடுவேன். ஆதலால், நான் சுவாமிகளிடம் அடி வாங்கியதே இல்லை. ஆனால் மற்றச் சிறுவர்கள் பாடம் சொல்லத் தெரியாமல் சுவாமிகளிடம் அடிபடுவதைப் பார்த்து மிகவும்வருந்துவேன்.

பாடி நடித்தேன்

மதுரை மேல மாசி வீதியில் சின்னத் தகரக் கொட்டகை என்பதில் (இப்போது சந்திரா டாக்கீஸ் உள்ள இடம்) நான் முதன்முதல் நாரதராக நடித்த போது, எனக்கு பவுடர் தரித்து வேடம் போட்டுவிட்டவர் யார் தெரியுமா? புகழ் பெற்ற நகைச்சுவை நடிகர் சி. எஸ். சாமண்ணு ஐயர்.

"சரிகம பதநி யாம்
எழுசுர நிலை லய
சங்கீத சுகமே
பெரிய சுகம்."

என்ற சுவாமிகளின் பாடலைத் தாளம் போட்டுப் பாடிக் கொண்டு, ஆடிய வண்ணம் நான் மேடையில் தோன்றிய அநுபவத்தை என்றும் மறக்க முடியவில்லை.

எமனுடன் தர்க்கம்

எமதர்மனோடு நாரதர் வாதாடும் கட்டத்தில் எமன் சூலாயுதத்துடன் என்னை நோக்கி நெருங்கி வந்து,

"எட்டி நில்லும் நாரதரே!" என்று அட்டகாசமாகப் பாடினார்.

நான் உண்மையாகவே பயந்து போய் மேடைக்குள் ஓடிவிட்டேன். சபையோர் சிரித்துவிட்டனர்.

உடனே சுவாமிகள் என்னிடம், "அடே! சண்முகம்! பயப்படாதே! இவன் உண்மையான எமன் இல்லை. நம்ம கந்தசாமிதானடா! எல்லாம் வெறும் நடிப்பு என்பதை மறந்து விடாதே!"

என்று தைரியம் சொல்லி மீண்டும் மேடைக்கு அனுப்பினார்.

நானும் துணிச்சலாக எமனுக்குப் பதில் பாட்டுப் பாடி, சபையோரின்







கைதட்டுதலைப் பெற்றுவிட்டேன்!

ஸ்ரீ பால கிருஷ்ணன், பிரகலாதன், துருவன், புலந்திரன் முதலான முக்கிய வேடங்க்ளில் எல்லாம் எனக்கு சுவாமிகள் நல்ல பெயர் வாங்கிக் கொடுத்தார்.

எனக்காகவே ஒரு நாடகம்

என் திறமை முழுவதும் வெளிப்படும்படியான கதாநாயகச் சிறுவனாக நான் நடிப்பதற்கு ஏற்ற நாடகத்தை எனக்காகவே எழுத வேண்டுமென்று சுவாமிகள் விரும்பினார்.

அபிமன்யு சுந்தரி கதை எனக்கு மிகவும் பொருத்தம் என்று முடிவு செய்தார்.

இரவு சாப்பாட்டுக்குப் பின் ஓர் அரிக்கன் விளக்கை வைத்துக் கொண்டு, நாடகம் எழுத ஆரம்பித்தார்.

மறுநாள் பொழுது விடிந்தது, நாங்கள் எழுந்தபோது, சுவாமிகள் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார். அவருடைய படுக்கை அருகே, அவர் எழுதிய கையெழுத்துப் பிரதிகளைப் பார்த்தோம். அபிமன்யு நாடகம் மங்களப் பாட்டுடன் எழுதி முடிக்கப் பெற்றிருந்தது கண்டோம். வியப்பு எய்தினோம்.

ஒரே இரவிற்குள் ஒரு நாடகம் முழுவதையும் ஏராளமான பாடல்களுடன் எழுதி முடித்த சங்கரதாஸ் சுவாமிகளின் அற்புதச் சாதனையை எல்லோரும் பாராட்டினார்கள். அவரை ''அருட்பெரும் புலவர்'' என்று போற்றினார்கள்.

பின்னர், சுவாமிகள் என்னைப் பார்த்து, ''அடே, சின்னப் பயலே! இந்த அபிமன்யு நாடகம் உனக்காகவே தான் எழுதப் பெற்றது'' என்று என் முதுகிலே தட்டிக்கொடுத்தார். அந்தப் பாராட்டின் பயனாகத்தான் என் நாடக வெற்றிகள் அமைந்தன என்று மனப்பூர்வமாக நம்புகிறேன்.

விளம்பரப் புதுமை

விருதுநகருக்கு அருகில் உள்ள மல்லாங் கிணறு என்ற சிற்றூரில் எங்கள் நாடகம் நடந்தபோது பெரிய விளம்பரம் எதுவும் செய்யவில்லை.

விளம்பரம் இல்லாமல் மக்கள் எப்படி நாடகத்திற்கு வருவார்கள் என்று நிர்வாகிகளுக்குக் கவலையாக இருந்தது.

அந்த ஊரில் இரவு 7.30 மணிக்கு மேல் மூன்று முறை காதைத் துளைக்கும் படியான வேட்டுகள் போட்டார்கள். அந்த வெடிச் சத்தம் பல மைல் தூரம் பக்கத்து ஊர்களுக்குக் கேட்குமாம்.

இரவு 9 மணிக்கு மேல் 10 மணிக்குள் நாலா பக்கங்களில் இருந்தும், இரட்டை மாட்டு வண்டிகளிலும், கால் நடையாகவும் ஏராளமான மக்கள் வந்து கூடிய அதிசயத்தைக் கண்டோம்.

திறந்த வெளி அரங்கில் இரவு பத்தரை மணிக்கு நாடகம் தொடங்கும். நான்கு 'கியாஸ்' லைட்டுகள் வெளிச்சத்திலேயே நாடகம் நடக்கும். ஒலி பெருக்கி எல்லாம் கிடையாது.

நடிகர்கள் உரத்த குரலில் அழுத்தமாகப் பேசி நடிப்பார்கள்.

அதையெல்லாம் நினைத்துப் பார்க்கும்போது எனக்கு ஓர் உண்மை தெரிகிறது. மின்சார வெளிச்சம் வந்தபின். நம் கண்பார்வைக்கு இருந்த வலிமை போய்விட்டது, ஒலி பெருக்கி வந்த பின் அதைக் கேட்டுக் கேட்டு நம் செவிகளின் வலிமையும் குறைந்துவிட்டது!

பற்பல சிற்றூர்களிலும், நகரங்களிலும், நாடகம் நடத்திவிட்டு, நாடகக் கம்பெனி 1921—ல் சென்னைக்கு வந்தது. அப்போது எனக்கு ஒன்பது வயது.

டிராம் கார்

எழும்பூர் இரயில் நிலையத்தில் இறங்கி கிராண்ட் தியேட்டருக்குக் காரில் அழைத்துச்செல்லப்பட்டோம். அந்தத் தியேட்டர்தான் இப்போதைய முருகன் டாக்கீஸ்.

அப்போது சாலைகளில் டிராம் வண்டிகளைப் பார்த்து அதிசயித்தேன். தெருவில் போகும் இரயில் வண்டி என்றே நம்பினேன். ஆனால் இது மின் சாரத்தால் ஓடும் 'டிராம் கார்' என்று என் தந்தை விளக்கம் கூறியபோதும் வியப்பாகவே இருந்தது. இப்போது சென்னையில் டிராம் கார் இல்லை.

மனிதர்கள் இழுக்கும் ரிக்ஷா வண்டிகளை முதன் முதலாகச் சென்னையில்தான் பார்த்தேன். சிறுவனாகிய எனக்கு அந்தக் காட்சி மிகவும் கஷ்டமாக இருந்தது.

பாவலர் நாடக சபையில்

சென்னையில் தெ. பொ. கிருஷ்ணசாமிப் பாவலர் என்ற புகழ் பெற்ற நாடக ஆசிரியர் பால மனோகர சபை என்ற நாடகக் குழுவை நடத்தி வந்தார். அவருடைய நாடகங்கள் ராயல் தியேட்டரில் நடந்து வந்தன.

பாவலருடைய "கதரின் வெற்றி" என்ற தேசியப் புரட்சி நாடகத்தில், பத்து வயதிலேயே வக்கீல் வேடம் ஏற்று நடித்தேன். நாடகம் முழுவதும் கதர் பிரச்சாரமாகவே இருக்கும்.

நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் எழுதிய மனோகரா நாடகம் மிகவும் புகழ் பெற்றது.

அந்த நாடகத்தில் பத்து வயதுச் சிறுவனாகிய நான் 'மனோகரன்' என்னும் கதாநாயகனாகத் துடிப்புடன் நடிக்கும் பேறு பெற்றேன்.

எனது நடிப்பைப் பார்த்து மகிழ்ந்த நாடக ஆசிரியர் பம்மல் சம்பந்த முதலியார்,

"இதோ ஒரு உத்தம நடிகர் தோன்றி விட்டார். மாஸ்டர் சண்முகத்தின் நடிப்பு என்னைப் பரவசப்படுத்திவிட்டது. இந்தச் சின்ன வயதில் இவ்வளவு திறமையா?"

என்று பாராட்டியதுடன் தங்கப் பதக்கமும் பரிசு கொடுத்தார்.



பின்னர் உலகப் புகழ் பெற்ற அறிஞர் சர். சி. பி. இராமசாமி ஐயரும் என் நடிப்பை வியந்து, தங்கப் பதக்கம் பரிசளித்தார்.

இப்படி ஏராளமான பரிசுகளையும், பாராட்டுக்களையும் என் குழந்தைப் பருவத்திலேயே, அதாவது பத்து வயதுக்குள்ளேயே, நான் பெற்றேன் என்றால் அந்தப் பெருமையெல்லாம் என்னை நடிகனாக ஆளாக்கிய குருநாதர் சங்கரதாஸ் சுவாமிகளுக்கே உரியவையாகும்.


1922 நவம்பர் 13—ல் சங்கரதாஸ் சுவாமிகள் புதுச்சேரியில் காலமானார்.

என் குருநாதரான அந்த நாடக மேதையை என் சிறு வயதிலேயே இழந்த நான், அவரை எண்ணி எண்ணிப் போற்றாத நாளே இல்லை. இளம் வயதில் எனக்கு இருந்த குருபக்தி காரணமாகவே, பிற்காலத்தில் கலைத் துறையில் மிகப் பெரிய வெற்றி பெற முடிந்தது என்பதில் ஐயமில்லை.

தொகுத்து எழுதியவர்:

'கலைமாமணி' புத்தனேரி
சுப்பிரமணியம்

அட்டை வண்ணப்படம்:
ஏ.வி.பாஸ்கர்



அயோத்தி என்றொரு ராஜ்ஜியமாம்

செப்டம்பர் இதழில், 'கேளுங்கள்; சொல்லுகிறோம்' பகுதியில், கீழ்க் கண்டவாறு ஒரு கேள்வியும், பதிலும் அத்துடன் ஒரு வேண்டுகோளும் வெளி வந்திருந்தன:

'அயோத்தி என்றொரு ராஜ்ஜியமாம்,
அதனைத் தசரதர் ஆண்டனராம்.'

என்றபாடல் எந்தப் புத்தகத்தில் உள்ளது? முழுப் பாடலையும் சொல்ல முடியுமா?'

'அவர்க்கு மூன்று மனைவியராம்' என்று மேலும் ஒரு வரிதான் நினைவுக்கு வருகிறது. முழுப் பாட்டும் தெரியவில்லையே! எந்தப் புத்தகத்தில் இருக்கிறது என்பதும் தெரியவில்லை.(யாருக்காவது தெரிந்தால், தயவு செய்து தெரிவியுங்கள். இதையே எங்களது வேண்டுகோளாக வைத்துக் கொள்ளுங்கள்)

எங்கள் வேண்டுகோளை மதித்து சுமார் 40 பேர் அந்தப் பாடலின் பின் பகுதியை அன்புடன் சிரமம் பாராமல் எழுதி அனுப்பியிருக்கிறார்கள். அந்தப் பாடல், 1930—ஆம் ஆண்டு மதுரை மாவட்டத் தொடக்கப் பள்ளிப் பாடப் புத்தகத்தில் இடம் பெற்றிருந்ததாகவும் இராமர் காட்டுக்குப் போனதைத்தான் அந்தப் பாடலில் கூறப்பட்டிருந்ததாகவும் இருவர் தெரிவித்திருக்கிறார்கள். 'கேலி செய்தால் கேடு வரும்' என்ற நீதியை எடுத்துக் கூறுவதற்காகவே அந்தப் பகுதியை மட்டும் பாடப் புத்தகத்தில் தந்திருக்கிறார்கள் போலும்!

வாசகர்கள் எழுதி அனுப்பிய பாடல் இதுதான்:

அயோத்தி என்றொரு ராஜ்ஜியமாம்
அதனைத் தசரதர் ஆண்டனராம்.

அவர்க்கு மூன்று மனைவியராம்
அருமைப் புத்திரர் நால்வர்களாம்.

நால்வரில் கௌசலை மகன்ராமன்
நலமுள்ள கைகேயி மகன்பரதன்

நற்குண சுமித்தி ரையின்புதல்வர்
நயலக் குமணன், சத்துருக்கன்.

இவர்களில் ராமன் மூத்தவனும்
எல்லா வித்தையும் கற்றவனும்

இசைபெறு கிறவில் வித்தையிலே
இளையவர்களில்இவன் வலியவனும்

அரண்மனை பின்புறச் சோலையிலே
அம்பெய்து விளையாடையிலே

அங்கொரு கிழவியும் வருவாளாம்
அவள்பெயர் கூனி மந்தரையாம்

விளையாட் டாய்அவள் மேல்ராமன்
வில்லுண் டையினால் அடிப்பானும்.

விசனத் துடன்அடம் அவன்மீது
வெகுநாள் மனத்தினில் வைத்தாளாம்

பட்டாபி ஷேகம் நடத்துதற்குப்
பகர்ந்தார் தசரதர் ராமனுக்கு

பரபரப் புடன்கூனி சென்றனளாம்
பாவி கைகேயிமுன் நின்றனளாம்.

அடவிக்கு ராமனைத் துரத்திடவும்
அயோத்தியை பரதன் ஆண்டிடவும்

திடவரம் தசரத ரிடம்பெறவே
திருப்பினாள் கைகேயி மனமுறவே

அவ்வித மேகைகேயி வரம்
அடைந்தாள் தசரத ராஜனிடம்.

ஒவ்வாக் காட்டுக்கு ராமனையே
ஓட்டினாள் பொல்லாக் கைகேயி

காட்டில் திரிந்த ராமனுமே
கஷ்டப் பட்டான் பலதினமே

கேட்மின் இக்கதை பாலர்களே,
கேலிசெய் யாதீர் சிலர்களே!



இப்பாடலை எழுதியவர் யார்? இப்பாடலை வெளியிட்ட பதிப்பகம் எது? இப்பாடல் இடம் பெற்ற புத்தகத்தின் பெயர் என்ன? இதற்கு மேலும் இந்தப் பாடல் தொடருகிறதா?—போன்ற விவரங்கள் பாடல் அனுப்பியவர்கள் யாருக்குமே தெரியவில்லை.

பாடலை அனுப்பிய பெரியவர்களில் சிலர், சிறு வயதில் தாங்கள் படித்ததை நினைவில் வைத்து எழுதியதாகவும், பாடலை அனுப்பிய சிறுவர், சிறுமியர் அனைவருமே, தங்களுடைய பாட்டி, அம்மா, அப்பா, மாமா போன்றவர்கள் சொல்லக் கேட்டு எழுதியதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இவர்களுக்கெல்லாம் எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை. இவர்களின் பெயர்களையும் ஊர்களையும் வெளியிடுவதன் மூலம் எங்களின் மனமார்ந்த நன்றியை ஓரளவாவது தெரிவித்துக் கொள்ளலாம் என்று நினைத்தோம். அதன்படி, கீழே தந்துள்ளோம்.

டி. அன்னம், நாமக்கல்; என். லக்ஷ்மி, தேவகோட்டை; ஆர். பார்வதம், சென்னை—33.; கே. சிவசுப்பிரமணியன், சென்னை—6.; ஆர். கிரிஜா, ஆண்டநல்லூர்; டி. மேரி, சென்னை—24; ஆ. திருவாசகம், திருச்சி—18; டி. எம். சாரதாம்பாள், கீழ்வேளூர்; எஸ். ஏ. ராதா, கோவில்பட்டி; ஆர். காயத்ரி, தடுத்தாள்க்கொண்டபுரம்; கொ. மா. கோ. இளங்கோ, இராஜபாளையம்; ச. சாந்தி, லால்குடி; ச. கோமதி, குன்னுவாரன்கோட்டை; ஜெ. மாதவன், உமையாள்புரம்; ஜி. என். ராமஸ்வாமி, பல்லாவரம்; எஸ். ராஜன், பேரிலோவன்பட்டி; கே. ஸ்ரீகாந்த், நாமக்கல்; சு. முத்தம்மாள், வள்ளியூர்; எஸ். தர்மாம்பாள், திருச்சி—1; டி. ஜோதி சுப்பிரமணியன், கோவை—2; ராதிகா ஜயராமன், கல்கத்தா—29; சி. குருவம்மாள், அயன் குருவித்துரை; எஸ். ஜானகி அம்மாள், பெரியகுளம்; பி. ஆர். சிவகுமார், பலவான்குடி; என். வி. சசிரேகா, நரசீபுரம்; இராம சேதுராமன், இடையூர்; எம். அம்சபுவனு, எம். சிவப்ரியா, எம். ஹேமலதா, தஞ்சாவூர்—7; எஸ். கணேஷ், தி. கண்ணம்மாள், சென்னை—28; ஆர். ஸ்ரீவித்யா, மோகனூர்; ஜெ. கிருத்திகா, மேட்டூர்டாம்; பானுமதி, சுமதி, சென்னை—17;, எஸ். செந்தில் அழகப்பன், மதுரை—16; செந்தில் சிங்காரம், ரமா ராஜி, சென்னை—1; எஸ். ஸி. ரம்யா ரங்கநாதன், சென்னை—33; பா. லோகேஸ்வரி, மாதிரி மங்கலம்; ஆர். மகாவிஷ்ணு, புதுப்பாளையம்.

— ஆசிரியர்.

கேளுங்கள் சொல்கிறோம்

* கேரம் எந்த நாட்டு விளையாட்டு?

—ஆர். வேதவல்லி, ஆம்பூர்.

கேரம் பிரெஞ்சு நாட்டிலிருந்துதான் வந்தது என்று கூறுகிறார்கள். பிரெஞ்சு மொழியில் 'கேரம்' என்றால், 'அடித்துத் துள்ளச் செய்தல்' என்று பொருள். இந்த ஆட்டத்தை 1926—ல் பம்பாயில் முதல் முதலாக ஆடினார்கள். அதுமுதல் இந்தியா முழுவதும் பரவிவிட்டது.



* மகாகவி பாரதியார் யானை மிதித்ததால் இறந்தார் என்கிறார்கள் சிலர். நோய்வாய்ப்பட்டு இறந்தார் என்கிறார்கள் சிலர். இவற்றில் எது உண்மை?

—ந. பிரகாஷ், கோவை.

பாரதியார் யானை மிதித்ததால் இறக்கவில்லை. திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் யானை மதம் பிடித்ததால், அவரை அடையாளம் தெரியாமல் கீழே தள்ளிவிட்டது. சில நாட்களில் அவர் குணமடைந்துவிட்டார். இரண்டு மாதங்கள் சென்று, அவருக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டது. அதில் காலமாகிவிட்டார்.

* "டேய், அதோ பாரடா வெள்ளைக் காக்காய் என்று என் நண்பன் கூறினான். அண்ணாந்து பார்த்தேன். கறுப்புக் காக்கைதான் பறந்து கொண்டிருந்தது. வெள்ளை நிறத்தில் கூடக் காக்கை இருக்கிறதா?

—பி. வேலுசாமி, ஆலங்குடி.

ஓ, இருக்கிறதே! வெள்ளைக் காக்கை, வெள்ளை மயில், வெள்ளை ஒட்டகச் சிவிங்கி, வெள்ளை அணில் — இப்படி வெள்ளை நிறத்தில் உள்ள உயிரினங்களை அபூர்வமாகவே காணலாம். செடி கொடிகளில் கூட வெள்ளை நிறச் செடிகள் உண்டு. மனிதர்களில் கூட சிலர் அதிக வெள்ளையாக இருப்பதைப் பார்த்திருக்கலாம். அவர்களின் தலைமயிரும் வெள்ளையாக அல்லது செம்பட்டையாக இருக்கும்.

உடம்பில் மெல்லின் என்ற கறுப்பு நிறமுள்ள மிகச் சிறிய துகள் உண்டு. அது தான் உடலுக்கு நிறத்தைக் கொடுக்கிறது. அது இல்லாது போனால், நிறம் வெள்ளையாகிவிடும்.

* ஆகஸ்ட் இதழில் 'உலக அதிசயங்கள் ஏழில் பிரமிடுகள் தவிர மற்ற ஆறும் அழிந்துவிட்டன' என்று கூறியிருக்கிறீர்கள். தாஜ் மகால் போன்றவை அழிந்துவிட்டனவா?

—பொ. ரமேஷ், மயிலாடுதுறை.

தாஜ்மகால் அந்த ஏழு அதிசயங்களில் ஒன்றாகச் சேர்க்கப்படவில்லையே!

* முதல் முதலாகத் தேநீர் தயாரித்தவர் யார்?

—எம். பிரபாகரன், தாம்பரம்.

தேயிலையைப் பயிரிட்டு அதிலிருந்து முதல் முதலாகத் தேநீர் தயாரித்தவர்கள் சீனர்கள் தான். 1500 ஆண்டுகளுக்கு முன்பே அங்கு தேநீர் அருந்தும் வழக்கம் இருந்தது என்று கூறுகிறார்கள்.



* கல்கி கிருஷ்ணமூர்த்தியவர்கள் பிறந்த ஊர் எது?

—வே. குணாளன், சென்னை—28.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள புத்தமங்கலம் என்ற சிற்றூர்.



* 'பன்றி பல குட்டி போடும்' என்கிறார்களே, ஒரு தடவையில் அது எத்தனை குட்டிகள் போடும்? குட்டி கர்ப்பத்தில் எத்தனை மாதங்கள் இருக்கும்?

—வி. குமரேசன், கூளூர்ப்பேட்டை.

4 முதல் 10 குட்டிகள்வரை போடும். ஒரே தடவையில் 24 குட்டிகள் போட்ட பன்றிகளும் உண்டு. கர்ப்பத்தில் 16 வாரங்கள் இருக்கும்.

* பாரதியார் பாடல்களில் உங்களுக்குப் பிடித்தமான பாடல் எது?

—இ. கந்தசாமி, ஆயிரம்வேலி.

எல்லாப் பாடல்களுமே பிடித்தமானவை தான்; ஆயினும், பாரதியார் பாடிய பாடல்கள் அனைத்திலும் காணப்படும் உயர்ந்த கருத்துக்களைச் சுருக்கிக் கூறுவதுபோல் அமைந்த 'பாப்பாப் பாட்டு' மிகவும் பிடித்தமானது. அந்தப் பாட்டிலும்,

உயிர்களிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
உண்மை யென்று தானறிதல் வேணும்.
வயிரமுடைய நெஞ்சு வேணும்—இது
வாழும் முறைமையடி பாப்பா.

என்ற கடைசி நான்கு வரிகள் மிகமிகப் பிடித்தமானவை. (ஆனால், தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் வெளியிட்டுள்ள இரண்டாம் வகுப்புத் தமிழ்ப் பாடப் புத்தகத்தில் இந்த நான்கு வரிகளை நீக்கிவிட்டனர்!)

* மனைவியின் நினைவாக தாஜ்மகாலைக் கட்டினார் ஷாஜகான். அதுபோல், கணவனின் நினைவாக எந்த மனைவியாவது நினைவுச் சின்னம் ஏற்படுத்தியது உண்டா?

—பி. ராஜம், உதகமண்டலம்.

உண்டு. ஆசியா மைனரில் ஹலிகார்னைசஸ் என்ற நகரத்தில் ஒரு பெரிய கோயில் கட்டப்பட்டது. அதைக் கட்டியவர் ஆர்டெமிசியா என்ற அரசி. தன் கணவர் மாசலஸ் என்பவரின் நினைவாகக் கட்டினார். அது உலக அதிசயங்கள் ஏழில் ஒன்றாகக் கருதப்பட்டது. இப்போது இல்லை. அழிந்துவிட்டது.

* ஷேக்ஸ்பியர் சிறந்த நாடக ஆசிரியர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அவர் நடிகராகவும் இருந்தது உண்மையா?

— கே. சிவமணி, சென்னை—18.

உண்மைதான். அவர் சிறுவராயிருந்தபோது நாடகங்களில் சிறுசிறு வேடங்களில் தோன்றினார். பிறகு, அவரே நாடகங்களை எழுதத் தொடங்கினார். அந்த நாடகங்கள் மிக நன்றாக இருந்தன. மேடையிலே அவை நடிக்கப்பட்டன. சில நடிகர்களுடன் கூட்டுச் சேர்ந்து அவர் பல புதிய நாடகக் குழுக்களை நடத்தினார். நாளடைவில் அவரே ஒரு நாடகக் குழுவுக்குச் சொந்தக்காரராகி விட்டார்!

* அன்னை தெரசா, செயின்ட் தெரசா — இவர்கள் இருவரும் ஒருவரா?

—சி. லிங்கப்பன், விராலிமலை.

இல்லை. அன்னை தெரசா ஏழை எளிய மக்களுக்குத் தொண்டு செய்து தற்போது உலகப் புகழ் பெற்றுள்ளார். செயின்ட் தெரசா என்பவர் 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். ஸ்பானியப் பெண் துறவியான இவர், கன்னிமாடங்களைச் சீர்திருத்தி அமைத்தார். இவருடைய தொண்டினைப் பாராட்டி போப்பாண்டவர் இவரை செயின்டாக ஆக்கினார்.

* 'காவலர்' என்று சொல்லலாம் அல்லவா? ஆனாலும் அநேகர் 'போலீஸ்' என்ற ஆங்கிலச் சொல்லையே பயன்படுத்துகிறார்களே!

—ச. வேதவல்லி, மதுரை—6.



போலீஸ் என்பது ஆங்கிலச் சொல்லா? இல்லை! அது போலிஷியா (Politea) என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து வந்தது. அதன் பொருள்—ஆளுதல்.

* கடல் எல்லை என்கிறார்களே, அதை எப்படி நிர்ணயம் செய்கிறார்கள்??

—சி. என். சரஸ்வதி, வளவனூர்.

கடல் ஓரத்திலுள்ள அரசாங்கத்திற்கு, கடலில் மூன்று கடல்—மைல் தூரத்துக்கு உரிமை உண்டு. ஒரு கடல்—மைல் என்பது 6080 அடியாகும். அக்காலத்தில் பீரங்கிக் குண்டு அவ்வளவு தூரமே செல்லக் கூடியதாயிருந்தது. அதை வைத்து அப்படி எல்லை வகுத்தார்கள். இப்போது, பீரங்கிக் குண்டுகள் அந்த தூரத்தையும் தாண்டி வெகு தூரம் செல்கின்றன. இருந்தாலும், முன்பு வகுத்த எல்லையையே இப்போதும் வைத்திருக்கிறார்கள்.

*** திருவள்ளுவரின் ஊர் மதுரை என்று கூறுகிறார்களே, இது சரியா?**

—வ. விஜயகுமார், ஒசூர்.



சென்னையிலுள்ள மயிலாப்பூர்தான் திருவள்ளுவரின் ஊர் என்று தெரிகிறது. மதுரையிலும் இவர் வாழ்ந்ததாகச் சிலர் கூறுகிறார்கள். சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரைக்கு இவர் சென்று சிலகாலம் தங்கியிருக்கலாமல்லவா?

*** சென்னையில் பல தலைவர்கள் நடிகர்கள் பெயரால் நினைவு மண்டபங்கள் இருக்கின்றன. மகாகவி பாரதியார் பெயரில் எந்த மண்டபமும் இருப்பதாகத் தெரியவில்லையே!**

— சி. தனபால், சென்னை—18.

''பாரதி பெயரில் மண்டபம் எழுப்பும் முயற்சி அடுத்த ஆண்டு நிச்சயம் நிறைவேற்றப்படும்'' என்று இந்த ஆண்டு சென்னையில் நடந்த பாரதி விழாவில் பேசிய அமைச்சர் ஆர். எம். வீரப்பன் அவர்கள் உறுதி கூறியிருக்கிறார்.

*** பெங்குவின் பறவை ஏன் நம் பகுதிகளில் வாழ்வதில்லை?**

— பொன் கல்கிவாணன், கடத்தூர்.

தென் துருவத்திலும், ஆஸ்திரேலியா, தென் அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா முதலிய பகுதிகளில்தான் அதனால் வாழ முடியும். நம் தட்பவெப்ப நிலை அதற்கு ஒத்துக் கொள்ளாது.



*** கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் பாறையைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆசை. கூறுங்களேன்.**

—பி. மருதகாசி, மதுரை—3.

விவேகானந்தரின் குரு, இராமகிருஷ்ண பரமஹம்சர் என்பது தெரிந்திருக்கும். குருவின் உபதேசங்களைப் பரப்புவதற்காக விவேகானந்தர் இமய முதல் குமரி வரை நடந்தே பயணம் செய்தார். கன்னியாகுமரியை அடைந்ததும், அங்கு கடற்கரைக்குச் சிறிது தூரத்தில் இருந்த ஒரு பாறையைக் கண்டார். கடலில் தெரிந்த அந்தப் பாறையை நோக்கி நீந்திச் சென்றார். அதன் மீது அமர்ந்து, பாரதத் தாயை நினைத்து தியானம் செய்தார். அந்தப் பாறையின் மீது அழகிய மண்டபம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. மண்டபத்திற்குள் விவேகானந்தரின் வெண்கலச் சிலை இருக்கிறது. கரையிலிருந்து படகில் ஏறி அந்தப் பாறையை அடையலாம்.

*** கிரிக்கெட் எந்த நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது? அது இந்தியாவில் எந்த வருடத்தில் எந்த மாதத்தில் விளையாடப் பட்டது?**

—எஸ். ராம்ஜி, பண்ணுருட்டி.

கிரிக்கெட் இங்கிலாந்தில் தோன்றியது. இந்தியாவில் 18—ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆடப்பட்டது.

சித்திரப் புதிர்-9 விடை

1. கடல் பன்றி
2. 17 சதுரங்கள். 12 சதுரங்களுடன் நான்குநான்கு கட்டங்களைச் சேர்த்துப் பார்த்தால் மேலும் 5 சதுரங்கள் வரும்.
3. முந்திரிப் பழம்.
4. டோடோ
5. தாமஸ் ஆல்வா எடிசன் கண்டுபிடித்த ஒலிப்பதிவுக் கருவி—போனோகிராப்.

புதுமைப் போட்டி 4

முதல் பரிசு ரூ 50/—

இரண்டாம் பரிசு ரூ 25/—

டாக்டர் பூவண்ணன் எழுதிய 'ஒரு பூனை புலியாகிறது' தொடர்கதை இந்த இதழுடன் முற்றுப் பெறுகிறது.

இத்தொடர்கதையை மிகவும் ஆவலாகப் படித்து, நூற்றுக்கணக்கானவர்கள் அவ்வப் போது தங்கள் கருத்துக்களை எங்களுக்குத் தெரிவித்து வந்தார்கள்.

'கோகுலம்' படிக்கும் நீங்கள் அனைவருமே இத்தொடர்கதையைப் படித்திருப்பீர்கள். படித்ததை உங்களில் பலர் நன்றாக நினைவில் வைத்திருப்பீர்கள். தேவையானால் இப்போது மீண்டும் ஒரு முறை 12 அத்தியாயங்களையும் படித்துப் பாருங்கள்.


பிறகு, இக்கதையைப் பற்றி நீங்கள் ஒரு மதிப்புரை எழுதி அனுப்புங்கள். கோகுலத்தில் ஒரு பக்கத்தில் அடங்கும்படி உங்கள் மதிப்புரை இருக்கட்டும்.

மிகச் சிறந்த மதிப்புரைக்கு முதல் பரிசாக ரூ 50/—ம் அதற்கு அடுத்ததாகத் தேர்ந்தெடுக்கப்பெறும் மதிப்புரைக்கு ரூ 25/—ம் வழங்கப் பெறும்.

இப்போட்டியில் 15 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம். 'கோகுலம் சிறுவர் சங்க' உறுப்பினராக இருந்தால் பெயருக்குப் பக்கத்தில் உறுப்பினர் எண்ணைக் குறிப்பிடுவது நல்லது.

பரிசு பெறுவோரின் புகைப்படங்களும் கோகுலத்தில் இடம் பெறும்.

மதிப்புரை அனுப்ப, கடைசித் தேதி 30.11.85.



இனிப்புத் தீபாவளி

சுப்ர. பாலன்



புத்தம் புதுசாய் ஆடையுடன்
பூவாய்ச் சிரிக்கும் மத்தாப்பூ!
சத்தம் காதைத் துளைக்கிறதே!
சடசட என்றே வெடிக்கிறதே!
முத்துப் போலத் தின்பண்டம்.
முழுசாய்த் தின்ன முடிகிறதா?
நித்தம் இதுபோல் இருக்காதா?
நினைக்கும் போதே இனிக்காதா?

பள்ளிப் பாடம் மறந்தாச்சு!
பட்டாஸ் ஒன்றே குறியாச்சு!
அள்ளி அள்ளி வெடித்தாலும்
ஆசை நிறைய வளர்ந்தாச்சு!
புள்ளிப் பூக்கள் மத்தாப்பூ.
பொறி வாணத்துக் கம்பிப்பூ.
துள்ளிச் சுற்றும் சக்கரப்பூ
துளியும் அலுக்கா தெங்களுக்கு!

வட்டம் போடும் ஏரோப்ளேன்!
வானில் பாயும் ராக்கெட்டு!
சட்டைத் துணியும் பத்திரமாம்.
சீறும் வாணப் பொறிபடுமாம்!
எட்டிப் போகச் சொல்கின்றான்!
எங்கள் அம்மா பயப்படுவாள்!
கட்டித் தம்பி கேட்பானோ?
சுற்றித் தாவிக் குதிக்கின்றான்!



சித்தரஞ்சன்

நம் தேச விடுதலைக்குப் பாடுபட்ட பெரிய தலைவர்களில் ஒருவர் தேச பந்து சித்தரஞ்சன் தாஸ். இவர் இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்று, தாம் பிறந்த நகராகிய கல்கத்தாவில் வக்கீல் தொழில் நடத்தி வந்தார்.

அப்போது, அரவிந்தகோஷ் மீது ஆங்கில அரசாங்கம் ஒரு வழக்குத் தொடுத்தது. இவர் அரவிந்தருக்காக நீதிமன்றத்தில் மிகவும் திறமையாக வாதாடி, அரசாங்கம் தொடுத்த வழக்கைத் தோற்கடித்தார். அன்று முதல் இவர் புகழ் ஓங்கியது.

காந்திஜீ ஒத்துழையாமை இயக்கம் தொடங்கியதும், இவர் அந்த இயக்கத்தில் சேர்ந்தார். ஏராளமான வருமானம் கிடைத்து வந்த வக்கீல் தொழிலை நிறுத்தி விட்டார். ஆனாலும், சுதந்திரப் போரில் ஈடுபட்ட தலைவர்கள் மீதும், தொண்டர்கள்மீதும்அரசாங்கம்வழக்குத் தொடுத்தால், தமது சொந்தச் செலவிலே இவர் வழக்கை நடத்துவார்.

கல்கத்தா நகரின் முதல் மேயராக விளங்கியவர் இவர்தான். அப்போதிருந்த வங்காள கவர்னர் இவருக்கு அமைச்சர் பதவி அளிக்க முன்வந்தார். ஆனால், இவர் மறுத்துவிட்டார்!

இவர் ஒரு பெரிய வள்ளலாகவும் விளங்கினார். ஏழை எளிய மக்களுக்குத் தாராளமாக வாரி வழங்குவார். அரண்மனை போன்றநம்முடைய பெரிய வீட்டை இவர் பொது மக்கள் நலனுக்காக எழுதி வைத்தார். அங்கு இப்போது 'சித்தரஞ்சன் சேவா சதனம்' என்ற பெயரில் பெண்களுக்கான மருத்துவமனை ஒன்று நடந்து வருகிறது.



இந்திராகாந்தி

தமக்கு ஆண் குழந்தை பிறக்கும்என்று ஆவலாகஎதிர்பார்த்தார் கமலா நேரு. ஆனால், பிறந்ததோ பெண் குழந்தை.

"கமலா, ஆண் குழந்தை பிறக்கவில்லையே என்று கவலைப்படாதே. இந்தப் பெண் குழந்தை ஆயிரம் ஆண் குழந்தைகளைக் காட்டிலும் மேன்மையுடன் விளங்குவாள்'' என்றார் அப்பா ஜவஹர்லால் நேரு.

அப்பா சொன்னது பலித்து விட்டது!

இந்திரா காந்தி, தமது 42 வது வயதில் அகில இந்திய காங்கிரஸின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். 49 வது வயதிலே பாரதத்தின் பிரதமரானார்!

'இவ்வளவு பெரிய நாட்டை ஒரு பெண்மணி எப்படித்தான் ஆளப் போகிறாளோ!' என்று பலர் சந்தேகப் பட்டனர். அவர்களெல்லாரும் மூக்கின்மேல் விரல் வைக்கும்படி மிகத் துணிச்சலாகப் பல்வேறு வழிகளில் பாரதத்திற்குப் பெருமை சேர்த்தார், இந்திராகாந்தி. 15 ஆண்டுகள் பாரதப் பிரதமராக விளங்கிய இவர், பல தேச மக்களின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்றார்.

இந்திரா சிறுமியாக இருந்த போது, சிறையிலிருந்த இவருடைய தந்தை நேரு தொடர்ந்து நூற்றுக்கணக்கான கடிதங்களை இவருக்கு எழுதி வந்தார். அவ்வாறு அவர் எழுதிவந்த ஒரு கடிதத்தில், 'வரலாறு படிப்பது நல்லது. வரலாற்றை உருவாக்குவது அதைவிட நல்லது' என்று எழுதியிருந்தார்.

தந்தை எழுதியபடி வரலாறு படைத்து, மாபெரும் தலைவி ஆனார், இந்திரா காந்தி.



ஒரு பூனை புலியாகிறது




டாக்டர் பூவண்ணன்

12. சிறுவர் செய்த சபதம்!



சேரனின் மடியில் வீற்றிருந்த டாலர் இன்னமும், சிறுவன் கையிலிருந்த ஜெம்ஸ் பாக்கெட்டையே பார்த்துக் கொண்டிருந்தது. சிறுவன் 'ஜெம்ஸ் பாக்கெட்டைக் கையால் கிழிப்பதற்கு முயன்று கொண்டிருந்தான். அந்தப் பிஞ்சுக் கை வழுக்கிச் சென்றதே தவிர, ஜெம்ஸ் பாக்கெட்டின் வாயைத் திறக்கவில்லை. பொறுமை இழந்த சிறுவன் பாக்கெட்டை இரண்டு கைகளாலும் பிடித்தான். அதன் ஒரு முனையைத் தன்

இங்கும் இப்படி நடந்தால்?



இங்கிலாந்திலுள்ள 'ஹைவை கூம்ப்' என்கிற நகரில் இப்போது ஒரு பழக்கம் உண்டு! அதாவது, ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தில் நகர மேயர், துணை மேயர், நகராட்சி ஊழியர், கவுன்சிலர்கள் இவர்களை எடை போடுவார்கள்! எதற்கு? எடைக்கு எடை ஏதாவது தரவா? அது நமது பழக்கம்! ஆனால் அவர்கள் எடை போடும் காரணம் வேறு! பொதுப் பணத்தில் வாழும் இவர்கள், எடை கூடியிருக்கிறார்களா என்று பார்க்கத்தான் இப்படி! அதாவது, தகாத முறையில் பணம்
சுட்டி, தொப்பை போடுகிறார்களா என்பதை அறியும் வழி!

நம் நாட்டிலும் இப்படி வைத்தால்?

தகவல்: 'சம்பத்குமாரி.'
ஆதாரம்: Illustrated Weekly"

வாயில் வைத்துப் பற்களால் கடித்தான், கடித்தபடி பாக்கெட்டை இழுத்தான்.

மறுநொடி, ஜெம்ஸ் பாக்கெட் கிழிந்து, உள்ளே இருந்த பல வண்ண ஜெம்ஸ் மிட்டாய்கள் மேடையில் அமைச்சர் நிற்கும் இடத்தில் விழுந்து தெறித்தன.

அதைக் கண்ட டாலர் ஜெம்ஸைப் போலச் சேகரனிடமிருந்து துள்ளி மேடைக்குத் தாவிச் சென்றது; ஒரே பாய்ச்சலில் அமைச்சரின் காலில் போய் மோதிக் கொண்டது.

சேகர் பொத்தானை அமுக்கிய அதே நேரத்தில்தான் டாலர் பாய்ந்தது. சேகரைக் காட்டிலும் அமைச்சருக்கு வெகு அருகே டாலர் இருந்ததால், சேகரின் காமிராத் துப்பாக்கி கக்கிய தோட்டா பாதி தூரத்தை அடையும் போதே, டாலர் அமைச்சரின் காலில் மோதிவிட்டது.

அமைச்சர் உடனே கீழே பார்த்தார்! அழகான காக்கர்ஸ்பானியல்! அமைச்சர் சட்டென்று குனிந்து டாலரை இரண்டு கையாலும் அள்ளி எடுத்துக் கொண்டு நிமிர்ந்தார்.

சேகர் செலுத்திய தோட்டா, அமைச்சர் குனிந்த கணத்திலே அவரைத் தாண்டிச் சென்று, அவருக்குப் பின்னே மேடையில் நின்றிருந்த சங்கத்து நிர்வாகி ஒருவரின் தோளில் பாய்ந்தது. அவர் "அம்மா" என்று அலறியபடி தோளைக் கையால் பிடித்துக் கொண்டார். அந்தக் கையையும் மீறி இரத்தம் வெளியே பாய்ந்தது.

இவ்வளவும் சுமார் கால் நிமிடத்தில் நடந்து முடிந்துவிட்டன.

கிழப் புகைப்படக்காரன் காமிராவின் பொத்தானை அழுத்தியதைப் பார்த்த கமிஷனர், அமைச்சர் குனிந்து நிமிர்ந்ததையும், அந்த நேரத்தில் பின்னே ஒருவர் அலறியதையும், அவர் தோளில் இரத்தம் பெருகுவதையும் கவனித்தார். அடுத்த நொடியில் அவர் புகைப்படக்காரன் மீது பாய்ந்து அவன் கையிலிருந்த காமிராவை ஒரு கையால் பறித்தபோதே, அனுபவமிக்க அவரது மற்றொரு கையால் இடையிலிருந்த துப்பாக்கியை எடுத்து அவன் முகத்துக்கு நேரே நீட்டி 'அசைந்தால் சுட்டு விடுவேன்' என்று எச்சரித்தார்.

'அம்மா' என்ற அலறலையும், கமிஷனரின் மின்னல் வேகப் பாய்ச்சலையும் கண்ட துணைக் கமிஷனரும், காவல் துறையினர் சிலரும் அவரருகே ஓடி வந்தனர்.

மேடையிலும் அரங்கிலும் இருந்த மக்கள் என்னமோ ஏதோ என்று பதறி எழ, அரங்கத்தில் ஒருவகையான குழப்பம் நிறைந்தது.

தன்னை நெருங்கிய துணைக் கமிஷனரிடம் "இதோ இவன்தான் கொலைக்கார சேகர்! நம் கண்ணில் மண்ணைத் தூவி, காமிராவையே சத்தம் போடாமல் சுடும் நவீன துப்பாக்கியாக்கிக் கொண்டுவந்திருக்கிறான். இந்தத்தாடி

மீசை பொய்!'' என்று கூறினார் கமிஷனர்.

துணைக் கமிஷனர் சேகரின் தாடியைப் பிடித்து இழுக்க, அது கையோடு வந்துவிட்டது!

இதற்குள் மற்றப் போலீஸ்காரர்களும் கமிஷனர் இருக்கும் இடத்தை நெருங்கினர்.

''இவனைக் கைது செய்து பத்திரமாக அழைத்துச் செல்லுங்கள்! நான் கைந்து பேர் தவிர, மற்ற போலீஸ்காரரையும் அழைத்துச் செல்லுங்கள். விழா தொடர்ந்து நடை பெறட்டும். நான் அமைச்சரிடம் பேசிவிட்டு வருகிறேன்.''

கமிஷனர் சொல்லிவிட்டு, தான் பறித்த காமிராவைத் துணைக் கமிஷனரிடம் கொடுத்தார். அவர், போலீஸ்காரர்கள் புடைசூழ, தேசத் துரோகி சேகரை அழைத்துச் சென்றார்.

அடுத்து, சேகரின் துப்பாக்கியால் அடிபட்ட சங்க நிர்வாகியைப் போலீஸ் காவலுடன் மருத்துவமனைக்கு உடனே அனுப்பினார், கமிஷனர்.

அமைச்சர் இன்னும் நின்று கொண்டே இருந்தார். அவர் கையில் டாலர் இருந்தது. அவரை எச்சரித்த காவல் அதிகாரியை எள்ளி நகையாடியதை எண்ணி வருந்திக் கொண்டு நின்றார். ..•

கமிஷனர் அமைச்சரிடம் சென்று, தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

''கமிஷனர்! இந்த நாய் என் உயிரைக் காப்பாற்றியது. இது யாருடைய நாய்?'' என்று கேட்டார், அமைச்சர்.

கமிஷனர் சேரனை அழைத்து அமைச்சருக்கு அறிமுகப்படுத்தினார்.

''நாய் இவன் அழைத்து வந்தது. உங்களையும் இந்த நாட்டையும் காக்க இந்தச் சிறுவன் பட்ட சிரமங்கள் பல! மாண்புமிகு அமைச்சரே, நீங்கள் ஒரு நிமிடம் உட்காருங்கள். நடந்தது என்ன என்பதைக் கூறிக் கூட்டத்தின் குழப்பத்தைப் போக்குகிறேன்.''

• கமிஷனர் சொன்னதும், அமைச்சர் உட்கார்ந்தார்.

கமிஷனர் ஒலிபெருக்கியின் முன் நின்று பேசினார். சேரனின் முயற்சிகளை விவரித்தார். அவன் கொண்டு வந்த நாய் தற்செயலாய் அமைச்சரைக் காப்பாற்றியதைக் கூறினார். இனி, விழா தொடர்ந்து நடைபெறும் என்று அறிவித்தார்.

அதன் பிறகு விழா நடந்தது. ஆனால் அது சேரனின் பாராட்டு விழாவாக அமைந்தது! அமைச்சர், ''வீரச் சிறுவருக்கான விருது சேரனுக்கு வழங்கப்படும்'' என்று அறிவித்தபோது, அரங்கம் கைதட்டலாய் அதிர்ந்தது.

விழா முடிந்தது. ஆனால் சேரனைப் பாராட்டுவது முடியவில்லை! பத்திரிகைக்காரர்கள், வானொலி நிலையத்தார் தொலைக்காட்சி நிறுவனத்தார் முதலிய அனைவரும் போட்டி போட்டுக் கொண்டு சேரனைப் பேட்டி கண்டனர். அவர்களிடமிருந்து சேரனை மீட்டுச் செல்வதே, கமிஷனருக்குப் பெரிய வேலையாயிற்று!

அன்று மாலைச் செய்தித் தாள்கள், சேரனின் வீர வரலாற்றை வெளியிட்டன! டாலரின் படமும் சேரனின் படமும் பிரசுரமாயின! வானொலிகள் சேரனின் தேச பக்தியைக் காவியம்

செயற்கை மண் எலும்பு



மேற்கு ஜெர்மனியில் உள்ள ஹம்பர்க் நகரைச் சேர்ந்த ஜோஹனஸ் ஷீஃப் ஒஸ்போர்ன் என்னும் அறுவை சிகிச்சை நிபுணர் களி மண்ணை எலும்பு வடிவத்தில் செய்து, சூளையில் வைத்துச் சுட்டு அதை மாற்று எலும்பாகப் பயன்படுத்த முனைந்துள்ளார். சிறு துவாரங்களைக் கொண்ட இந்த சுட்ட மண் துண்டுகளை மனித உடல் நிராகரிக்காது என்று அவர் சோதனையில் கண்டறிந்திருக்கின்றார். மனிதர்களுக்கான அறுவைசிகிச்சையில் இதைப் பயன்படுத்த அவர் திட்டமிட்டிருக்கிறார்.

நன்றி: தமிழ்நேசன்.

தகவல்: நீரை அத்திப் பூ.

போல் தந்தன! அன்று மாலையே இந்தியாவில் உள்ள எல்லாத் தொலைக் காட்சி நிலையங்களும், சேரனைப் பற்றிய சென்னை நிகழ்ச்சியை ஒளி பரப்பின.

சென்னையில் —

அண்ணா நகரில், தமது வீட்டு



கார்ந்திருந்த அறிஞர் — சேரன் பள்ளியில் வந்து பேசினரே அந்த சென்னை அறிஞர் தொலைக்காட்சியில் சேரன் தன் வரலாற்றைக் கூறுவதைக் கேட்டு மெய் சிலிர்த்தார். 'பூனையாய் இருந்த என்னைப்புலியாக்கித்தேசத்தொண்டு புரிய வைத்தது, அந்த அறிஞர் பேச்சு! அவர் அடுத்து விளக்கிய கென்னடியின் பொன்மொழி!' என்று தொலைக் காட்சியில் சேரன் கூறினன்.

கேட்ட அறிஞர், ''என் பேச்சு இப்படி ஒரு வீரச் சிறுவனை உருவாக்குகிறதா? இனிமேல் பணத்துக்காகவும், பாராட்டுக்காகவும் பெரியவர்களின் பெருங்கூட்டத்தில் போய் வெறுங் கூச்சல் போடமாட்டேன்! ஏடு தூக்கிப் பள்ளியில் பயிலும் இளம் சிறுவர்கள் கூடிய கூட்டத்தில்தான் பேசுவேன்! அங்கேதான் பல சேரன்கள் தோன்றுவார்கள்! தேசத்தைக் காப்பார்கள்!'' என்று உறுதி பூண்டார்.

கோவையில் —

விஜய், ஹாலின் சோபாவில் சாய்ந்துகொண்டுதொலைக்காட்சியில் தோன்றிய தன் நண்பன் சேரனையும், நாய் டாலரையும் பெருமிதத்தோடு பார்த்துக் கொண்டிருக்கிருன்.

''பூனையாய் இருந்த நான் புலியாக வேண்டும் என்று சொன்னவன், நண்பன் விஜய். அவன் உதவியால்தான் தேனியின் வேண்டுகோளை நிறைவேற்ற முடிந்தது. விஜய்யின் டாலர் தான் அமைச்சரைக் காப்பாற்றியது. அதனுல் எனக்குக் கிடைக்கும் பாராட்டில் பாதி விஜய்க்குச் சொந்தம்'' என்று சேரன் கூறுகிருன்.

விஜய்யின் மனம் மகிழ்கிறது! ''சேரா! உன்னைப் போல ஒரு நண்பனைப் பெற்றது, என் பாக்கியம்'' என்றுஅவன்வாய்முணுமுணுக்கிறது.

வேலூரில் —

லாங் பஜார் தெரு வழியாக, பாப்பா தன் அம்மாவுடன் நடந்து சென்று கொண்டிருந்தாள். அவள் பார்வை, ஒரு கடையில் பதிகிறது. உடனே, ''அம்மா! இங்கே பாரேன்! நம் வீட்டுக்கு வந்த அந்த அண்ணன், டி. வி.யில் தெரிகிருன்!'' என்று உற்சாகமாகக் கத்துகிருள்.

அது தொலைக் காட்சி விற்பனை நிலையம். அதனுல் கடையில் பல தொலைக் காட்சியில், கறுப்பிலும், கலரிலும் சேரன் காட்சியளித்துக் கொண்டிருந்தான். எதிரே இருந்தவர் செய்தித்துறை அமைச்சர், முதலமைச்சரின் சார்பாகசேரனைப்பாராட்டிக்கொண்டிருக்கும் காட்சி அது.

பாப்பா, தைரியமாக நாலடி எடுத்து வைத்துக் கடைக்குள் போகிருள். பாப்பாவின் அம்மாவும் தயக்கத்தோடு பின் தொடர்கிருள். இருவரும் தொலைக் காட்சியில் அமைச்சர் சேரனைப் பாராட்டுவதைக் கேட்டு பார்த்துப் பரவசப்படுகின்றனர்.

அமைச்சர் பாராட்டிய பிறகு, ''சேரா! உனக்கு எது வேண்டுமாலும் கேள்! எந்த உதவி வேண்டுமாலும் கேள்! அதை நிறைவேற்றித் தரும்படி முதலமைச்சர் கூறியிருக்கிருர்'' என்று சொல்கிருர்.

இப்போதுதிரையில்சேரனின் முழு உருவம் தெரிகிறது.

''எனக்கு எதுவும் வேண்டாங்க! எங்கப்பா ஏதோ சம்பாதிச்சு என்னைப் படிக்கவைக்கிருர். ஆனல்.... ஆனல்..

சேரன் தயங்குகிருன்.

''தயங்காதே சேரா! எது வேண்டுமானுலும் கேள்'' — அமைச்சர் சொல்கிருர்.

''கோவையிலிருந்து புறப்பட்ட நான் வேலூரை அடைந்தேன். வேலூரிலிருந்து சென்னைக்கு வர எனக்கு உதவி செய்தது பாப்பாவும் அவள் அம்மாவும்'' என்ற சேரன், பாப்பாவைச் சந்தித்த நிகழ்ச்சியையும், அவள் சேர்த்து வைத்த பணத்தைச் சந்தோஷமாகத் தனக்குக் கொடுத்ததையும் விளக்குகிருன்.

''ஐயா! இந்தப் பாப்பா படிக்க விரும்புகிருள். ஆனல் வறுமையால் அது முடியவில்லை. பாப்பா படிப்பதற்கு உதவி செய்ய முடியுமா?''

சேரன் கேட்டதும், அமைச்சர் இருந்த இடத்தை விட்டு எழுந்து வந்து அவனைத் தழுவிக் கொள்கிருர்.

''சேரா! நீ வீரன்! நீ தேச பக்தன்! அதோடு எளியவர்க்கு உதவ நினைக்கும் ஏழைப் பங்காளன்! இதுதான் எங்கள் அண்ணு வழி! பாப்பாவின் தாயாருக்கு அரசு அலுவலகத்தில் ஒரு வேலை தருகிறேம். அதோடு பாப்பா

வை ஒரு பள்ளியில் சேர்க்கிறோம்! அவள் படிப்புக்கான முழுச் செலவையும் அரசு ஏற்கும்! அதே போல நீ விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி உன்னுடைய படிப்புக்கான முழுச் செலவையும் அரசே ஏற்கும்."

அமைச்சர் கூறியதைக் கேட்ட பாப்பா ஆனந்தத்தோடு, ''அம்மா!'' என்று அன்னையின் பக்கம் திரும்புகிறாள். பாப்பாவின் அம்மா அவளை அன்போடு அணைத்துக் கொண்டு, ''உங்கப்பா செஞ்ச தர்மம் சேரன் உருவிலேவந்துஉதவியிருக்கு.பாப்பா, இனிமே நீ படிக்கலாம்! படிச்சு பெரிய டாக்டராகணும்!'' என்று கூறும் போதே, அவள் கண்கள் ஆனந்தக் கண்ணீரைச் சொரிகின்றன.

திருச்சியில் —

பத்தாம் வகுப்பு மாணவன் முத்து தொலைக்காட்சியின் முன்னே அமர்ந்து, சேரனின் வீரத்தைப் பற்றிய ஒரு மணி நேர நிகழ்ச்சியைப் பார்க்கிறான், நிகழ்ச்சியின் முடிவில், ''நானும் சேரனைப் போலத் திகழப் போகிறேன்! நாடு எனக்கு என்ன செய்தது என்று கேட்கமாட்டேன்! நாட்டுக்கு நான் என்ன செய்தேன் என்று கேட்டுக் கொள்வேன்! நாட்டுக்குச் சேவை செய்து நானும் ஒரு சேரனாவேன்!'' என்று சபதம் செய்கிறான்.

இப்படி வீர சபதம் செய்தவன் இந்த முத்து ஒருவன்தானா?

திருச்சியில், சேலத்தில், சென்னையில், கோவையில், பம்பாயில், டெல்லியில், கல்கத்தாவில், இன்னும் பல ஊரில் சேரனைப் பற்றிய தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்த்த லட்சக்கணக்கான சிறுவர்களில் பல நூறு பேர் திருச்சி முத்துவைப் போலச் சபதம் செய்தனர்! அவர்களில் ஒரு நூறு பேர், தாம் செய்த சபதத்தை நிறைவேற்றினால் கூடப் போதும்! அப்புறம் பாரதத்தை யார் அழிக்க முடியும்? அழிப்பதா? இல்லை! இல்லை! பாரதத்தை யார் அசைக்க முடியும்? அசைப்பதா? அதுவும் முடியாது? பாரதத்தைப் பகைவர் யார் அணுக முடியும்? முடியாது! முடியாது!! முடியாது!!!

— முற்றும் —

பட்டாசுக் கடை

— புதுவை அமலன் —



பட்டாசுக்கடை ஏலம் கேட்க
காட்டில் ஏகப் போட்டி — தொகை
எட்டாயிரம் கேட்டுக் கடையை
எடுத்தவர் முயல் குட்டி.

தொட்டால் வெடிக்கும்! விட்டால் பறக்கும்!
தொலைவில் காது பிளக்கும்! — ஒரு
மிட்டாய்க் கடையில் ஈக்கள் போல
க்யூவில் மிருகக் கூட்டம்!


செட்டாக வெடி வாங்குவோர்க்கு
இலவசம் ஒரு பெட்டி — நாவில்
பட்டால் இனிக்கும் இனிப்புப் பெட்டி;
பட்டால் வாங்கப் போட்டி.

எட்டாயிரம் வரவு மேலும்
எட்டாயிரம் லாபம் — முயல்
பட்டாடைகட்டிப் பரிசளித்தார்
ஏழைக்கெல்லாம் யோகம்.









தலைப்புக்குப் பரிசு!

* காந்தி ஜெயந்தியை முன்னிட்டு வெளியாகியிருக்கும்கட்டுரை,கவிதைகள்,அத்தனையும் ஜோர். டாக்டர் மு. வ. அவர்களின் இளமைப் பருவ நிகழ்ச்சிகள் என்னை வியப்பில் ஆழ்த்தின. மாண்டலின் ஸ்ரீனிவாஸின் இரண்டு நிமிடப் போட்டி இனிமை.

- வெ. லட்சுமி நாராயணன், வடலூர்.

* 'ஒரு பூனை புலியாகிறது!' வேகத்தில் அம்பு! சுவையில் கரும்பு! கொடியவரைத் தாக்குவதில் இரும்பு!

— எஸ். புஷ்கலா, Farakika Barrage, West Bengal

* தேவியின் கருணை எங்களைப் பரவசத்தில் ஆழ்த்தியதோடு, பண்டிகைகள் சில கொண்டாடப்படுவதின் காரணங்களையும் நன்கு தெளிவாக்கியது.

— பா. கிருஷ்ணதாஸ், கும்பகோணம்—1.

* பிருந்தாவனம் பகுதியில் 'அரசாங்கப் பேருந்துகள்' என்றதலைப்பில்,திருநெல்வேலி மாவட்டத்தில் ஓடும் கட்ட பொம்மனும், குமரி மாவட்டத்தில் ஓடும் நேசமணியும் விடுபட்டுள்ளன.

— சி. த. வேல்விழி, ஒழுகினசேரி.

* திருக்குறள் புதிரைப் போலவே பாரதி புதிர்ப் படங்களையும் விடைகளையும் நான் பத்திரமாகப் பாதுகாத்து வருகிறேன்.

— வி. குமரேசன், திருத்தணி

* பல உலகத்தலைவர்களின் கையெழுத்துக்களையும் சேர்த்து வரும் நான் கிடைத்தற்கரிய தேசத் தந்தை மகாத்மாவின் பலமொழிக் கையெழுத்துக்களை வெளியிட்டதற்கு மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன்.

— கோ. இராஜேஷ் குமார், திருவையாறு.

* செஸ் உலக இளவரசன் விஸ்வநாதன் ஆனந்தின் அடுக்கடுக்கான சாதனைகள் என்னை ஆச்சரியத்தில் மூழ்கடித்தன. அவன் மேலும் பல உலக சாதனைகள் புரிந்து, சதுரங்க உலகின் 'இமய'மாகத் திகழ எங்கள் நல்வாழ்த்துக்கள்.

— குடந்தை முரளி, உமையாள்புரம்.

* எஸ். மாதவன் (204), தன் கண்டுபிடிப்புக்காகப் பரிசுகளும், பாராட்டுக்களும் பெற்றதை அறிந்தேன். என் போன்ற கோ.சி.ச. உறுப்பினர்களின் பாராட்டை மாதவனுக்கு அனுப்ப மாதவனின் முகவரி தேவை. வெளியிடுங்கள்.

— எஸ். சிவராஜ், (22) மன்னார்குடி.

(இதோ மாதவன் முகவரி:
எஸ். மாதவன் (204),
C 3/26 F, கைலாசபுரம், திருச்சி—14)

* புதிர்க்கதை 4—ல் மற்றொரு புதிரையும் போட்டுவிட்டீர்கள். கதைக்குத் தலைப்பும் இல்லை. எழுதியவர் பெயரும் இல்லையே!

— சி. ராமசுப்பு, இராமேஸ்வரம்.

(எழுதியவர் பெயர் எ. சோதி. பொருத்தமான தலைப்பு ஒன்றை உங்களில் யாரேனும் கொடுக்க முடியுமா? சிறந்த தலைப்பை 30.11.85 க்குள் எழுதி அனுப்புபவருக்குப் பரிசு ரூ 10/— — ஆசிரியர்.)

* வெகு நாட்களாகவே என் பையன் சினிமாப் படம் எப்படி ஓடுகிறதென்று கேட்டு நச்சரித்துக் கொண்டே இருந்தான். ஓடும் ரயில் வண்டியை அட்டையில் ஒட்டி ஓட்டிக்காண்பித்தேன். இப்படித்தான் திரைப் படமும் எடுத்துக் காட்டப்படுகிறது என் பதை அறிந்து கொண்டான்.

— எஸ். கண்ணன், வடுவூர்.

* சின்னான் கதையை ஏன் தொடர்ந்து வெளியிடவில்லை? தயவு செய்து தெரிவியுங்கள்.

— மு. கோ. ஆனந்த் (4637), முருந்தகிரி.

(இந்த இதழில் மீண்டும் சின்னான் வந்து விட்டான்! — ஆசிரியர்)

* சித்திரப்புதிர் 8 க்கான 3 வது விடையில் ஈ, எ, இரண்டுக்கும் கரடி என்று இருக்கிறதே. இரண்டும் வெவ்வேறு மிருகங்களின் கால்களல்லவா?

— அ. ஆனந்த குமார் (9797), கரூர்—1.

(ஆம், ஈ—கரடி, எ—குரங்கு. — —ஆசிரியர்)

* AMSTERDAM என்று அச்சிடுவதற்குப் பதில் ARMSTERDAM என்று அச்சிட்டு விட்டீர்களே! அதனால்தான் 9 க்குப் பதில் 10 எழுத்துக்கள் வந்துவிட்டன.

— பி. சரவணக்குமார், விருதுநகர்.

* கடல்ராணிப் பாட்டில் 'இன்னும் மேகம் உருவாக்கி இங்கே மழையைக் கொட்டுவாய்' என்று இருக்கிறது. அப்படிக் கொட்டினால் என் தாத்தா பெரிதும் மகிழ்ச்சி அடைவார். ஏனெனில் என் தாத்தா ஒரு விவசாயி!

— டி . ஜி. குமார், சென்னம்பட்டி.


கார், தபால்!

கோகுலம்

அடுத்த தொடர்கதை

தங்கமணி

எழுதும்



அக்கினி பூதம்

அடுத்த இதழில் ஆரம்பம்



அணிலின் பசி தீர்த்த நேரு

ஜானகிமணாளன்

நாட்டைக் காக்க
நமது நேரு
சிறையில் இருந்தார் — லக்னோ
சிறையில் இருந்தார் — அவரை
நாடித் தினமும்
அணில் ஒன்று
ஓடி வந்திடும் — காலில்
தாவி ஓடிடும்!

ஒருநாள் அந்த
அணிலின் குஞ்சு
தவறி விழுந்தது — கீழே
தரையில் விழுந்தது — மர
நிழல் இல்லாமல்
நெருப்பாய்ச் சுட்ட
தரையில் கிடந்தது — பசியில்
தவித்துக் கிடந்தது!

ஒருவர் அந்தக்
குஞ்சின் பசியைப்
போக்க முயன்றார் — பாலைப்
புகட்ட முயன்றார் — ஆனால்,
சிறிய வாயில்
பாலை ஊற்ற
முடிய வில்லையாம் — வழி
புரிய வில்லையாம்!

அறையில் எழுதிக்
கொண்டு இருந்த
நேரு வந்திட்டார் — மாமா
நேரு வந்திட்டார் — வெகு
விரைவில் அதன்
பசியைப் போக்க
வழியை வகுத்திட்டார் — எளிய
வழியை வகுத்திட்டார்!

மையை எடுக்கும்
ரப்பர் குழாயால்,
பாலை எடுத்திட்டார் — கொஞ்சம்
பாலை எடுத்திட்டார் — குஞ்சைக்
கையில் எடுத்து
வாய்க்குள் பாலை
ஊட்டி மகிழ்ந்திட்டார் — பசியைப்
போக்கி மகிழ்ந்திட்டார்!



ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

இடம்: ஏழாவது வகுப்பறை

பாத்திரங்கள்: ஆசிரியர், கேசவன், மாதவன், நடராஜன், கோமதி மற்றும் மாணவ மாணவியர்.

ஆசிரியர்: அருமை மாணவர்களே, நான் சில கதைகளைக் கூறுவேன். அக்கதைகளுக்கு அடிப்படையாக உள்ள நீதிக் கருத்துக்களை நீங்கள் கூற வேண்டும்.

அனைவரும்: அப்படியே கூறுகிறோம்.

ஆசிரியர்: ஓர் ஊரில் நாராயணன் என்ற உயர்ந்த மனிதர் ஒருவர் இருந்தார். அவர் பெரிய செல்வந்தர். நல்லவர். ஆனால், அவருடைய நான்கு பிள்ளைகளும் கொடியவர்கள். அவர் தம்முடைய ஊருக்கு இலவச மருத்துவமனை கட்ட விரும்பினார். தமக்கு வயதாகி விடவில்லை என்றும் அடுத்த ஆண்டு கட்டிவிட்லாம் என்றும் நாட்களைக் கடத்திக் கொண்டு சென்றார். ஆனால், துரதிர்ஷ்ட வசமாக அந்த ஆண்டே அவர் இறந்து போய்விட்டார். அவருடைய கொடிய பிள்ளைகள் விரைவில் அவருடைய சொத்துக்களைப் பாழாக்கிவிட்டனர். நாராயணசாமி தம் சொத்தால் தாமும் பயன் அடையவில்லை; இக்கதை எந்த நீதியைப் 'போதிக்கிறது? கோமதி, நீ சொல்.

கோமதி: இக்கதைக்குத் திருக்குறட்பா ஒன்று பொருத்தமாக வருகிறது. அது,

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்."

என்பதாகும்.

ஆசிரியர்: அக்குறளின் பொருள் என்ன?

கோமதி: அறச் செயல்களைச் சிறிதும் விட்டுவிடாமல் இயன்ற வரையில், செய்யக் கூடிய காரியங்களைச் செய்துவிட வேண்டும்.

ஆசிரியர்: சரியாகச் சொன்னாய். இன்னொரு கதை கூறுகிறேன். கேளுங்கள். பெரிய கோட்டையில் கங்காதரன் என்று ஒருவன் இருந்தான். அவன் தேனீ போலச் சுறுசுறுப்பு உடையவன். பல வகைகளிலும் பொருளைத் தேடினான். செல்வம் நிறையச் சேர்ந்தது. சிறிது சிறிதாகச் சேர்ந்த செல்வம் ஒருநாள் பார்க்கும் பொழுது மிகப்பெரிய அளவில் நிறைந்திருந்தது. கங்காதரன் உழைப்பதை நிறுத்தி, 'கொஞ்ச நாள் அனுபவிப்போம்' என்று கருதி, சேர்த்த செல்வத்தைச் செலவு செய்யத் தொடங்கினான். உழைக்காமல் காலத்தை வீணாக்கத் தொடங்கினான். அவனுடைய நல்ல குணத்தையும், உழைப்பையும் அறிந்த அவ்வூர் முதியவர் ஒருவர் அவனிடம் வந்து, "உழைக்க வேண்டிய காலத்தில் உழைத்துச் சேமிக்க வேண்டும். உனக்கு உழைக்கும் திறமை இருக்

கிறது. ஆகவே, காலத்தை வீணுக்காமல் உழை. உழைக்கமுடியாதகாலத்தில் சேமிப்பால் சுகத்தை அனுபவிக்கலாம். உழைக்கக் கூடிய காலத்தில் சுகத்தை அனுபவித்தால், உடல் பின்னுல் உழைக்க இடம் கொடுக்காது'' என்றுபுத்திமதிகூறினுர். ஆனுல்கங்காதரன் அவரிடம்மரியாதையாக, ''ஐயா, என்னுல் எந்தக் காலத்திலும் உழைக்க முடியும்'' என்ருன். உடனே பெரியவர் அவனை நோக்கி, ''தம்பி, செல்வம் சிறிது சிறிதாகத்தான் சேரும். ஆனுல், போகும் பொழுது மொத்தமாகப் போய்விடும் உழைக்கத் திறமை இருந்தாலும்மீண்டும்செல்வம்கிடைக்காது. ஆகவே எச்சரிக்கையாக இரு'' என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார். அப் பெரியவர் கூறியது பலித்துவிட்டது. சில ஆண்டுகளில் சேர்ந்த செல்வம் இரு ஆண்டுகளில் மறைந்துவிட்டது. செல்வ சுகத்தில் பழகிய கங்காதரனின் உடல் மீண்டும் உழைக்க மறுத்தது. வருமானம் வரவில்லை. அரை வயிற்றுக்குத்தான் சாப்பிடக் கிடைத்தது. நடராஜன், இக்கதைக்குத் தகுந்த நீதியைக் கூறு.

நடராஜன்: இதற்குப் பொருத்தமான திருக்குறள் இருக்கிறது.

''கூத்தாட்டு அவைக் குழாத்து
அற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அது விளிந்தற்று.''

ஆசிரியர்: அதன் பொருளைக் கூறு.

நடராஜன்: நாடகம் நடக்கின்ற கொட்டகைக்கு மக்கள் முதலில் சிறிது சிறிதாகச் சேர்ந்து பிறகு நிறைவார்கள். அது போலச் செல்வம் சிறிது சிறிதாகப் பெருகிவிடும். நாடகம் முடிந்தவுடன் அனைவரும் மொத்தமாகக் கலைவார்கள். அது போலச் செல்வம் மொத்தமாகத் தீர்ந்துவிடும்.

ஆசிரியர்: மிகச் சிறப்பாகக் கூறினுய். கடைசியாக ஒரு கதை கூறுகிறேன். பழவூர் அழகான கிராமம். ஒழுக்கமானவர்கள் நிறைந்த ஊர். வெளியூரிலிருந்து சூதாடுகிறவர்கள் சிலர் வந்தனர். ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு தங்களுடைய சூதுக் கடையை ஆரம்பித்தனர். ஆரம்ப காலத்தில் யாரும் அவர்கள் வீட்டை எட்டிப் பார்க்கவில்லை. அப்பொழுது அவ்வூரில் உள்ள நல்லவர்கள் சிலர், கிராம அதிகாரியைப் பார்த்து அவர்களை விரட்டச் சொன்னுர்கள். ஆனுல், கிராம அதிகாரி, ''நாம் யாரும் அவர்களிடம் போகாமல் இருந்தால் அவர்கள் தொழில் நடக்காது. சில நாட்களில் அவர்களே போய்விடுவார்கள்'' என்று அலட்சியமாகக் கூறிவிட்டார். அந்தச் சூதாடிகள் அவ்வூரில் ஓர் ஏமாளியை தங்கள் சூதுக் கடைக்கு அழைத்துச் சென்று விளையாடச் செய்தார்கள். வேண்டுமென்றே அவனுக்கு இலாபம் கிடைக்கும்படி செய்தார்கள். ஊரில் உள்ள இளைஞர்கள் சிந்தித்தனர். ஏமாளியே இலாபம் அடையும் போது நாம் ஏன் இலாபம் அடைய முடியாது என்று அங்கு போகத் தொடங்கினர். மீண்டும் அந்தச் சூதாடிகள் அவர்களைக் கவருவதற்காக ஒன்றுக்கு இரண்டாக இலாபம் கொடுத்தனர். போகப் போகச் சூதுக் கடையில் கூட்டம் சேரத் தொடங்கியது. பலருடைய வீட்டுப் பொருள்கள் சூதுக் கடையில் சேரத் தொடங்கின. கிராம அதிகாரியின் மகனும், அங்கு போய் விளையாடத் தொடங்கினுன். கிராம அதிகாரி அவர்களை விரட்டச் சென்ற பொழுது அவர்கள் அவ்வூரை காலி செய்துவிட்டு ஓடிவிட்டனர். பொருள்கள் போனுலும் பரவாயில்லை; பழவூரின் ஒழுக்கம் சிதைந்துவிட்டது என ஊரார் நினைத்தார்கள். பலகாலம் முயற்சி செய்து மீண்டும் அவ்வூரில் ஒழுக்கத்தை நிலை நாட்டினுர்கள். கேசவா, இக்கதைக்குப் பொருத்தமான நீதியைக் கூறு.

கேசவன்: இக்கதைக்கும் பொருத்தமான ஒரு திருக்குறள் இருக்கிறது.

''இளைதாக முள்மரம் கொல்க
களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து''

ஆசிரியர்: ஆகா.... அதன் பொருள் என்ன?


கேசவன்: முள்மரம் சிறியதாக இருக்கும் பொழுதே வெட்ட வேண்டும். அவ்வாறு வெட்டாவிட்டால் அது பெரிதாக வளர்ந்துவிடும். பிறகு வெட்டினுல், வெட்டுபவரின் கையையே வருத்தும். அதுபோல தீமைகளை முளையிலேயே கிள்ளிவிட வேண்டும். இல்லாவிட்டால் நீக்க முடியாதவாறு வளர்ந்துவிடும்.


அரசன் ஆர்தரும் வட்டமேஜை வீரர்களும்
இங்கிலாந்தின் புகழ் பெற்ற அரசர் ஆர்தரைப் பற்றி எண்ணும் போதே அவரது வட்டமேஜை வீரர்களும் நினைவுக்கு வருவார்கள். இவர்கள் சகல நற்குணங்களையும் கொண்டவர்கள்.
படக்கதை: ஆனந்தி
படம்: விஜு
ஆர்தர் பற்றிய கர்ண பரம்பரைக் கதைகள் பல. ஆர்தர் பிறந்ததுமே குழந்தையைப் பெற்றோரிடமிருந்து பிரித்து விட்டார் மந்திரவாதி மெர்லின்.
அரசே! குழந்தையை என்னிடம் ஒப்படைத்து விடுங்கள்.
அப்போது இங்கிலாந்து ஒரு சிற்றரசாக இருந்தது. ஆர்தரின் தந்தை பல போர்க்களங்களைச் சந்தித்தவர்.
ஆமாம், எனக்கு எதிரிகள் அதிகம். இளவரசனைப் பற்றி யாரும் அறியாமல் இருப்பதே நல்லது!
மதி மந்திரியாகவும் விளங்கிய மந்திரவாதி மெர்லின், குழந்தையை எக்டர் எனும் மாவீரரிடம் ஒப்படைத்தார்.
உன் குழந்தைகளுள் ஒருவனாகவே வளர்த்து வருவாயாக!
அப்படியே ஆகட்டும்.


ஆண்டுகள் பல சென்றன. ஒரு போரில் மாபெரும் வெற்றி பெற்ற போதிலும் ஓர் அம்பினால் வீழ்த்தப் பட்டார் ஆர்தரின் தந்தை.
அரண்மனையில் மரணப் படுக்கையில் மன்னர், மெர்லினை அழைத்தார்.
என் புதல்வன் ஆர்தருக்கு ராஜ்ய உரிமையை அளிக்கிறேன். எனக்கு உதவி வந்தது போல் அவனுக்கும் பக்கபலமாக இரு.
சிலகாலம் சென்று மதத் தலைவரான காண்டர்பரி ஆர்ச் பிஷப்பைப் பார்க்கச் சென்றார் மந்திரவாதி.
மெர்லின்! மன்னரில்லா நாடாக இங்கிலாந்து இருக்க முடியுமா?
நாட்டிலுள்ள மாவீரர்களுக்குக் கிறிஸ்துமஸ் தினத்தன்று வந்து கூடுமாறு அழைப்பு அனுப்புங்கள். அன்று ஓர் அற்புதம் நிகழும் என்று அறிவியுங்கள்.
கிறிஸ்துமஸ் தினத்தன்று வீரர்கள் கூடி பிரார்த்தித்துக் கொண்டிருந்த போது ...
அற்புதம்! அற்புதம்! இங்கே திடீரென்று ஓர் இரும்புமேடையும் வாளும் தோன்றியுள்ளன!


எல்லோரும் வெளியே ஓடிச்சென்று பார்த்தார்கள்...
அடேடே! கொல்லன் உலைக்களமேடை!
ஒரு கத்தி இதில் செருகப் பட்டிருப்பது விந்தை!
பட்டாக் கத்தியின் பிடியில் பொன் எழுத்துக்களைப் படித்தான் ஒருவன்...
யார் இந்த வாளை உருவி எடுக்கிறானோ அவனே இங்கிலாந்தை ஆளத் தகுதி உடையவன்!
வீரர்கள் பலர் பீடத்திலேறி வாளை இழுத்துப் பார்த்தார்கள்...
ஹூம்... அம்மாடி...!
இது ஏதோ ஏமாற்று வேலையாக இருக்குமோ?
மக்களின் ஐயத்தைப் போக்கினார் மதகுரு.
இது தெய்வசித்தம். இந்த வாளை அணியக் கூடியவன் இங்கு இன்னும் வரவில்லை. விருப்பமுள்ளவர்கள் அனைவரும் இந்தக்கத்தியை உருவ முயற்சி செய்யட்டும்.
வீர விளையாட்டுக்கள் நடைபெற்றன. அவற்றில் கலந்துகொள்ள எக்டர் தம் மகன்களுடன் வந்தார். மூத்தவன் கே, இளையவன் ஆர்தர்.


ஓ! திடீரென்று நினைவு வந்தவனாக...
அடடா! என் வாளைக் கொண்டு வர மறந்து விட்டேனே?
நான் போய் எடுத்து வருகிறேன் அண்ணா!
வழியில்...
அட! என்ன நேர்த்தியான வாள்! கேட்பாரற்று இருக்கிறதே! அண்ணனுக்கு இதைக் கொண்டு போனால் என்ன?
ஆர்தர் விரைந்து சென்றான்...
ஆர்தர் உருவியதும் கத்தி கையோடு வந்தது!
அண்ணா! இதோ வாள்!
என்ன அதிசயம்! ஆர்தர்! இரும்புப் பீடத்தில் இறுகியிருந்த பட்டாக் கத்தி அல்லவா இது!
எக்டர் தம் இரு மகன்களுடன் பீடத்தை அடைந்தார். வாளைப் பீடத்தில் சொருகிவிட்டு இழுத்துப் பார்த்தார்.
ஊம் ஹூம், வரவில்லை. கே! நீ முயன்று பார்!


கே எவ்வளவோ முயன்றும் தோல்வியே.
என்னாலும் முடிய வில்லை அப்பா!
ஆர்தர் அடுத்தது உன் முறை!
ஆர்தர் உருவியதும் வாள் எளிதாகக் கையோடு வந்தது...
அப்பா! அண்ணா! இதென்ன? எதற்கு என்னை வணங்கு கிறீர்கள்?
ஆர்தர்! நீதான் இந்நாட்டு மன்னன்! இது தெய்வத்தின் தீர்ப்பு!
ஆர்தர் வளர்ப்பு மகன், மெர்லினால் தன்னிடம் ஒப்படைக்கப் பட்டவன் என ஏக்டர் விளக்கினார்.
நீ மன்னர் மகன் என்றால் மக்கள் நம்ப வேண்டுமே! அதற்காகத்தான் தெய்வசித்தம் செயல் பட்டிருக்கிறது!
ஆர்ச் பிஷப், பிரபுக்கள் ஆகியோர், மக்கள் முன்னிலையில் ஆர்தரைச் சோதித்தனர். அவனைத் தவிர யாராலும் பீடத்தில் செருகப்பட்ட கத்தியை உருவ முடியவில்லை!
ஆர்தர் எங்கள் அரசர்!
ஆர்தர் வாழ்க!


முடிசூடிய ஆர்தர் சீக்கிரமே பல பகைவர்களை வென்று இங்கிலாந்து முழுவதையும் தம் ஆளுகைக்குக் கீழ் கொண்டு வந்தார்.
ஆயினும் தொல்லைகள் தொடர்ந்தன. பதினொரு சிற்றரசர்கள் சேர்ந்து ஆர்தரை எதிர்த்தனர்.
மெர்லின் பிரான்ஸ் தேசத்துக்குத் தூது அனுப்பினார்.
உல்பியஸ்! உடனே போ! பான், போர்ஸ் இருவரும் படைகளுடன் புயல் வேகத்தில் உதவிக்கு வரவேண்டும்!
யுத்த களத்தின் மத்தியில் திடீரென்று...
ஆ! ஆர்தருக்கு உதவ பிரெஞ்சுப் படைகள் வந்து விட்டன... தப்பி ஓடுங்கள்! ஓடுங்கள்!
நன்றி தெரிவித்தான் ஆர்தர்...
நண்பர்களே! தக்க சமயத்தில் வந்தீர்கள். என் வெற்றிக்குக் காரணம் நீங்களே!
ஆர்தர் வாழ்க!
இங்கிலாந்து வெல்க!



எதிரிகள் பணிந்தனர். சில காலம் சென்று...
மன்னவா! காட்டினருகே ஒரு மாவீரன் வழியோடு போகிற வர்களையெல்லாம் சண்டைக்கு இழுத்துத் தொல்லை கொடுக்கிறான்!
அந்த வீரனை வழிக்குக் கொண்டு வரத் தீர்மானித்த ஆர்தர்...
வீரரே! வழியோடு போகிற வர்களை யெல்லாம் வம்புக் கிழுக்கி றீராமே?
நீ யாரடா கேட்பதற்கு? உன்னால் முடியுமானால் என்னை ஜெயித்து விட்டுப் பேசு!
இருவரும் ஈட்டிகளைத் தாங்கி ஒருவர் மீது ஒருவர் பாய்ந்தனர்.
ஆர்தரின் ஈட்டி உடைந்ததும் கீழே விழுந்தவர், சமாளித்து எழுந்து உடைவாளை உருவினர். இருவரும் துவந்தயுத்தம் செய்தனர்...
ஆர்தரின் வாளும் உடைய... வீரனைத் தடுத்தார் மெர்லின்...
கொல்லாதே நில்! இவர் நம் அரசர்!
யாராக இருந்தால் எனக்கென்ன?


மெர்லின் தமது மந்திர சக்தியைப் பிரயோகிக்க...
ஐயோ! இந்த மாவீரனைக் கொன்று விட்டீரா?
இல்லை! தங்களைக் காக்க இவனை மயங்கி விழச் செய்தேன் அவ்வளவே!
காட்டிலிருந்த குடிசையில் ஆர்தர் காயங்களுக்கு மெர்லின் மருந்து போட்டார். தன்னை வென்றவனை வாழ்த்தினார் ஆர்தர்!
எப்படிப்பட்ட பலசாலி! அந்த மாவீரன் யார்?
அவர் பெயர் பெல்லினோர். அவரும் அவரது பிள்ளைகளும் உங்களுக்குத் தொண்டு புரிவார்கள்.
மூன்று நாட்கள் ஓய்வெடுத்து ஆர்தரும் மெர்லினும் புறப்பட்டார்கள்.
எனக்கு வாள் இல்லையே?
கவலை வேண்டாம் கிடைக்கும்!
மெர்லின் சொன்னபடியே நடந்தது!
ஆ! ஏரியின் மத்தியில் ஒரு வாள் தோன்றியிருக்கிறதே! அதோ வரும் அந்தப் பெண் யார்?
இந்த ஏரியின் தலைவி!
தேவி! என் உடைவாள் உடைந்து விட்டது. தருமம் காக்க அந்த வாளை எனக்குத் தருவீர்களா?


இந்தப் படகில் போய் அதை வாங்கிக் கொள்ளுங்கள். உலகம் போற்றும் மன்னனாய் விளங்குவீராக!
வாளின் பிடியில் "எக்ஸ் காலிபர்" என்று அதன் பெயர் பொறித்திருந்தது.
இந்த வாளை அணியும் தகுதி, நேர்மை, நல்லொழுக்கம் உடையவனுக்குத் தான் இருக்க முடியும்.
சில ஆண்டுகள் சென்றன. ஆர்தர் அந்தரங்கமாக மெர்லினிடம்...
நீங்கள்தான் தூதுபோய் இளவரசி கனிவரை எனக்கு மணம் பேசி வர வேண்டும்...
கனிவரின் தந்தை சிற்றரசர் லியோடிக்ரான்ஸைச் சந்தித்தார் மெர்லின்.
நல்ல செய்தி! என் மகளுக்குச் சீதனமாகப் புகழ்பெற்ற வட்டமேஜையையும் அதைச் சுற்றி அமரும் தகுதியுடைய நூறு மாவீரர்களையும் அனுப்புகிறேன்!
இளவரசி கனிவர் ஆர்தரிடம் வந்து சேர்ந்தாள். கோலாகலமாகத் திருமணம் நடந்தேறியது.
வாழ்க! வாழ்க!


திருமணத்தை யொட்டி பலருக்குப் பட்டங்கள் அளித்தார் ஆர்தர். அவர்கள் வட்டமேஜையைச் சுற்றி அமரும் தகுதி பெற்றனர்.
மாவீரரே! உங்களுக்கு 'ஸர்' பட்டம் வழங்குகிறேன்!
வட்ட மேஜையைச் சுற்றி 150 மாவீரர்கள் அமர முடியும். தகுதியுடைய வீரர்கள் பெயர் நாற்காலிகளில் பொன்னெழுத்துக்களில் தானாகவே தோன்றும். வேறெவரும் அமர முடியாது!
நல்லதையே நினைப்போம்! நன்மையே செய்வோம்!
வட்டமேஜையில் மீதமுள்ள இடங்களில் அமரத் தகுதியுடையவர்களைத் தேர்ந்தெடுக்கப் போட்டிகள் நடந்தபடி இருந்தன...
பிரான்ஸ் தேசத்திலிருந்து லான்சிலாட் வந்து சேர்ந்தார். வட்டமேஜை வீரர்களுள் மிகவும் புகழ் பெற்றார்.
வெற்றி லான்-சிலாட்டுக்கே! வாழ்க!
வட்டமேஜை வீரர்களால் ஆர்தரின் கீர்த்தி பரவியது. ஒருசமயம் வீர விளையாட்டுக்களிடையே...
புதிதாய் வந்த இளைஞனே! உன் வீரத்தை மெச்சினேன்! என்ன வேண்டுமோ கேள்...


மூன்று வரம் கோருகிறேன். முதல் வரம் ஓராண்டுக்கு அரண்மனையில் எனக்கு உணவு தர வேண்டும். மற்ற வரங்களைப் பிறகு கேட்கிறேன்...
அப்படியே ஆகட்டும்!
சாப்பாட்டு வரம் கேட்ட அந்த இளைஞனை மற்றவர்கள் பரிகசிக்க, லான்சிலாட் மட்டும் பரிவு காட்டினார்.
இவனைச் சும்மா விடுங்கள்!
அடுத்த ஆண்டு ஓர் அழகிய பெண் ஆர்தரிடம் முறையிட்டாள்...
அரசே! காப்பாற்றுங்கள்! என் சகோதரியைச் சிவப்பு வீரன் சிறைப்படுத்தியிருக்கிறான்.
அப்போது மீதி இரு வரங்களைக் கேட்டான் "சாப்பாட்டு ராமன்"...
மன்னவா! என்னிடம் பரிவு காட்டியவர் லான்சிலாட் ஒருவரே. எனவே அவர் தம் கையால் எனக்கு "ஸர்" பட்டம் வழங்க வேண்டும்...
அந்த வரம் நிறைவேறிய சமயம் மற்றொரு வரத்தைக் கேட்டான் இளைஞன்...
சிவப்பு வீரனுடன் போரிட்டு இப்பெண்ணின் துயர் துடைக்க என்னையே அனுப்ப வேண்டும்!


அந்தப் பெண்மணிக்கு ஒருசாப் பாட்டு ராமனை அனுப்பிவிட்டாரே அரசர் என்று வருந்தும்...
அந்தனை வட்டமேஜை வீரர்கள் இருக்க உன்னை அனுப்பினாரே... ஹூம்...
அதோ! அந்தக் கோட்டையில் சிறையிருக்கிறாள் என் தங்கை. ஜாக்கிரதை! சிவப்பு வீரன் பயங்கரமானவன்!
சிவப்புவீரனும் இளைஞனும் நீண்ட நேரம் யுத்தம் செய்தார்கள். ...
கடைசியில் சிவப்பு வீரன் வீழ்ந்தான்.
இளைஞனே! என்னைக் கொல்லாதே! உன் மன்னர் ஆர்தருக்குத் தொண்டு செய்வதாக வாக்களிக்கிறேன். நீ தேடி வந்த பெண்ணை விடுவிக்கிறேன்!
எல்லோரும் லண்டனுக்குத் திரும்பினார்கள்... வழியில்...
என்னைச் சிறை மீட்ட தங்களிடம் என் உள்ளம் சிறைப்பட்டு விட்டதும்...
கண்ணே! மன்னரின் அனுமதி பெற்று உன்னை மணப்பேன்.


அரச சபையில்..
நீ மகா வீரன் என்பதை நிரூபித்து விட்டாய். இப்போதாவது உன் பெயரைச் சொல்!
என் பெயர் காரத்... மன்னவா! இன்னொரு வரம் அருள வேண்டும்..
காரத் கேட்ட வரத்தை உடனே வழங்கினார் ஆர்தர். திருமணம் கோலாகலமாக நடந்தேறியது!
பட்டுத் துணியால் மூடப்பட்ட ஒரு நாற்காலி வட்ட மேஜை அருகே இருந்தது. மெர்லின் கூறினார்...
இதில் அமரத் தகுதியுள்ளவன் வருவான்!
அவ்வண்ணமே ஒரு வாலிபன் வந்தான்.
உன் பெயர்?
காலஹாட்
பட்டுத் துணியை விலக்கியபோது நாற்காலியில் அப்பெயர் பொன் எழுத்தில் தோன்றியது!
ஆஹா!
காலஹாட் வாழ்க!


காலஹாட் அந்த ஆசனத்தில் அமர...
ஆ! அற்புதம்!
ஹோலி க்ரெயில் அல்லவா அது!
ஹோலி க்ரெயில், ஏசு உபயோகித்த வெள்ளிக் கோப்பை. மிக உயர்ந்த, புனித உள்ளம் படைத்தவர்களாலேயே அதைப் பார்க்க முடியும்!
எல்லோரும் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அது மறைந்து விட்டது!
சரியாகப் பார்க்க முடியவில்லையே!
சல்லாத் துணியால் மூடப்பட்டிருந்ததே!
வீரர் காவெய்ன் சபதம் செய்தார்...
அந்தக் கிண்ணத்தைத் தேடிச் செல்வேன்! அதை நன்கு தரிசிக்காமல் திரும்ப மாட்டேன்!
எல்லா வீரர்களுமே அதே சபதத்தை மேற்கொண்டார்கள். ஆர்தர் வருந்தினார்....
அனைவருமே உன்னதமான தூய உள்ளத்தினர் என்று நிரூபிக்க எண்ணுகிறீர்கள். ஆனால்...


... இங்கு நான் தனிமையில் விடப்படுவேனே...
மன்னவா! வருந்தாதீர்கள்! இந்தப் பயணத்தால் உங்களுக்குப் பெருமை சேர்ப்போம்.
எவ்வளவோ அந்தி அலைந்தும் ஹோலி க்ரெயில் கண்ணில் தென் படாததால் பலர் திரும்பி விட்டனர். இவர்கள் தங்கள் உடல் வலிமையில் நம்பிக்கை கொண்டவர்கள்.
தங்கள் உடல் வலிமையை உணர்ந்திருந்தும் அதற்கும் மேம்பட்ட தெய்வ அருளை நம்பிய மூவருக்கே அந்த பாக்கியம் கிட்டியது.
அதோ! ஆ!
அம்மூன்று புண்ணியவான்களில் ஒருவரான காலஹாலட அப்போதே தேவதூதர்கள் விண்ணுலகுக்கு அழைத்துச் சென்றனர்.
பெர்ஸிவல் துறவியானர்.
போய் வருகிறேன். ஆர்தரிடம் சொல்லு!


போர்ஸ் ஒருவரே திரும்பி வந்தார். ஆர்தர் வரவேற்றார்.
வருக! புனித வீரரே வருக!
ஆண்டுகள் பல சென்றன. வயது முதிர்ந்த ஆர்தர் ஸாலிஸ்பரி என்ற இடத்தில் யுத்தத்தில் மரணகாயமுற்றார். தம் முடிவு நெருங்குவதை உணர்ந்து...
எக்ஸ்காலிபர் என்ற தமது பட்டாக் கத்தியை ஏரியில் திரும்பவும் வீசி எறிந்து விடுமாறு பணித்தார். கட்டளையை ஒரு வீரன் நிறைவேற்ற...
ஆ! ஒரு கரம் நீண்டு கத்தியைப் பற்றிக் கொண்டு மறைகிறதே!
மன்னர் விருப்பப்படி அவரை ஆற்றங்கரைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு காத்திருந்த படகில், விரித்திருந்த மஞ்சத்தில் மன்னர் படுத்தார்.
ஆர்மின் தேவதைகள் படகைச் செலுத்திப்போகத் திரை விழுந்தது போல் பனி படர்ந்து ஆர்தர் மறைந்தார். அவர் புகழ் இன்றும் வாழ்கிறது.

புதிர்க் கதை 5



குரங்கு கையில் முத்துமாலை

எ. சோதி

வெகு காலத்திற்கு முன் மகிழ நாட்டை நன்மாறன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் அரசியின் மீது உயிரையே வைத்து இருந்தான். தன் அன்பின் அடையாளமாக அவளுக்கு விலை மதிப்பற்ற முத்துமாலை ஒன்றைப் பரிசாக வழங்கினான். அதை எப்பொழுதும் அவள் தன் கழுத்தில் அணிந்து வந்தாள்.

ஒருநாள், அரசி வழக்கம்போல் நந்தவனத்துக் குளத்தில் குளிப்பதற்குச் சென்றாள். அந்த இடம் கட்டுக் காவல் நிறைந்தது. முத்து மாலையைக் கரையில் கழற்றி வைத்த அரசி, தோழியைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டுக் குளத்தில் இறங்கினாள். உற்சாகமாக நேரம் போவது தெரியாமல் நீராடிக் கொண்டு இருந்தாள்.

கரையில் காவல் இருந்த தோழி சிறிது நேரத்தில் தூங்கத் தொடங்கி விட்டாள்.

நந்தவனத்தில் இருந்த குரங்குகளில் ஒன்று அரசியின் முத்து மாலையைப் பார்த்துவிட்டது. மெதுவாக மரத்தை விட்டு இறங்கிய அந்தக் குரங்கு யாரும் அறியாமல் முத்து மாலையை எடுத்துக் கொண்டு மீண்டும் மரத்தில் ஏறி உட்கார்ந்தது.

சிறிதுநேரம் அந்த மாலையைத் தன் கழுத்தில் போட்டு அழகு பார்த்தது குரங்கு. மற்ற குரங்குகள் பார்த்துவிட்டால் மாலையைப் பிடுங்கிக்கொள்ளும் என்று நினைத்தது அந்தக் குரங்கு. அதனால், அங்கே இருந்த மரப்பொந்திற்குள் அந்த மாலையை மறைத்து வைத்தது.

விழித்து எழுந்த தோழி அரசியின் முத்து மாலையைக் காணாமல் திகைப்பு அடைந்தாள். 'ஐயோ! பழி நம்மீது வருமே! என்ன செய்வது?' என்று பயந்தாள். தான் தப்பிக்க வேண்டி, "திருடன்! திருடன்! முத்து மாலையைத் தூக்கிக்கொண்டு ஓடுகிறான். அவனைப் பிடியுங்கள்! பிடியுங்கள்!" என்று கூச்சல் போட்டாள்.

இதைக் கேட்ட அங்கிருந்த வீரர்கள் திருடனைத் தேடிப் பரபரப்போடு அங்கும் இங்கும் அலைந்துகொண்டிருந்தனர். கோட்டை வாயிலில் நின்று இருந்த உழவன் ஒருவன் வீரர்களைக் கண்டு பயந்து ஓடத் தொடங்கினான்.

அவன்தான் 'திருடன்' என்று நினைத்த வீரர்கள் அவனைத் துரத்திப் பிடித்தனர். பயந்து நடுங்கிய அவனை வீரர்கள் சோதனை செய்தார்கள். அவர்களுக்கு முத்துமாலை கிடைக்கவில்லை.

"டேய்! திருட்டுப் பயலே! உண்மையைச் சொல். அரசியின் முத்து மாலையை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய்? இல்லையேல் உன் உயிர் போய் விடும்" என்று வீரர்கள் அவனை மிரட்டினர்.

மிகவும் பயந்த உழவன், இவர்களிடம் அடி, உதை வாங்காமல் எப்படித் தப்பிப்பது என்று சிந்தித்தான். வீரர்களைப் பார்த்து, "நான் திருடிய முத்துமாலையை அரண்மனைப் பொற்கொல்லனிடம் தந்து விட்டதாகப் பொய் சொன்னான்.

உழவனின் பேச்சை நம்பிய வீரர்கள் அவனைச் சிறையில் அடைத்தனர். நேராகப் பொற்கொல்லனிடம்



பாதுகாப்பு

முதலாவது அணுகுண்டின் உற்பத்தியை மேற்பார்வையிட்டு வந்த டாக்டர் ராபர்ட் ஆப்பன் ஹீமன் அமெரிக்கக் காங்கிரஸ் குழுவின் முன் தோன்றி, அணு குண்டின் விவரங்களை விளக்கிக் கொண்டிருந்தார். மக்கள் கூட்டம் திரண்டிருந்தது.

அப்போது "அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு ஏதாவது பாதுகாப்பு இருக்கிறதா?" என்ற கேள்வியை ஒருவர் கேட்டார்.

"நிச்சயமாக இருக்கிறது?" என்றார் டாக்டர்.

"அது என்ன?" என்று கேட்டார், இன்னொருவர்.

அமைதியாய் ஆவலுடன் தன்னையே பார்த்துக் கொண்டிருந்த பெரிய கூட்டத்தை நோக்கினார் டாக்டர் ஹீமன்., ஒலிபெருக்கியின் முன்னே நின்று "அது தான் சமாதானம்!" என்றார்.

—திசை. முத்து.

சென்று, அரசியின் முத்துமாலையைத் திருடிய திருடன் உன்னிடம் மாலையைத் தந்ததாகச் சொல்கிறான். எங்கே அந்த மாலை? மரியாதையாகக் கொடுத்துவிடு" என்று அதட்டினார்கள்.

அதிர்ச்சி அடைந்த பொற்கொல்லன், "நாம் என்ன சொன்னாலும் இவர்கள் நம்பப் போவதில்லை. பழியை யார் மீதாவது போடுவோம்' என்று நினைத்தான். "இப்பொழுதுதான் நான் அரண்மனைப் பாடகனிடம் அந்த மாலையைத் தந்துவிட்டு வந்தேன்," என்று கதை விட்டான்.

பொற்கொல்லனையும் சிறையில் வைத்த வீரர்கள், பாடகனிடம் சென்று விசாரித்தனர். அந்தப் பாடகனோ அரண்மனை நாட்டியக்காரியிடம் மாலையைத் தந்ததாக அளந்தான். பாடகனைச் சிறை வைத்த வீரர்கள் நாட்டியக்காரியை விசாரிக்க, 'அவள் தனக்கு எதுவுமே தெரியாது' என்று மறுத்தாள். அவள் வீட்டைச் சோதனை செய்தும் அவர்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை. அவளையும் சிறையில் அடைத்தனர்.

வீரர்களுக்கு 'இனி என்ன செய்வது' என்று புரியவில்லை. நேராக அரசனிடம் சென்று நடந்ததைச் சொன்னார்கள்.

கோபம் அடைந்த அரசன், தன் அருகே நின்ற அமைச்சனைப் பார்த்து,

"நீதான் இன்னும் ஓரிரு நாட்களுக்குள் திருட்டுப் போன முத்து மாலையைக் கண்டுபிடித்துத் தர வேண்டும்" என்று கட்டளை இட்டான்.

அறிவுள்ள அந்த அமைச்சனோ நடந்த எல்லாவற்றையும் விரிவாக விசாரித்தான். பிறகு அதைப் பற்றிச் சிந்தித்தான். 'கட்டுக்காவல் நிறைந்த நந்தவனத்தில் உழவன் நுழைந்து திருடி இருக்க முடியாது. அப்படியே இருந்தாலும், அந்த மாலை இதற்குள் பல கைகள் மாறி இருக்க முடியாது. அரண்மனை ஊழியர்கள் அனைவருமே நம்பிக்கைக்கு உரியவர்கள். அவர்களும் திருடி இருக்க முடியாது. அப்படியானால், யார் எடுத்திருப்பார்கள்?' என்று நினைத்தான் அமைச்சன்.

ஒற்றன் ஒருவனை அழைத்த அமைச்சன், "குற்றவாளிகள் நால்வரையும் ஒரே அறையில் சிறை வை. அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை அவர்கள் அறியாமல் கேட்டு வந்து என்னிடம் சொல்" என்றான்.

சென்ற ஒற்றன் மறுநாள் திரும்பி வந்தான். "அமைச்சரே! அவர்கள் நால்வரும் ஒரே அறைக்குக் கொண்டு வரப் பட்டனர். உழவனைக் கண்டதும் பொற்கொல்லன் கோபத்தோடு, "டேய்! இதற்கு முன் என்னைப் பார்த்திருக்கிறாயா? ஏன் என்னிடம் முத்து மாலை தந்ததாகப் பொய் சொன்னாய்?" என்று கத்தினான்.

அதற்கு உழவன், "வீரர்களின் அடி உதையிலிருந்து தப்புவதற்காக அப்படிச் சொன்னேன். எனக்கு வேறு வழி தோன்றவில்லை" என்றான்.

நடந்ததைக்கேட்டுக்கொண்டிருந்த பாடகன், ''நீ மட்டும் ரொம்ப ஒழுங்கோ? ஏன் என் மீது திருட்டுக் குற்றம் சாட்டினுய்?'' என்று கோபத்தோடு பொற்கொல்லன் மீது பாய்ந்தான்.

''உம்முடைய பாடல் என்ருல் எனக்கு உயிர். எப்படியும் உண்மையான திருடன் பிடிபடும்வரை நாம் சிறையில் இருந்தாக வேண்டும். பொழுது போக உம் பாட்டைக் கேட்கலாம் என்ற எண்ணத்தில்தான் அந்தப் பொய்யைச் சொன்னேன்'' என்ருன் பொற்கொல்லன்.

அங்கே அழுது கொண்டிருந்த நாட்டியக்காரி, ''எதற்காக என் மீது திருட்டுப் பழி சுமத்தினீர்!'' என்று பாடகனைக் கேட்டாள்.

''உன் நாட்டியத்தைப் பார்க்கலாம் என்ற ஆசையில்தான் அப்படிச்



சொன்னேன்'' என்றான் பாடகன்'' என்று நடந்ததை விளக்கமாக அமைச்சனிடம் சொன்னான் ஒற்றன்.

எல்லாவற்றையும் கேட்ட அமைச்சன், ''நாம் நினைத்தது சரியாகப் போயிற்று. அந்த நால்வருமே திருட வில்லை என்பது தெரிகிறது. அப்படியானால், யார் திருடி இருப்பார்கள்?' என்று சிந்தித்தான். திடீரென்று அவனுக்கு நந்தவனத்தில் வாழும் ஏராளமான குரங்குகளின் நினைவு வந்தது. 'ஏதேனும் ஒரு குரங்குதான் நிச்சயமாக முத்துமாலையைத் திருடி இருக்க வேண்டும். அதை எப்படிக் கண்டு பிடித்து முத்துமாலையை மீட்பது?' என்று சிந்தித்தான். அவன் உள்ளத்தில் அருமையான யோசனை ஒன்று தோன்றியது. அதன்படி தந்திரம் ஒன்றைக் கையாண்டான். குரங்கு திருடிய முத்துமாலை அவன் கைக்குக் கிடைத்தது.

அந்த முத்துமாலையை எடுத்துக் கொண்டு அரசனிடம் சென்ற அமைச்சன், நடந்தது முழுவதையும் விரிவாகக் கூறினான். அமைச்சனின் அறிவை வியந்த அரசன் அவனுக்குப் பெரும்பரிசு கொடுத்தான். சிறையில் இருந்த நால்வரும் விடுதலை பெற்றனர்.

அமைச்சன் எவ்வாறு குரங்கிடம் இருந்து முத்துமாலையைக் கைப்பற்றி இருப்பான்?



தெரிந்து கொள்!

அடியாத மாடு படியாது!
அடிக்காத பந்து எழும்பாது!
முடியாத கட்டு இறுகாது!
முயலாது வெற்றி கிடைக்காது!

இசைக்காத வீணை சிறக்காது!
இறைக்காத கிணறு ஊறாது!
பசிக்காத வயிறு புசிக்காது!
படிக்காமல் அறிவு வளராது!

— புலேந்திரன்.

புதிர்க் கதை விடை

அமைச்சனின் திட்டப்படி, பல வண்ண மணி மாலை கழுத்தில் அணியப் பெற்ற குரங்கு ஒன்று நந்தவனத்தில் விடப்பட்டது. அந்தக் குரங்கு தன் கழுத்தில் இருந்த மாலையை அங்கிருந்த எல்லாக் குரங்குகளிடமும் பெருமையாகக் காட்டிக் கொண்டே வந்தது.

இதைப் பார்த்தது, முத்துமாலையை மறைத்து வைத்திருந்த குரங்கு. உடனே பொந்திற்குள் இருந்த மாலையை எடுத்துத் தன் கழுத்தில் அணிந்தது. வந்த குரங்கிடம் தன் மாலையைப் பெருமையாகக் காட்டியது.


எல்லாக் குரங்குகளின் நடவடிக்கைகளையும் கவனித்துக் கொண்டிருந்த வீரர்கள், உடனே குரங்கிடமிருந்து முத்துமாலையைக் கைப்பற்றினர்.

பாரதி புதிர் 5



இப்படத்தைப் பார்த்ததும், நினைவுக்கு வரும் பாரதியார் பாடல் எது? அப்பாடலில் இக்காட்சியை விளக்கும் 4 வரிகளைக் கூற முடியுமா?


விடை: 60ஆம் பக்கம்.



குட்டியும், குண்டும்
ராஜு
1. டேய் குண்டு . . . . ஆனை வெடி . . . . வெடிக்கலாமா?
2. அடேய் . . . . குட்டி வெடிகளை ஜாக்கிரதையாக வெடிக்கனும் . . . . .
3. இந்த சாதாரண வெடிக்கு . . . . . நீ . . . . . . ஏன் . . . . இப்படி . . . . . . பயப்படுகிறே?
4. தகரா டப்பாவை . . . . ஏன்டா . . . . . குட்டி மூடறே?
5. வெடி . . . . . . இன்னும் . . . . வெடிக்கவில்லையே!
6. பட்டாசுலே . . . . . இன்னும் நெருப்பு இருக்கிறது.
7. குட்டி . . . . வெடி . . . முகத்திலே . . . வெடிக்கப்போகுது . . . . ஜாக்கிரதை
8. எதற்கு இப்படி பயந்து சாகறே . . . . குண்டு?
டமார்
9. ஐய்யோ . . . ! தகாடப்பா . . . . !!
10. பட்டாசுக்களை மிகவும் ஜாக்கிரதையாக . . . . . . ! வெடிக்கனும் என்று இப்பொழுது தான் புரிந்து கொண்டேன்

சின்னான் காட்டிய குரங்கு வித்தை!

எம். ஆர். ராஜன்



வேப்பம்பட்டி கிராமத்தின் ஆரம்பப் பகுதியில் ரோடு முனையில் கிராமமே திரண்டு சோகமாய் நின்று கொண்டிருந்தது. கூடியிருந்த ஜனங்கள் ஆளுக்கொரு விதமாய்ப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

'பாதாள கொலுசைக் கயிற்றிலே கட்டி உள்ளே விட்டோம்னா அது குழந்தையின் தலைமயிரிலே சிக்கிக்கும். அப்படியே மெதுவா இழுத்துக் குழந்தையை வெளியே எடுத்துடலாம்,'' என்றார் ஒருவர்.

''பச்சைக் குழந்தை... அதுக்குத் தலையிலே முடி கூட இன்னும் வளரல்லே... என்னங்கய்யா நீங்க பேசறது?'' ''இந்தக் குழாய்க் கிணத்துக்குப் பக்கத்திலே ஒரு பெரிய பள்ளம் வெட்டினா உள்ளே இறங்கிக் குழந்தையை எடுத்துடலாங்க...''

''என்னய்யா ஆகிற காரியமாப் பேசுங்க... பள்ளம் வெட்டினா, மண்ணெல்லாம் குழந்தை தலையிலேதானே விழும்? குழந்தை உயிரோடு இருக்குமாய்யா?''

நடந்தது இதுதான்.

பண்ணையார் பரமசிவம் — ஊரில் தண்ணீர்ப் பஞ்சம் தலைவிரித்தாடவே தன் சொந்தச் செலவில் குழாய்க் கிணறு ஒன்று பொது இடத்தில் போட்டு ஊர் மக்களுக்கு வசதி செய்ய நினைத்தார்.

பள்ளமும் தோண்டினார்கள். அங்கு ஊற்று சரியில்லாமல் பாறைபோல இருக்கவே இன்னொரு இடத்தில் தோண்ட ஏற்பாடாயிற்று. இதற்குள் இருட்டி விடவே அந்தப் பள்ளத்தைக் காலையில் மூடிவிடலாம் என எண்ணிக் கொண்டு வேலைக்காரர்கள் போய் விட்டனர்.

அது குழாய்க்கிணற்றுக்கான பள்ளமாகையால் ஒரு அடி விட்டம் அளவுக்கு அகலமே இல்லாமல் பத்தடிக்குப் பள்ளம் தோண்டப்பட்டது.

காலையில் பண்ணையார் வீட்டில் காலை வேலை செய்ய வந்த கண்ணம்மா தன் ஒரு வயதுக் குழந்தையைக் கீழே கிடத்திவிட்டு வேலையைக் கவனிக்க, குழந்தை தத்தித் தத்திப் போய், பள்ளம் பார்க்காமல் உள்ளே விழுந்து விட்டது.

விளையாடிக் கொண்டிருந்த குழந்தையைக் காணாத கண்ணம்மா தேட, யதேச்சையாகப் பள்ளத்தைக் கண்டாள். 'பக்'கென்றது அவளுக்கு.

செய்தி மெதுவாக ஊர் முழுவதும் பரவியது. ஊர் கூடிவிட்டது. ஆளுக்கொரு யோசனை சொன்னார்கள். எது

வும் செய்கிறாற்போல இல்லை. தீயணைப்புப் படைக்குச் சொல்லி அனுப்புவதானால்கூட ஆறுமைல்சைக்கிளில் போய் போன் செய்ய வேண்டும், அதற்குப் பின் தீயணைப்புப் 'படை டவுனிலிருந்து இருபத்தைந்து மைல் வர வேண்டும்.

கையைப் பிசைந்து கொண்டு நின்றார்கள். கண்ணம்மா கண்ணீரும் கம்பலையுமாய் நின்று கொண்டிருந்தாள்.

மேய்ப்பதற்கு மாடுகளை ஓட்டி வந்த சின்னான் அங்கு கூட்டம் இருப்பதைக் கண்டு விசாரித்தான். இதற்குள் பண்ணையார் சின்னானைக் கவனித்து விட்டார். ''வாப்பா சின்னான்,நீதான் எந்தச் சோதனையிலும் ஆத்திரப் படாமே, நிதானத்தை இழக்காமே யோசனை செய்து தீர்க்கமா நடவடிக்கை எடுப்பே... இந்தச் சோதனையிலேயிருந்து மீட்டு, குழந்தையைக் காப்பாத்தப்பா'' என்றார் பண்ணையார்.

கூட்டத்தை விலக்கி விட்டுப் பள்ளத்தைப் பார்த்தான் சின்னான். அதிக ஆழமில்லை. பத்தடிதான் இருக்கும்...

கூட்டத்தைச் சுற்றிப் பார்த்தான். கூட்டத்தில்குரங்காட்டி ஒருவன் தனது 'திம்மா' குரங்குடன் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். சட்டென்று சின்னானுக்கு ஒரு யோசனை தோன்றியது.

மளமளவென்று தான் ஓட்டி வந்த மாட்டின் மூக்கணாங்கயிறு ஒன்றினை அவிழ்த்தான். அது நல்ல நீளமாகவே இருந்தது. தன் கையிலிருந்த கயிற்றோடு இணைத்துக் கட்டினான்.

''யோவ் குரங்காட்டி, உன் குரங்கு எல்லா வித்தையும் செய்யுமாய்யா?'' சின்னான் கேட்டான்.

''செய்யுமுங்க... சொன்ன சொன்னபடி செய்யுங்க.''

''இந்தா... என் கையைப் பிடிச்சுட்டு நடக்கச் சொல்லு பார்ப்போம்...'' சின்னான் ஒரு விரலை நீட்டினான்.

குரங்கு சின்னான் கையைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு நடந்தது.

''யோவ் சின்னான், குழந்தையை எடுக்க வழி சொல்லுன்னா குரங்கோட விளையாடிட்டிருக்கியே!'' கூட்டத்தில் பொறுமையிழந்து ஒரு பெண் கத்தினாள்.



"இங்கே வாய்யா குரங்காட்டி, இந்தா இந்தக் கயிற்றைப் பிடிச்சுக்கிட்டு குரங்கைத் தலைகீழா இந்தப் பள்ளத்திலே இறங்கச் சொல்லு, பார்ப்போம்."

"டேய் ராமா... தலைகீழா கயித்திலே தொங்குடா... அய்யாமாருக்கு வித்தை காட்டு" என்றான் குரங்காட்டி. குரங்கு தலைகீழாய்க் கயிற்றிலே தொங்கியது.

மடமடவென்று அதைப் பள்ளத்திலே இறக்கினான் சின்னான். குரங்கு தலை கீழாய் இறங்கியது.

குரங்காட்டியை அழைத்து பள்ளத்தில் உள்ளே இருக்கும் குழந்தையின் கையை இழுத்துக் கெட்டியாய்ப் பிடிக்கக் குரங்குக்குச் சொல்லச் சொன்னான் சின்னான். குரங்காட்டியும் சொன்னான். குரங்கு குழந்தையின் கையைத் தன் முன் கால்களால் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு, தன் இரு பின் கால்களால் கயிற்றைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டது. கயிற்றை மெதுவாய் மேலே தூக்கினான் சின்னான். குழந்தையும் வந்தது! குரங்கும் வந்தது!

அப்போதுதான் கூட்டத்தின் முகத்தில் சிரிப்பு வந்தது. கண்ணம்மா முகத்தில் மகிழ்ச்சியும் வந்தது!

பண்ணையார் குழந்தைக்கு பிஸ்கட்டும், குரங்காட்டிக்குப் பணமும் கொடுத்தார். இதற்குள் மாந்தோப்பு மன்னார் நான்கு வாழைப்பழங்களைக் கொண்டு வந்து குரங்குக்குக் கொடுத்தார்.

சின்னானுக்கு அவன் யோசனையையும் சேவையையும் பாராட்டி நூறு ரூபாய் தந்தார் பண்ணையார்.

அதை அப்படியே குழந்தையின் கையில் கொடுத்தான் சின்னான்.

சின்னானைப் பாராட்டாதவர்களே இல்லை!

உங்களுக்கும் 'சபாஷ் சின்னான்' — என்று சொல்லத் தோன்றுகிறதல்லவா?



நன்றி உணர்ச்சி

"உனக்கு நன்றியுணர்ச்சி அதிகம் என்பதை இப்படி நீ நாய் வால் பின்னல் போட்டுத்தான் காட்டணுமா?"

— சுதர்ஸன்.

ஒரு வயதுப் பாட்டி

சேகர்: பொழுது போக்குக்கு ஒரு கதை சொல்லுடா கேட்போம்!

ரவி: ஒரு ஊர்ல ஒரு வயதான பாட்டி இருந்தாள்!

சேகர்: நிறுத்துடா கதையை! பாட்டிக்கு ஒரு வயதுதானா இருக்கும்?

— எஸ். ஆர். சின்னமணி



புரியாத மொழி

— ஜமதக்னி

ராமமூர்த்தி எட்டாம் வகுப்பு படிக்கிறான். ஆங்கில மீடியம். அவனுக்குத் தமிழும், ஆங்கிலமும் சரளமாக பேசத் தெரியும். ஆங்கிலம் அருமையாகப் பேசுவான்.

ராமமூர்த்தியிடம் ஒரு கெட்ட பழக்கம். வேண்டுமென்றே ஆங்கிலத்தில் தான் எல்லோரிடமும் பேசுவான். அவர் களுக்கு ஆங்கிலம் தெரியுமா, தெரியாதா என்பதைப் பற்றிக் கவலையும் பட மாட்டான்.

அன்றும் அப்படித்தான். ராமமூர்த்தி, அவன் தாயாருடன் வெளியே போனான். வழியில் ஒரு பெரியவர்,

''தம்பி, தேவநாதன் தெருவுக்கு எப்படிப் போகணும்?'' என்றார்.

ராமமூர்த்தி அவருக்குச் சரியான பாதையை அழகாக விளக்கினான், தமிழில் அல்ல; ஆங்கிலத்தில்.

''தம்பி, எனக்கு ஆங்கிலம் தெரியாது,'' என்றார்.

''ஆங்கிலம் தெரிந்து கொள்ளாமல் இருப்பது உங்கள் தவறு'' என்று ஆங்கிலத்திலேயே சொன்னான். அவன் தாயாருக்கு அந்த இடம் தெரியாததால், அந்தப் பெரியவருக்கு உதவ முடியவில்லை. பெரியவர் வருத்தத்துடன் நகர்ந்தார்.

''டேய், ராமமூர்த்தி, நீ செஞ்சது கொஞ்சம்கூட நல்லாயில்லை. பாவம், வயசிலே பெரியவர் ஒருத்தர் வந்து கேட்கிறார். ஒழுங்காச் சொல்லவேண்டியதுதானே?'' என்று கண்டித்தாள்.

''அட, போங்கம்மா... ஆங்கிலம் புரிஞ்சுக்கக் கூடத் தெரியலை. நல்லா கஷ்டப்படட்டும்'' — என்றான் ராமமூர்த்தி.

''தப்புடா... அது... ஆங்கிலம் தெரிஞ்சவாகிட்டே ஆங்கிலம் பேசலாம். தெரியாதவாகிட்டே அவங்களுக்குத் தெரிஞ்ச பாஷையிலேதான் பேசணும். அந்த பாஷை நமக்குத் தெரியாட்டா கஷ்டம்தான். அப்பக்கூட, அவாளுக்குமுடிஞ்ச அளவு உதவி செய்யணும். அதுதான் நாகரிகம்; பண்பாடு..'' என்றாள் அவன் தாயார்.

அதேபோல இன்னும் ஒரு நாள். கறிகாய்க் காரரிடம் ஆங்கிலத்தில் பேசினான். அவருக்குத் தெரியவில்லை என்று தெரிந்தும், தொடர்ந்து ஆங்கிலத்திலே பேசினான். அவரைக் கேலி செய்தான்.

''டேய், உனக்கு ஆங்கிலம் நன்றாகத் தெரிந்தால், தெரியாத நாலு பேருக்குச் சொல்லிக்கொடு... அவங்க கிட்டே ஆங்கிலத்தில் பேசிப் புண்படுத்தாதே'' — என்று ஒரு நாள் அவன் அப்பா சொன்னார். பிறகும் அவன் மாறவில்லை. காலம்தான் அவனை மாற்ற வேண்டும் என்று அவன் பெற்றோர் பேசாமல் இருந்து விட்டனர்.

அந்த நாளும் வந்தது.

''அப்பா... அப்பா... நான் இந்த விடுமுறையில் டெல்லி போகிறேன்'' — என்றான் ராமமூர்த்தி. அவன் அப்பாவும் சம்மதித்தார். விடுமுறையும் வந்தது.

''டேய், மாமாவுக்கு லெட்டர் போட்டாச்சா?'' என்றார் அவன் அப்பா.

''இல்லேப்பா... அவங்களைத் திகைப்பில் ஆழ்த்தப் போறேன். அட்ரஸ் என்கிட்டே இருக்கு... வாயிலே இருக்கு வார்த்தை! யாரையாவது விசாரித்துக் கொண்டு போறேன்..''

''டேய் உனக்கு இந்தி தெரியாதே...'' தந்தை கவலையுடன் சொன்னார்.

''அதனால் என்ன... ஆங்கிலம் தெரியுமே'' — என்றான்.

குறிப்பிட்ட நாளும் வந்தது. ராமமூர்த்தி டெல்லிக்குப் பயணமானான், தனியாகத்தான். ஒரே குஷி. வண்டியில் போகும்போது சந்தோஷமாகப்

பொழுது போயிற்று. டெல்லிக்குப் போனதும் நன்றாகப் பொழுது போகும். அவன் மாமாவின் பையன் சங்கரும், அவன் அக்கா சுமதியும் இருக்கிறார்களே!

டெல்லி வந்தது. தமிழ்நாடு எக்ஸ்பிரஸிலிருந்து ஆனந்தமாக இறங்கினான். சென்னையைப் போலத்தான் இருந்தாலும் புரியாத பாஷை... தன் சிறிய பெட்டியை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான் தன் மாமாவின் அட்ரஸை எடுத்துப் பார்த்தான்.

Mr. A. Krishnan,
BG / 49A, D. D. A. Flats,
MUNIRKA, NEW DELHI – 67.

என்று எழுதியிருந்தது. யாரையாவது விசாரிக்க வேண்டுமே. இரண்டு இளைஞர்கள் சுவாரஸ்யமாக ஆங்கிலத்தில் பேசிக் கொண்டு வந்தனர். ராமமூர்த்தி அவர்களை அணுகி, அழகான ஆங்கிலத்தில், தன் மாமா வீட்டு விலாசத்தைக் கொடுத்து, அது எங்கிருக்கிறது என்று விசாரித்தான். அவர்கள், சிரித்துவிட்டு, அழகாக இந்தியில் விளக்கினர். ராமமூர்த்தி, "எனக்கு இந்தி தெரியாது" என்று சொன்னவுடன், ஒருவன்,

"மதராஸி... இந்தி கற்றுக் கொள்" —என்று ஆங்கிலத்தில்சொல்லிவிட்டு, ஏளனமாகச் சிரித்தபடியே நண்பனுடன் போய்விட்டான்.

ராமமூர்த்திக்குக் கதிகலங்கிப் போயிற்று.. ஒரு டாக்ஸி டிரைவரை ஆங்கிலத்தில் கேட்டான்.

"இங்கிலீஷ்... மாலூம் நஹி(ம்) (ஆங்கிலம் தெரியாது)" என்றான். ஆயிற்று அரை மணி... ஒரு மணி... ம்கூம்... ஏழெட்டுப் பேரைக் கேட்டாயிற்று... யாரும் அவனுக்கு உதவவில்லை.

அப்பொழுதுதான் உறைத்தது ராமமூர்த்திக்கு. சென்னையில் எவ்வளவு பேரைத்துன்புறுத்தியிருக்கிறான், ஆங்கிலம் பேசி...? தனக்கு ஆங்கிலம் தெரியும் என்ற காரணத்தினால், ஆங்கிலம் தெரியாதவர்களை எப்படிக்கேலி செய்திருக்கிறான்?

நினைத்துப் பார்க்கப் பார்க்க, தான் இவ்வளவு நாள் எவ்வளவு மோசமாக நடந்து கொண்டோம் என்று புரிந்தது.

"என்னப்பா தம்பி... எங்கே போகணும்? ரொம்ப நேரமா நிக்கிறியே!" —தூய வெள்ளை ஆடை அணிந்த ஒரு பெரியவர்தான் தமிழில் அவனைப் பார்த்துக்கேட்டார். தேன் காதில்





பாரதி புதிர் — 5 விடை:

அழகுள்ள மலர்கொண்டு வந்தே—என்னை
அழ அழச்செய்துபின் "கண்ணைமூடிக்கொள்
குழலிலேசூட்டுவேன்" என்பான்—என்னைக்
குருடாக்கி மலரினைத் தோழிக்கு
வைப்பான்.

(கண்ணன் — என் விளையாட்டுப் பிள்ளை)

புத்தர் தன்னுடைய போதனைகளில், ஒவ்வொருவரும் 5 வருடங்களுக்கு ஒரு முறையாவது, ஒரு மரத்தை நட்டு வளர்க்க வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். நாம் வருடம் ஒன்றுக்கு ஒரு மரம் விதம் நட்டு வந்தால், இந்தியாவில் அகத்தங்கள் நீங்கி, நிறைந்த நீர்நிலையும், அதிக உணவுப்பொருட்களும்கிட்டும். இப்படி, நம் நாட்டின் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் ஒவ்வொருவரும் ஆண்டு ஒன்றுக்கு ஒரு மரம் விதம் நட்டு வளர்த்து வந்தால், 5 வருடங்களில் இந்தியா முழுவதும் 250 கோடி மரங்கள் நிறைந்து விடும்.

—ஆர். எஸ். சுப்பிரமணியன்.



<u>பெயில் போர்ட் சைஸ்!</u>

போட்டோ கடைக்காரர்: என்ன தம்பி, எல்லாரும் பாஸ்போர்ட் சைஸ் போட்டோத்தான் கேட்பாங்க. நீ என்னடான்னு, பெயில் போர்ட் சைஸ் போட்டோ எடுக்கணுங்கறியே!

பையன்: மார்ச்சிலேதான் நான் பாஸாகல்லியே! அக்டோபர் பரீட்சை அப்ளிகேஷன்லே ஒட்டத்தான் இந்தப் போட்டோ.

—பால கோவிந்தராஜ்.

பாய்ந்தது போன்ற உணர்ச்சி. அவன் கையிலிருந்த விலாசத் தாளை வாங்கிப் பார்த்தார். "அட... நான் போற வழிதான்... காரிலே ஏறிக்கோ... கொண்டு விடறேன்..." என்றார்.

"ரொம்ப நன்றி ஸார்..." என்றான் ராமமூர்த்தி.

"அட பரவாயில்லேப்பா... நீ எவ்வளவு பேரை விசாரித்தே? இங்கிலீஷ் தெரிஞ்சவங்க கூட இந்தியிலே பதில் சொன்னாங்க. அவங்களாலே டெல்லிக்கு அவமானம்.... நமக்கு ஒரு மொழி தெரிந்திருக்கலாம்... அதுக்காக நம்ம புலமையை, அந்த மொழி தெரியாதவங்ககிட்டே காட்டி என்ன பிரயோஜனம்? ஒரு மொழி நமக்குத் தெரிஞ்சா, நமக்கு அவகாசம் கிடைக்கறப்போ, பிறர்க்குச் சொல்லித் தரலாம்... அவங்க மேலே திணிக்கக் கூடாது..." — தன்னைப் பற்றிச் சொல்வது போல இருந்தது, காரில் போகும் பொழுது தன்னுடைய நடத்தையை அவரிடம் சொன்னான்.

"அட... அட... ரொம்ப தப்பு... பரவாயில்லே... இனிமேல் திருந்திடுவே, இல்லையா...?"

"நிச்சயமாக" என்றான், ராமமூர்த்தி.

"அப்ப, உன்கிட்ட இந்தியில் பதில் சொன்னவர்களுக்கு நன்றி சொல்லணும்" என்று சொல்லிச் சிரித்தார்.

ராமமூர்த்தியும் சிரித்தான்.

அரசனை மணந்த பெண்பூனை

குழந்தைக் கவிஞர்

''என்னை அழகிய மனிதப் பெண்ணாய்
இறைவா, மாற்றிட வேண்டுகிறேன்''
என்றே தினமும் வேண்டிக் கொண்டது,
இரவும் பகலும் பெண்பூனை.

கண்ணைக் கவரும் ஒளியுடன் ஒருநாள்
காட்சி அளித்தனர் கடவுளுமே,
'எண்ணிய படியே பெண்ணாய் மாறுக'
என்றே இறைவன் வரம் தந்தார்.

* * * * *

''ஆஹா! ஆஹா! இவள்போல் மிகவும்
அழகிய பெண்ணைக் கண்டதில்லை.
மேகம் நடுவே பூரணச் சந்திரன்
விளங்குதல் போல இருக்கின்றாள்.''

—இப்படி அவளைக் கண்டதும் உடனே
எண்ணினன் மன்னன் ஒருவனுமே,
அப்பொழு தேஅப் பெண்ணை அழைத்து
அன்புடன் மணந்து கொண்டனனே.

பெண்ணாய் மாறி, அரசியும் ஆன
பூனை அன்று இரவினிலே,
சுண்டெலி ஒன்றைக் கண்டதும் உடனே
துள்ளிக் குதித்துத் துரத்தியதே!




''ஐயோ! என்ன காரணம்?'' என்றே
அரசன் தொடர்ந்து ஓடினனே.
கையால் பிடித்துச் கண்டெலி தன்னைக்
கடித்துத் தின்றதைக் கண்டனனே.

''எலியைப் பிடித்துத் தின்றிடும் உன்னை
எப்படி என்றன் மனைவி என்பேன்?
உலகம் பழிக்கும்''என்றே கூறி
உதைத்தே விரட்டினன் அப்பொழுதே.

அரண்மனை விட்டு வெளியில் வந்ததும்,
'ஆண்டவ னேநீ என்மீது
இரக்கம் காட்டுக. மீண்டும் பூனையாய்
என்னை மாற்றுக' எனவேண்ட,

கடவுள் அதனின் எதிரில் வந்தே
கலகல என்று சிரித்தனரே!
உடனே பெண்ணின் உருவம் மறைந்தது;
உட்கார்ந் திருந்தது பெண்பூனை!

'மனிதப் பெண்ணாய் மாறிய பிறகும்
மறந்திட வில்லை உன்குணத்தை.
உனது குணமே காட்டிக் கொடுத்தது
உணர்வாய்'' என்றனர் கடவுளுமே.






இரண்டு கோணங்கள்

''தம்பி! இந்த நோட்ஸை வாங்கிக்க... உன் வேலை பாதியைச் செய்து வைக்கும்...''

''அப்படியா? அப்ப இரண்டு காப்பி கொடுங்க!''

—குமார்.

ஆரோக்கியமான போட்டி



குந்தவை

தினமும் பள்ளியிலிருந்து வீடு திரும்பியதும் தன் தாயிடம் அன்று பள்ளியில் நடந்த நிகழ்ச்சிகளை பிரகாஷ் ஒன்று விடாமல் ஒப்புவிப்பான். அதன் பிறகே சீருடைகளைக் கழற்றுவான்; கைகால்களைக் கழுவிக் கொண்டு டிபன் சாப்பிடுவான். அன்று மாலை வழக்கத்திற்கு மாறாக, 'உம்' என்று முகத்தை வைத்துக் கொண்டு அம்மாவுடன் பேசாமல் சோபாவில் உட்கார்ந்திருந்தான். அது கண்டு கலக்கமடைந்த தாய், "ஏண்டா கண்ணா! உடம்பிற்கு ஒன்றுமில்லையே! ஏன்?, என்னவோ போல இருக்கிறாய்?" என்று கேட்டாள்.

"ச்சு!" என்று சூள் கொட்டிய பிரகாஷ் தாய் தூண்டிக் கேட்டவுடன் பதில் சொன்னான். "அம்மா! இன்னிக்கு ஸ்கூலிலேயிருந்து திரும்பும் போது என் நண்பன் கார்த்திக் கூப்பிட்டானே என்று அவன் வீட்டிற்குப் போனேன். அவன் வீடு எவ்வளவு பெரிசு தெரியுமா? அவன் படிக்கறதுக்கும் தூங்கறதுக்கும் தனி அறை! அந்த அறையிலே படிக்கிறதுக்கு வசதியா மேஜை, நாற்காலி, மேஜை விளக்கு, அலாரம் கடிகாரம், பூ போம் மெத்தை என்று என்னவெல்லாம் இருக்கு தெரியுமா?"

"பூ! இதுதானா! அவனோட அப்பா பணக்காரர். அதனாலே அவராலே அவனுக்கு அப்படியெல்லாம் வசதி செய்து தர முடிகிறது. எல்லாராலும் அப்படி இருக்க முடியுமா? அடுத்தாப்பல ரவியைப் பார். அவன் குடியிருக்கிறது ஒரே அறை கொண்ட சின்ன இடம். ஆனால், நாமோ நாலு அறை கொண்ட வீட்டிலே குடியிருக்கோமே! இது தேவலை இல்லையா?"

"போம்மா!" என்று அவன் சிணுங்கியதிலிருந்து தனது பதில் அவனுக்குத் திருப்தியைத் தரவில்லை என்று உணர்ந்த அவன் தாயாகிய கலா பேச்சை மாற்றினாள். "உனக்குப் பிடிக்குமே என்று தோசை வார்த்து, தக்காளி சட்னி பண்ணியிருக்கேன், வா, சாப்பிடு!"

"போம்மா! இட்லி, தோசை, சப்பாத்தி, தவிர வேறே டிபனே பண்ணத் தெரியாதா உனக்கு? என் சிநேகிதன் அருண் வீட்டில் ஜிலேபி, அல்வா, பஜ்ஜி, போண்டா என்று தினுசு தினுசா டிபன் பண்ணுவாங்களாம். அவன் அடிக்கடி சொல்றான். அது மாதிரி செய்தால் என்ன?"

கலா திகைப்புடன் தன் மகனைப் பார்த்தாள். அவன் தனது பணக்கார சிநேகிதர்களோடு தன்னை ஒப்பிட்டுப் பார்த்து மனம் குழம்பி, இருக்கிறான் என்பதை உணர்ந்தாள். ஒருவிதப் பொறாமை உணர்ச்சியோடு, தானும் அவர்களைப் போல இருக்க வேண்டும் என்று நினைக்கிறான் என்பது நன்கு புலப்பட்டது. இத்தகைய மனநிலையில்

அவன் இருக்கும்போது, அவள் கூறும் நல் உபதேசங்கள் யாவும் விழலுக்கு இரைத்த நீராகும் என்பதை உணர்ந்து மௌனமானாள்.

* * * * * * *

"பிரகாஷ்! நாளை ஞாயிற்றுக் கிழமை. மத்தியானம் என் சிநேகிதி ரமா வீட்டிற்குப் போக வேண்டும். அவள் மாலை டிபனுக்குத் தன் வீட்டிற்கு நம்மை அழைத்திருக்கிறாள்" என்று கலா சொன்னாள்.

அதன்படி ஞாயிறு மாலையில் பிரகாஷை அழைத்துக் கொண்டு ரமாவின் வீட்டிற்குச் சென்றாள். கலாவையும் பிரகாஷையும் சந்தோஷத்துடன் வரவேற்ற ரமா, தன் பையன் தீபக்கையும் அறிமுகம் செய்து வைத்தாள். தீபக்கும் பிரகாஷின் வயதுப் பையன் தான். ஆதலால், இருவரும் நன்கு பழகலானார்கள்.


டிபன்சாப்பிட்டு அனைவரும்பேசிக் கொண்டிருக்கும் போது, "தீபக்! நீ போன வாரம் பாரதியார் கட்டுரைப் போட்டியில்முதல்பரிசு வாங்கினாயே, அந்தப் புத்தகத்தை மாமிக்குக் காட்டு", என்றாள் ரமா.

"அட! இது முதல் பரிசாக வாங்கினதா!" என்று வியந்தவாறு அந்தப் புத்தகத்தைப் புரட்டினாள் கலா.

"இவனோட பள்ளியில் எந்தப் போட்டி நடந்தாலும் முதல் பரிசு இவனுக்குத்தான்! பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி, மாறுவேடப்போட்டி — இப்படிஎல்லாத்திலேயும்முதல்பரிசு பெற்றுப் பரிசுகளாகக் குவித்து விடுகிறான்! தவிர படிப்பாலும் இவனை யாராலும்முந்தமுடியவில்லை. அதிலேயும் ஒவ்வொரு ஆண்டும் முதல்தான். அவன் வாங்கின பரிசுகளை வைக்கவே தனி அலமாரி வைத்திருக்கிறேன். இதோ பாருங்கள்" என்று பெருமையுடன் கூறி அங்கிருந்த அலமாரியைத் திறந்து காட்டினாள்.

"தீபக், தொடர்ந்து வெற்றிமேல் வெற்றி பெறு" என்று கலா தீபக்கைப் பாராட்டிவிட்டு, "நாழியாகிறது, நான் கிளம்பட்டுமா?" என்று கூறி அவர்களிடமிருந்து விடைபெற்றுப் பிரகாஷுடன் கிளம்பினாள்.

வீடு வந்து சேர்ந்ததும், "பிரகாஷ்! தீபக்கைப் பார்த்தாயா? உன் வயது





தான் அவனுக்கு. ஆனால், படிப்பிலும் மற்றவிஷயங்களிலும் எத்தனை சூடிகை பார். பரிசுகளாக வாங்கிக் குவித்திருக்கிறானே! நீயும் தீபக் மாதிரி படித்து, பரிசுகளாகக் குவித்தால் எத்தனை நன்றாக இருக்கும்?'' என்றாள் கலா.

''போம்மா! எல்லோராலேயும் தீபக் மாதிரி மார்க் வாங்க முடியுமா? கடவுள் அவனுக்கு நிறைய மூளையைக் கொடுத்திருக்கிறார். படித்துப் பரிசுகளாய்க் குவிக்கிறான். இதிலே அவனோடு போட்டி போட முடியுமா?'' என்றான்.

கலாவிற்கு இப்பொழுது பிடி கிடைத்துவிட்டது. அவள் மிருதுவான குரலில் சொன்னாள்: ''பிரகாஷ்! கொஞ்ச நாளைக்கு முன்னால் நீ உன்னை உன் பணக்கார நண்பர்களோடு ஒப்பிட்டு அவர்களைப் பார்த்துப் பொறாமைப் பட்டாய். அவர்கள் மாதிரி வரணும் என்று போட்டியிடப் பார்க்கிறாய். இதைப் போலவே நீ தீபக்குடன் உன்னை ஒப்பிட்டுக் கொண்டு அவனைப் போலவே நன்கு படித்து அவனுக்கு இணையாகப் பரிசுகளைக் குவிக்க வேண்டுமென்று போட்டியிட முயன்றால், நான் சந்தோஷப்பட்டிருப்பேன். ஏனென்றால், தீபக்குடன் நீ பொறாமைகொண்டுபோட்டியிடுவது ஆரோக்கியமான போட்டி. அதன் விளைவாய் நீ நன்கு படித்து முன்னேறுவாய். நீ நன்கு படித்து முன்னேறுவாய். இப்போது உன் பணக்கார நண்பர்களைப் பார்த்து ஏங்குகிறாயே, அதை விடப் பல மடங்கு வசதிகளை உன் உழைப்பின் மூலம் நீ பிற்காலத்தில் அடையலாம். இப்பொழுது சொல். நீ யாருடன் போட்டி வைத்துக் கொள்ளப் போகிறாய்? படிப்பில் கெட்டிக்காரனான தீபக் போன்ற நண்பர்களுடனா? அல்லது பெற்றோர் சம்பாதித்த செல்வத்தில் சுகம் காணும் நண்பர்களுடனா?''

பிரகாஷுக்கு இப்பொழுது நன்கு விளங்கி விட்டது. முகம் மலர தன் தாயைப் பார்த்தவன் ''அம்மா, உங்கள் பையனைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா?'' என்றவாறு அம்மாவின் மடியில் தொப்பென்று விழுந்தான்!





ஆட்டுக்குட்டி பாட்டு யார் எழுதிய பாட்டு ?

தேவி நாச்சியப்பன்

'மேரி வைத்திருந்தாள் ஒரு சின்ன ஆட்டுக்குட்டி' (Mary Had a Little Lamb) என்று தொடங்கும் ஆங்கிலப் பாடலை சின்ன வயதிலே உங்களில் பலர் பாடியிருக்கலாம். சிலர், பாடாது போனாலும் கேட்டிருக்கலாம்.

இந்தப் பாடல் பிறந்தது அமெரிக்காவில் — 155 ஆண்டுகளுக்கு முன்பு!

இந்தப் புகழ்பெற்ற பாடலை எழுதியவர் யார்? சாரா ஜோசப் ஹேல் (Sarah Joseph Hale) என்ற அம்மையார்தான் இப்பாடலை எழுதியவர். 1830—ஆம் ஆண்டு பாஸ்டன் நகரில் 'குழந்தைகளுக்கான பாடல்கள்' என்ற பெயரில் ஒரு சிறு புத்தகத்தை இவர் வெளியிட்டார். அடுத்த ஆண்டிலே இந்தப் பாடலுக்கு இசை அமைக்கப்பட்டு மீண்டும் இசையுடன் வெளியிடப்பட்டது. அமெரிக்கக் குழந்தைகள் எல்லாருக்கும் இது நன்கு அறிமுகமானது 1837—ஆம் ஆண்டில்தான். காரணம், இது ஒரு பள்ளிப் பாடப் புத்தகத்தில் அப்போதுதான் சேர்க்கப்பட்டது. இந்தப் பாடல் மூலமாக அந்தப் பாடப் புத்தகத்திற்கு நல்ல பெயர்!

பெரும்பாலான பள்ளிகளில் அந்தப் புத்தகம் பாடமாக வைக்கப்பட்டது. குழந்தைகள் மட்டுமா இந்தப் பாடலைத் தெரிந்து கொண்டார்கள்? அவர்கள் பாடுவதைக் கேட்டுக் கேட்டு அவர்களின் பெற்றோர்களும் தெரிந்து கொண்டார்கள். நாள் ஆக ஆக இப் பாடல் உலகமெங்கும் பரவியது. ஆங்கிலம் படித்த பிள்ளைகளெல்லாம் இப் பாடலைப் பாடி மகிழ்ச்சி அடைந்தனர். இந்தப் பாடல் மிகவும் பிரபலமாகி, பட்டுக் கைக்குட்டைகளில் கூட அச்சடித்து விற்கப்பட்டனவாம்!

இந்தப் பாடலை எழுதிய ஹேல் அம்மையார் அந்தக் காலத்தில் மிகப் பிரபலமாயிருந்த ஒரு பெண்களுக்கான பத்திரிகையின் ஆசிரியராகப் பணி புரிந்து வந்தார். குழந்தைகளை எப்படி வளர்ப்பது, எவ்வாறு சமையல் செய்வது, எப்படி வீட்டை அழகாக வைத்துக் கொள்வது, எவ்வாறு நாகரிகமாக ஆடை அணிவது போன்ற பல பயனுள்ள விஷயங்களை அந்தப் பத்திரிகையில் எழுதி வந்தார். அதேசமயம் பெண் கல்வியின் அவசியத்தையும், பெண்களுக்கான உரிமைகளையும் வற்புறுத்தி வந்தார். அப்பத்திரிகையை எல்லாரும் விரும்பிப் படித்ததால், 90 வயதுவரை அப்பத்திரிகையின் ஆசிரியராகப் பணிபுரிந்தார். அந்தக் காலத்தில் எல்லாப் பத்திரிகைகளிலும் ஆண்களே ஆசிரியராக இருந்தார்கள். இவர் ஒருவர் மட்டுமே பெண் பத்திரிகை ஆசிரியர்!

பெண்களுக்காகப் பல விஷயங்களை எழுதிவந்த ஹேல் அம்மையார், குழந்தைகளுக்கும் எழுத வேண்டுமென ஆசைப்பட்டார். தமது 42 வது வயதில் 'மேரியின் ஆட்டுக் குட்டி' பாட்டை அவர் எழுதினார். அப்போது வக்கீல்தொழில்பார்த்துவந்த அவரது கணவர் இறந்து விட்டார். அவர் இறந்து 2 வாரங்கள் சென்ற பிறகு, ஐந்தாவது குழந்தையை இவர் பெற்றெடுத்தார். ஐந்து குழந்தைகளையும் கவனித்துக் கொண்டு, பத்திரிகைக்கும் எழுதிக்கொண்டு ஓய்வு ஒழிவின்றி

இருந்த ஹேல் அம்மையார், குழந்தைப் பாடல்கள் எழுதவும் முன்வந்தார்.

அவர் முதல் முதலாக வெளியிட்டாரே "குழந்தைகளுக்கான பாடல்கள்" என்று ஒரு புத்தகம்,அதன் முன்னுரையில், "அமெரிக்காவின் நல்ல குழந்தைகளே, உங்களுக்கு மகிழ்ச்சி ஊட்டவும், நல்லறிவு புகட்டவுமே இந்தப் புத்தகத்தை நான் எழுதினேன். இதிலுள்ள சிறுசிறு பாடல்கள் உங்களுக்கு உண்மைகளைப் போதிக்கும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

அந்தப் புத்தகத்தில் 'மேரியின் ஆட்டுக் குட்டி'யுடன் 'நான் பார்க்கும் போதெல்லாம் மரத்தின் மீதோ, புதரின் மீதோ......' என்று தொடங்கும் "பறவைகள்" (Birds) என்ற இனிய பாடலும் வேறு சில பாடல்களும் இருந்தன. ஆனாலும், மேரியின் ஆட்டுக் குட்டி, பிள்ளைகளின் உள்ளங்கவர்ந்த அளவு, அவை கவரவில்லை.

இன்னொரு வியப்பான செய்தி! ஆங்கில மழலைப் பாட்டுப் (Nursery Rhymes) புத்தகம்' ஒன்றை எடுத்துப் பார்த்தால், அதில் 'மேரியின் ஆட்டுக் குட்டி' பாட்டில் 8 வரிகளே இருக்கும். ஆனால், ஹேல் அம்மையார் எழுதிய பாட்டு 24 வரிகளைக் கொண்டது! முதல் 8 வரிகளில்,

'மேரியின் ஆட்டுக் குட்டி அவளுடன் பள்ளிக்கு வந்ததைப் பார்த்து, அங்கிருந்த பிள்ளைகள் சிரித்தார்கள்' என்பதுடன் முடிகிறது.

ஆனால், மேலும் உள்ள 16 வரிகளில்,

ஆசிரியர் அதைத் துரத்தினார்.
அது போகாமல் மேரியின்
அருகில் சென்று அவள் கைகளில்
தலையை வைத்துக் கொண்டது.
'எனக்குப் பயமில்லை. நீ என்னை
எந்த ஆபத்திலிருந்தும் காப்பாற்று
வாய்' என்று ஆட்டுக்குட்டி சொல்
வது போல் அது இருந்தது.
'இந்த ஆட்டுக் குட்டி, இவ்வளவு
பிரியமாக இருப்பது எதனால்?'
என்று குழந்தைகள் கேட்க, 'சாது
வான பிராணிகளிடம் அன்பாக
நடந்து கொண்டால் அது நீங்கள்
சொன்னபடி கேட்கும்' என்று ஆசி
ரியர் பதிலளிக்கிறார்-என்று கூறப்
பட்டிருக்கிறது.

'இந்தப் பதினாறு வரிகளில் உள்ள நீதியைக் குழந்தைகள் விரும்பிப் பாடுவார்கள்;: நினைவிலே வைத்துக் கொள்வார்கள் என ஹேல் அம்மையார் எதிர்பார்த்தார். ஆயினும், முதல் 8 வரிகளே குழந்தைகளால் பெரிதும்' விரும்பப் படுகின்றன; தொடர்ந்து பாடப்படுகின்றன.

நாளடைவில் ஹேல் அம்மையாரின் 'குழந்தைகளுக்கான பாடல்கள்' என்ற புத்தகம் மீண்டும் அச்சிடப் படாமலே இருந்தது. அப்போது வில்லியம் எச். மக்கஃபி என்பவர் மேரியின் ஆட்டுக்குட்டி பாடலை அவரது



புத்தகத்தில் சேர்த்து வெளியிட்டார். ஆனால், அதற்கான உரிமையை அவர் ஹேல் அம்மையாரிடம் பெறவுமில்லை. சன்மானம் கொடுக்கவுமில்லை. ஹேல் அம்மையாரின் பெயரையே அவர் வெளியிடவில்லை! இதனால், அப்பாடலைப் பாடிய லட்சக்கணக்கான குழந்தைகள் அதை இயற்றியவர் யார் என்பதை அறியவாய்ப்பில்லாமலேபோய் விட்டது!

ஹேல் அம்மையார் 90 வது வயதில் பத்திரிகைத் தொழிலிலிருந்து ஓய்வு பெற்ற போது 72 வயதுடைய மேரி டெய்லர் என்ற பெண்மணி, "நான் என் சிறு வயதில் வளர்த்த ஆட்டைப் பற்றியதே 'மேரியின் ஆட்டுக்குட்டி' என்ற பாடல். அதில் வரும் மேரி என்பது நான்தான். உண்மை என்னவென்றால், ஒரு நாள் என் குறும்புக்கார அண்ணன் அந்த ஆட்டைப் பள்ளிக்குக் கொண்டு வந்தான். பள்ளியில் என்னையும் என் ஆட்டையும் பார்த்த ஜான் ரௌல்ஸ்டோன் என்ற இளைஞர் மறுநாள் 12 வரிகளில் ஒரு பாட்டை எழுதி வந்தார்" என்று கூறினார்.


ஆனால், "இந்தப் பாடலை இயற்றியவர் எங்கே?" என்று கேட்ட போது 'அவர் இளம் வயதிலேயே இறந்து விட்டார்!' என்று மேரி டெய்லர் கூறினார். 'ஆட்டுக் குட்டி எங்கே?' என்று கேட்டதற்கு, 'அதை ஒரு பசு கொம்பினால் குத்திக் கொன்று விட்டது!' என்றார்.

ஹேல் அம்மையாரோ "இது நான் எழுதிய பாடல்தான். நான் எந்தப் பிராணியையும் வளர்க்கவில்லை. பாடலின் கருத்து முழுவதும் என் கற்பனையே! நான் இப்பாடலை வெளியிட்ட போது மேரி டெய்லர் உள்ளூரில்தான் இருந்திருக்கிறார். இவ்வளவு காலமும் சும்மா இருந்துவிட்டு, இப்போது, பாட்டிலே வரும் மேரி நான்தான் என்று கூறுகிறாரே!" என்று அறிவித்தார்.

ஹேல் அம்மையார்தான் 'மேரியின் ஆட்டுக் குட்டி' பாடலை எழுதியவர் என்பதை ஆராய்ச்சியாளர்கள் நன்றாக ஆராய்ந்து உறுதிப்படுத்தி விட்டனர்.

மேரியை விட்டு ஆட்டுக்குட்டியைப் பிரிக்கப் பார்த்தனர்; பலிக்கவில்லை. ஹேல் அம்மையாரை விட்டு 'மேரியின் ஆட்டுக் குட்டி' பாடலைப் பிரிக்கப் பார்த்தனர். அதுவும் பலிக்கவில்லை.

நன்றி: THE NEW YORK TIMES – MAGAZINE



"ஏ, பாப்பா, நீங்களெல்லாம் ஒரே குலத்தைச் சேர்ந்தவங்க என்கிறாயே, நீங்கள் எந்தக் குலம்?"
"கோகுலம்."
—அனுராதா (10422), மாங்காடு.

"எதற்கு என்னிடம் நூறு ரூபாய் தருகிறாய்?"
"ஒரு கிலோ சர்க்கரை விலை ரூ. 2.50 வீதம் பத்து கிலோ என்ன விலை'ன்னு நேத்து வீட்டுக் கணக்குத் தந்தீர்களே டீச்சர்! எங்கப்பாவுக்கு 40 கிலோ சர்க்கரை வேணுமாம். உங்களை வாங்கித் தரச் சொன்னார்!"
—சுதர்ஸன்.



காரணம் இதுதான்

- மலரவன் -



அந்த அஞ்சலட்டையை ஆவலுடன் பார்த்தான் அருண்.

முத்து முத்தான கையெழுத்து!

இளவரசன் எழுதி இருந்தான்.

கடிதத்தை ஆர்வத்துடன் படிக்கிறான்.

அன்பு அருண்,

நலமுடன் இருப்பாயென நம்புகிறேன்.

ஓர் இனிக்கும் செய்தி!

வரும் ஞாயிறு காலை 8.30 மணிக்கு 'வண்ண மலர்கள்' சிறுவர் வானொலி நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்கிறேன். தயை செய்து நிகழ்ச்சியைக் கேட்கவும்.

இப்படிக்கு அன்பு நண்பன்,
இளவரசன்.

தனது நண்பன் வானொலி நிகழ்ச்சியில் பங்கு கொள்வது அருணுக்கு மகிழ்ச்சிதான்! இருந்தாலும்....! மனதின் மூலையில் ஒரு உறுத்தல்....! ம்... ஏன் இப்படிச் செய்தான்....?

இருவரும் பழகிய நாள் முதல் தனித் தனியாக எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டதில்லை....... ஆனால் இப்போது..... மாறிவிட்டானா?

அருணும், இளவரசனும் ஆறு மாதத்திற்கு முன்புவரை திரு. வி. க. நகரில் அடுத்தடுத்த வீட்டில் வசித்தவர்கள்.

ஒன்றாகப் பள்ளிக்குச் செல்வார்கள். சேர்ந்து விளையாடுவார்கள், சேர்ந்துபடிப்பார்கள். ஒருவரைவிட்டு ஒருவர் பிரியவே மாட்டார்கள்.

அப்போதுதான்.....

அடடா, அந்த மே மாதம் ஏன்தான் வந்ததோ?

அந்தச் செய்தி....! அப்பப்பா...! அவர்களை என்னமாய்த் தாக்கியது.

இளவரசனின் அப்பா வேறு அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுவிட்டாராம்.

அலுவலகத்திற்கு அருகே உள்ள நேரு நகரில் வீடு பார்க்கிறார்களாம்.

திரு. வி. க. நகருக்கும், நேரு நகருக்கும் தொலைவு அதிகம்.

வேதனையான செய்திதான்.

என்ன செய்ய?

அவர்கள் வேதனை வீடு மாற்றத்தைத் தடை செய்ய முடியவில்லையே!

ஒருநாள் அதிகாலை விழி நீரைத் துடைத்தபடி இருவரும் பிரிந்தார்கள்.

இருப்பிடம், பள்ளிக்கூடம் மாறினாலும் அவர்களுக்குள்ள ஒரே ஆறுதல் இருவரும் அதே ஊரில் வாழ்வதுதான்.

மூன்று மாதங்களுக்கு முன்பு அலுவலகத்திலிருந்து வந்த அப்பா,

"அருண்; இந்த ஞாயிற்றுக்கிழமை உங்களைப் போன்ற பசங்களுக்காக 'இரு நண்பர்கள்' என்ற படம் 'அன்பு' திரையரங்கில் காட்டுகிறார்களாம்... போகலாமா?" என்றார், அவன் கன்னத்தைச் செல்லமாகத் தட்டியபடி.

"ஓ.... போகலாம்பா" என்று துள்ளிய அருண் அடுத்த நொடி அப்பாவை ஏக்கத்துடன் பார்த்தான்.

"என்ன அருண்... என்ன வேண்டும்?" என்றார்.

"ம்.... நம்மோட இளவரசனும் வந்தா...." இழுத்தான் அருண்.

"மகிழ்ச்சி.... இளவரசனுக்குத் தகவல் கொடுத்து விடு.... எல்லாரும் சேர்ந்து போகலாம்...."

"அப்பான்னா அப்பாதான்..." என்று கூறியபடி குதித்தோடினான் அருண்.

அன்று திரையரங்கில் இருவரும் ஒன்றாக அமர்ந்து திரைப்படம் பார்த்தது எத்தனை இன்பமாக இருந்தது!

கடந்த மாதம் தொலைக்காட்சி நிலையத்தார் சிறுவர் நிகழ்ச்சி ஒன்றிற்காக அருணை அழைத்திருந்தார்கள்.

'தொலைக்காட்சி நிகழ்ச்சியில் இளவரசனும் கலந்து கொண்டால்....!' அருணின் எண்ணம் இவ்வாறு ஓடியது.

அன்று தொலைக்காட்சி நிலையத்தில் நுழைந்தவுடன் நேரே நிகழ்ச்சி தயாரிக்கும் மாமாவிடம் சென்ற அருண், தனது நண்பன் இளவரசனைப் பற்றி எடுத்துக் கூறி அவனுக்கும் வாய்ப்புக் கொடுக்கும்படி கேட்டான்.

அந்த மாமாவின் கண்கள் மலர்ந்தன.

கடுமையான காய்ச்சலின் காரணமாக தனது மகன் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள இயலாது என ஒரு அப்பா கடிதம் எழுதி இருந்தார்.

அக்கடிதத்தை வைத்துக் கொண்டு அந்த மாமா தவித்துக் கொண்டிருந்த போதுதான் அருண் இளவரசனைப் பற்றிக் கூறினான்.

கேட்க வேண்டுமா?

அருணின் கோரிக்கை ஏற்கப்பட்டது.

உடனே இளவரசனை வரவழைக்க ஏற்பாடும் செய்துவிட்டார்கள்.

தொலைக்காட்சியில் இருவரும் ஒன்றாகத் தோன்றியபோது.... ஊரே பாராட்டியது, போங்கள்!

ஆனால்.... இப்போது....?


அவனை விட்டுவிட்டு இளவரசன் மட்டும் தனியாக வானொலி நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறான்!

'ம்.... அந்த நிகழ்ச்சியைக் கேட்கத்தான் வேண்டுமா....?'

"டேய் அருண்" — உரிமை அழைப்புகள்! உற்சாகக் குரல்கள்!!

அத்தெரு விளையாட்டுத் தோழர்கள்தான் —

கூட்டமாக வீட்டிற்குள் நுழைந்து கொண்டிருந்தார்கள்



நாளைக் காலை அவர்கள் குழுவிற்கும், பக்கத்துக் குடியிருப்பு சிறுவர்களுக்கும் 'கிரிக்கெட்' போட்டியாம். அவனையும் விளையாட அழைக்க வந்திருக்கிறார்கள்.

ஒரு நிமிடத் தவிப்பு!

நாளை விளையாட்டு நடக்கும் நேரத்தில் இளவரசனின் நிகழ்ச்சி ஒலி பரப்பாகும்.

விளையாடச் செல்வதா? நிகழ்ச்சியைக் கேட்பதா?

உரிமையுடன் அவனைத் தொட்டுக் கொண்டும், ஒட்டிக் கொண்டும் எத்தனை ஆர்வத்துடன் அழைத்துக் கொண்டிருக்கிறார்கள் இந்த நண்பர்கள்!

ஆனால்.... அந்த இளவரசன்.... அருணை ஒதுக்கித் தள்ளிவிட்டானே!

'கிரிக்கெட்' விளையாட ஒப்புக் கொண்டான்.

மறுநாள் விளையாட்டுப் போட்டியில் அருண் குழு வெற்றி பெற்ற போது அவன் மகிழ்ந்து போனான்.

இளவரசன் அவனை நோக வைத்ததற்கு இந்த வெற்றி அவனுக்கு ஆறுதல் கொடுத்தது.

அன்று மாலை உற்சாகமாக மிதி வண்டியில் அருண் கிளம்பினான்.

கடற்கரைச் சாலையில் சென்று கொண்டிருக்கும் போது....

சற்றுத் தொலைவில் நடந்து வருவது யார்?

இளவரசன்!

'திக்'கென்றது அருணுக்கு.

ஐயயோ நிகழ்ச்சியைக் கேட்கவில்லையே! அதைப் பற்றித்தானே இளவரசன் முதலில் கேட்பான்? என்ன செய்யலாம்? திரும்பிப் போகவும் முடியாது. இந்நேரம் அவன் பார்த்திருப்பான்.

'சட்'டென்று அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

மிதிவண்டியை வேகமாக செலுத்தினான்.

நண்பனை நெருங்கும்போது வலக் கையை உயரே தூக்கி ஆட்டியபடி, ''இளவரசன், நான் மிக அவசரமாகப் போகிறேன். வானொலி நிகழ்ச்சி சிறப்பாக இருந்தது'' என்று உரக்கக் கூவியபடி அவனை நொடியில் கடந்துவிட்டான்.

அன்று சனிக்கிழமை.

அருணுக்கு ஓர் அஞ்சலட்டை வந்தது.

அன்பு அருண்,

எதிர்பாராத விதமாக கடந்த வாரம் எனது நிகழ்ச்சி வானொலியில் ஒலி பரப்பாகவில்லை. இந்த வாரம் ஞாயிறு ஒலி பரப்புகிறார்கள். கேட்கவும்.

அன்புடன்,
இளவரசன்.

அதிர்ந்துவிட்டான் அருண்!

'நண்பனிடம் பொய் கூறிவிட்டோமே' — மனம் படாதபாடுபட்டது.

மறுநாள் காலை எட்டு மணிக்கே வானொலிப் பெட்டி அருகே அமர்ந்து கொண்டான் அருண்.

எட்டு முப்பதுக்கு சிறுவர் நிகழ்ச்சி ஆரம்பமானது.

முதலில் வேறு பல சிறுவர், சிறுமியர் பாட்டுப் பாடினார்கள், கதை கூறினார்கள்.

அடுத்து வானொலி மாமா கூறினார்.

''இப்போது இளவரசன் என்ற தம்பி பேசுவான்...''

காதைத் தீட்டிக் கொண்டான் அருண்.

''எல்லோருக்கும் வணக்கம்....'' கணீரென்ற குரலில் ஆரம்பித்தான் இளவரசன்.

''..... என் நண்பனைப் பற்றி 'வானொலி மாமா' கூறச் சொன்னார். என் நண்பன் யார் தெரியுமா....? அருண்....''

இதைக் கேட்ட அருணுக்கு இதயமே நின்றுவிடுவதுபோன்ற உணர்வு! 'குப்'பென்று வியர்த்துவிடுகிறது.

இளவரசன் தொடர்ந்தான்.

''அருணோடு நான் ஒரே பள்ளியில் படித்த அந்த இனிய நாட்களை என்னால் மறக்கவே முடியாது....

அருண் என்றால் அன்பு!

அருண் என்றால் அடக்கம்!


அருண் என்றால் பண்பு! — அவனை எப்படிப் புகழ்ந்தாலும் தகும்....

சொல்லிக் கொண்டே போகிறான் இளவரசன்.

அருணின் கண்களிலிருந்து நீர் கசிந்து கன்னத்தில் வழிந்து கொண்டிருக்கிறது.

உருவகக் கதைகள்

மலையமான்



அடுத்த வீட்டு அதிரசம்

ஒரு காட்டில் அழகான ஒரு முயல் இருந்தது. அது ஒரு முறை சில குட்டிகளைப் போட்டது. போட்ட குட்டிகளில் ஒன்றைத் தவிர மற்றவையெல்லாம் பிறவிலங்குகளிடம் அகப்பட்டும் நோய்ப்பட்டும் மடிந்தன. ஆகையால், மிஞ்சியிருந்த ஒரு குட்டியை மிகுந்த பாசத்தோடு வளர்த்து வந்தது. முயல் குட்டி கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்தது.

ஒருநாள் முயல்குட்டி தனக்கு அதிரசம் வேண்டும் என்று தன் தாயிடம் கேட்டது. தாயிடம் போதிய பணம் இல்லை. இருந்தாலும், துன்பப்பட்டும், அடுத்த வீட்டில் கடன் வாங்கியும் தன் குட்டியின் விருப்பத்தை நிறைவேற்ற முயன்றது. மிகச் சுவையான அதிரசங்களைச் சுட்டு, அவற்றைத் தட்டில் அடுக்கி வைத்தது, தன் அருமைக் குட்டியை அருகில் உட்கார வைத்து, அதற்கு அன்போடு ஊட்டத் தொடங்கியது.

இரண்டு வாய் சாப்பிட்ட முயல் குட்டி எழுந்து நின்றது. "அம்மா, அதிரசம் நன்றாகவே இல்லை. எனக்கு ஒன்றும் வேண்டாம்" என்று சொல்லிவிட்டு ஓடத் தொடங்கியது. தாய் முயல், அதைப் பிடித்து, அதற்கென்றே தயாரித்த அதிரசங்களைத் தின்னும்படி கெஞ்சிக் கேட்டது. மன்றாடியது. ஆனால், முயல்குட்டி தாயின் பிடியை உதறிவிட்டு வெளியே ஓடிவிட்டது.

அந்த முயல் வெகுநேரம் வெளியில் அலைந்துவிட்டு, தன் வீட்டிற்குத் திரும்பி வந்த போது, பக்கத்து வீட்டின் மேல் அதன் பார்வை பட்டது. அந்த வீட்டு முயல்குட்டி, ஓர் அதிரசத்தை மிகவும் சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தது. உடனே, அதனிடம் ஓடிச் சென்று தன் கையை நீட்டிக் கேட்டது. ஆனால், அந்த முயல் குட்டி ஒன்றும் கொடுக்காமல் சாப்பிட்டுக் கொண்டேயிருந்தது. இந்த முயல்குட்டியும் விடாமல் கேட்டுக் கொண்டேயிருந்தது.

'போனால் போகட்டும்' என்று நினைத்து, அந்த முயல்குட்டி, ஒரு சிறு துண்டைக் கிள்ளி இதனிடம் கொடுத்துவிட்டு ஓடிவிட்டது. அதை வாயில் போட்டுக் கொண்ட முயல் குட்டி, கீழே சிந்திக் கிடந்த துணுக்குகளைப் பொறுக்கி வாயில் போட்டுக் கொண்டது. மறுபடியும் அந்த முயல் குட்டியிருக்குமிடம் சென்று கொஞ்சம் தரச் சொல்லிக் கெஞ்சியது. ஆனால், அது தரவில்லை. ஆகவே, இந்த முயல்குட்டி தன் தாயிடம்போய், "அம்மா, அடுத்த வீட்டு அம்மா மிகவும் சுவையான அதிரசம் சுட்டிருக்கிறாள். எனக்கு அது வேண்டும். அந்த வீட்டு முயல்குட்டி எனக்குத் தர மாட்டேன் என்று சொல்லி ஓடிவிட்டது" என்று அழுது கொண்டே கூறியது.

அதைக்கேட்ட தாய்முயல்சிரித்தது. "அது அடுத்த வீட்டு அம்மா தயார் செய்தது என்றா நினைக்கிறாய்? அது நம் வீட்டு அதிரசந்தான். உனக்காகச் சுட்டதை நீ சாப்பிட மறுத்துவிட்டாய். அவை நன்றாக இல்லை என்று சொன்னாய். ஆகையால், நான் அடுத்த வீட்டிற்குக் கொஞ்சம் கொடுத்தேன். அதைத்தான் அந்தக் குட்டி சாப்பிடு

கிறது. அந்த அதிரசத்தை உனக்கும் கொடுக்கட்டுமா?'' என்று கேட்டது. முயல்குட்டி பதில் ஒன்றும் கூறவில்லை.

கோடி புண்ணியம்

அந்தத் தோட்டத்தின் ஒரு மூலையில் ஓர் இளஞ்செடி செழிப்பாக வளர்ந்து கொண்டிருந்தது. அதன் துளிர் மிக அழகாக இருந்தது. பெருமையில் மூழ்கிய அந்த இளஞ்செடியின் மீது ஒரு புழு மெல்ல ஏறியது. அது நேராகச் சென்று, அழகான துளிரை அரித்துத் தின்னத் தொடங்கியது.

''பச்சைப் புழுவே, அழகான என் துளிரை அழிக்கின்றாயே, இது நியாயமாகுமா? இளந்துளிரை அழித்து ஒழித்துவிட்டால், என் வாழ்வும் பாழாகிவிடும் என்பது உனக்குத் தெரியாதா? அருள் கூர்ந்து, என் துளிரை விட்டு விடு. உனக்குக் கோடி புண்ணியம் கிடைக்கும்'' என்று கெஞ்சிக் கேட்டது.

''செடியே, நான் என்ன செய்வேன்? என் பசி வேதனை எனக்கல்லவா தெரியும்! என் பசி தீரவே இப்படிச் செய்கிறேன். உன் தளிரைத் தின்னாவிட்டால் நான் இறந்து போக நேரிடுமே! எனக்கு வேறு வழியில்லையே!'' என்று அந்தப் புழு சொல்லிவிட்டு, அதிக வேகத்துடன், துளிரைக் கடித்துச் சுவைத்துக் கொண்டிருந்தது.

அப்போது, அந்தப் பக்கம் ஒரு செந்நிறக் குளவி பறந்து வந்தது. அது திடீரெனப் பாய்ந்து அந்தப் பச்சைப் புழுவைக் கவ்விக் கொண்டது. புழுவைத் தூக்கிக் கொண்டு பறக்க முயன்றபோது, அந்தப் புழு, தான் தின்று கொண்டிருந்த துளிரைக் கெட்டியாகப் பிடித்துத் தப்பித்துக் கொள்ளப் பெரும்பாடு பட்டது. ஆனால், செங்குளவியின் இரும்புப் பிடியிலிருந்து அதற்கு விடுதலை கிடைக்கவில்லை.

குளவி, அந்தப் புழுவைத் தூக்கிச் சென்றது. சிறிது தூரம் பறந்து, ஒரு வீட்டிற்குள் நுழைந்தது. மூலைச் சுவரில் கட்டி முடிக்காமல் விட்டிருந்த கூட்டில் அந்தப் புழுவை இழுத்து வைத்து, கூட்டை மூட ஆரம்பித்தது.



''ஐயோ! குளவியே, ஒரு பாவமும் அறியாத என்னை உயிருடன் புதைக்கிறாயே! இது நியாயம் ஆகுமா? என்னை இப்படிக் கூட்டில் அடைத்து மூடிவிட்டால் என் வாழ்வு பாழாகிவிடும் என்பது உனக்குத் தெரியாதா? அருள் கூர்ந்து என்னை விட்டுவிடு. உனக்குக் கோடி புண்ணியம் உண்டாகும்'' என்று கெஞ்சியது.

''புழுவே, நான் என்ன செய்யட்டும்? என் குழந்தைகளின் பெரும்பசி உனக்கு எப்படித் தெரியும்? இந்தக் கூட்டில் பிறக்கப் போகும் குழந்தைகளுக்கு உணவில்லா விட்டால், அவை இறந்து விடுமல்லவா? அதனால், உன்னை அவற்றிற்கு இரையாக்குவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லையே!'' என்று சொல்லிக்கொண்டே வேகமாகக் கூட்டை மூடிவிட்டு வெளியே சென்றது.


சில மணி நேரம் சென்ற பிறகு, அந்தக் குளவி, தனது கூட்டைப் பார்ப்பதற்குத் திரும்பி வந்தது. அது கட்டி வைத்த கூடு, ஒட்டடை அடித்துக் கொண்டிருந்த ஒருவனால் சுரண்டப்பட்டுக் கொண்டிருந்தது.

''ஐயோ! மனிதனே, ஒரு குற்றமும் புரியாத என் குழந்தைகளைக் கொல்கிறாயே! இது உனக்கு நியாயமா? உனக்குக் கோடி புண்ணியம் சேரும். என் குழந்தைகளை மட்டும் விட்டுவிடு'' என்று சொல்வதற்கு அவன் அருகில் அது பறந்து சென்ற போது, அவன் ஒட்டடைக் கோலினால் அடிக்க வந்தான். குளவி வெளியே தப்பி ஓடிவிட்டது!

பிருந்தாவனக் கதையரங்கம்

உதவிப் படை

ஆர். சிதம்பரம் (2505)



அது மே மாதம்.

விடுமுறையைப் பயனுள்ளதாய்க் கழிக்கவேண்டுமென அவர்கள்பேசிக் கொண்டிருந்தனர்.

"டேய்! பணங்காசு செலவழிக்க நம்மால் முடியாது! ஆனால், சரீர உதவி செய்யலாம். நம்மாலே முடிஞ்ச சின்னச் சின்ன உதவிகளைச் செய்யலாம்" என்றான் சுதாகர்.

மற்றவர்கள் உடனே 'சரி'யென்றனர்.

ஆனால் —

மாதவன் சம்மதிக்கவில்லை!

"சரிதான் போங்கடா! லீவுன்னா ஏதோ சாப்பிட்டோம், சினிமா, டிராமா பார்த்தோம்; கதைப் புத்தகம் படிச்சோம்னு ஜாலியா இருக்காமல்...." முணுமுணுத்தான்.

முடிவில் அரை மனதாய்ச் சம்மதித்தான்.

'உதவிப் படை' கிளம்பியது.

அது சின்னக் கிராமம்.

முதல் மூன்று நாட்கள், கிராமத்தின் வீதிகளை கல், முள், அகற்றி ஒழுங்கு செய்வதில் கழிந்தன.

அவர்கள் காலையில் கிளம்பினால் வேடிக்கையும், பாட்டுமாய்ச் சேவை செய்துவிட்டு நண்பகலில் வீடு திரும்புபவர். மறுபடி மாலையில் கிளம்பினால், விளக்கு வைத்தவுடன் திரும்புவர்.

கிராமத்தினர் இதற்காக அவர்களைப் பாராட்டினர்.

ஆனால், மாதவன் இதில் தன் பங்கைச் சரியாகச் செய்யவில்லை. வயிற்று வலி என்பான், தலைவலி என்பான், வீட்டை விட்டுத் தாமதமாய் புறப்படுவான், சீக்கிரமே திரும்பிவிடுவான்.

முத்து, சங்கர், மணி மூவரும் மாதவனைப் பற்றிச் சுதாகரிடம் சொல்லுவார்கள். சுதாகர், "பரவாயில்லை! அவனுக்கு இஷ்டமில்லாவிட்டால் என்ன செய்வது?" என்பான்.

'உதவிப் படை'யின் சேவைகள் தொடர்ந்தன.

முதியோருக்கு உதவுவது, எதையும் காணோமென்றால் தேடிக் கண்டு பிடித்துக் கொடுப்பது, வம்பு பண்ணும் சிறு குழந்தைகளுக்கு வேடிக்கை காட்டிச் சமாதானப்படுத்துவது....

வீட்டிலும் அவர்கள், தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்தனர். பால்வாங்கி வருவது, நீர் எடுத்துக் கொடுப்பது, கடைக்குச் செல்வது, சாமான்களை அடுக்கி வைப்பது என்று.

அன்று, மாதவன் வீட்டில்,

"மாதவா, டவுனுக்குப்போய் டெய்லர்கிட்டே என்னோட ஜாக்கெட்டை வாங்கி வந்துடுப்பா" என்றாள் அம்மா.

"போம்மா! என்னாலே முடியாது! வேறு ஆளைப் பார்!" என்று பதில் கொடுத்தான், திண்ணையில் அமர்ந்திருந்த மாதவன்.

அம்மா கெஞ்சினாள்!

"நாளைக்கு ஊருக்குப் போகணும்பா. உனக்கு எட்டணா தரேன்! சைக்கிளிலே போ! போக கால் மணி, வர கால் மணி மொத்தமா முக்கால் மணி நேர வேலைதான்!"

கொஞ்ச நேர யோசனைக்குப் பின், கிளம்பினான் மாதவன்.

சைக்கிளை 'தடால், மடால்' என அதிர அதிர எடுத்தான். அவனுக்குக் கோபமாம்!

'இதுவும் நல்லதுதான். அவன்களின் உதவிப் படைக்கு 'டிமிக்கி' கொடுக்கலாம்தானே!'' என்ற எண்ணம் ஆறுதல் தந்தது.

•

தையல் கடையில் தையல்காரர், "இதோ பட்டன் தைச்சுத் தர்ரேன்!" என்று நேரத்தைப் போக்கிவிட்டார்!

மறுபடியும் யார் வருவது என்ற நினைப்பில் இருந்து வாங்கிக்கொண்டு கிளம்பினான் மாதவன்.

நன்றாய் இருட்டிவிட்டது.

ஆள் நடமாட்டமும் அதிகம் இல்லை.

சைக்கிளை வேகமாய் மிதித்தான்.

திடீரென,

சைக்கிள் சாய்ந்தது.

அந்தப் பள்ளத்தில் சைக்கிளிலிருந்து விழுந்து விட்ட மாதவன், மெதுவாக எழ முயற்சி செய்தான்.

அந்தப் பள்ளத்தைச் சரி செய்ய வேண்டுமென உதவிப்படை விரும்பியதும், 'அதற்கென்ன அவசரம்?' என்று தான் மறுத்ததும் நினைவுக்கு வந்தது.

உடம்பெல்லாம் ஊமை அடி! கால் முட்டி கல்லில் இடித்து ரத்தம் வழிந்தது. படு எரிச்சல். தட்டுத் தடுமாறி எழுந்தான்.

அப்பப்பா! என்ன வலி! நடக்க முடியாது போல் இருக்கே.

ரத்தம் தொடர்ந்து வழிந்தது.

சைக்கிளை எடுக்க வேண்டுமே!

யாரையும் காணோமே! சுற்றிலும் பார்த்தான்.

மாதவன் தடுமாறினான்; தலை சுற்றி விழுந்தான்.

அவன் கண் விழித்தபோது, சுதாகர் வீட்டில் ஓர் கட்டிலில் கிடந்தான்.

அவன் கால்கள் சுத்தமாய்த் துடைக்கப்பட்டு, பச்சிலை வைத்துக் கட்டப்பட்டிருந்தது. இன்னும் காயம் உள்ள இடத்திலெல்லாம் களிம்பு தடவப்பட்டிருந்தது. அவன் சைக்கிளும் ஓர் ஓரமாக நின்றிருந்தது.

"என்னடா மாதவா! வலி எப்படி இருக்கு? இந்தா ஹார்லிக்ஸ் சாப்பிடு!" என்றான் சுதாகர் அன்புடன்.

மாதவன் 'திருதிரு'வென விழித்தான்.

அடடா! யாருக்கும் எந்த உதவியும் செய்ய மாட்டேன் என்றவனுக்கு மற்றவர்கள் உதவி செய்யும்படி நேர்ந்ததே!

தன் நிலைக்கு வெட்கப்பட்ட மாதவன் நன்றியுடன் சுதாகரின் கைகளைப் பற்றிக் கொண்டான். சுற்றிலுமிருந்த மற்றவர்களையும் பார்த்தான். அவன் கண்களில் நீர் நிறைந்தது.

அவர்கள் மட்டும் அவனைப் போல் 'நமக்கென்ன?' என்று இருந்திருந்தால், அவன் இந்நேரம் அந்த இருளில் வலியில் அங்கேயே மயங்கி கிடந்திருக்க வேண்டியவனாயிற்றே!

அதன்பிறகு உதவிப்படையின் முன்னணியில் நின்றவன் மாதவன்தான்!



தங்கபுரி என்ற நாட்டை ராஜ சிம்மன் என்ற மன்னன் சீரோடும் சிறப்போடும் ஆண்டு வந்தான். அவனுக்கு மதியூகி என்னும் ஓர் அமைச்சர் இருந்தார். பெயருக்கு ஏற்றபடி நன்கு சிந்

டித்து நல்லாட்சியை நிலை நாட்ட அரசனுக்கு உதவி செய்தார்.

ஒரு சமயம் சங்கரன் என்னும் சிறந்த ஒரு சிற்பி வந்தான். நேராக அரசனிடம் சென்று ஒரு அழகான சிலையைச் செதுக்கிக் காட்டினான். அது ஒரு நாட்டிய மங்கையின் சிலையாகும். அச்சிலையைக் கண்டவர்கள் 'இது சிலையா? உண்மையான பெண் போல இருக்கிறதே!' என வியக்கும்படி செதுக்கப்பட்டிருந்தது. அரசன் அவனைப் பாராட்டி இரண்டாயிரம் ரூபாய்கள் கொண்ட பணமுடிப்பைப் பரிசாக அளித்தான். பிறகு, 'இனி நீரே இந்த நாட்டின் அரசாங்கச் சிற்பியாக இருக்க வேண்டும்' என்று கூறினான்.

ஆனால் சிற்பியோ ஏளனமாகச் சிரித்துவிட்டு, ''சே, இது மிகச் சிறிய நாடு. நானே மிகப் பெரிய சிற்பி. எனக்கு நீங்கள் தரும் பதவி தேவையில்லை. எனக்குத் தேவை என்னவென்றால், நான் என்னைப் போன்ற பல உருவங்களைச் செதுக்கி, அவற்றுடன் எங்காவது நின்றுகொள்வேன். அவற்றில் யார் உண்மையான சிற்பி என்று உங்கள் நாட்டுச் சிற்பிகள் கண்டு பிடிக்கவேண்டும். இந்தப் போட்டியில் நான் தோற்றுவிட்டால், நான் இந்தத் தங்கபுரி நாட்டுக்கு அடிமையாவேன். அதே சமயம் உங்கள் சிற்பிகள் தோற்று நான் ஜெயித்தால் இந்தத் தங்கபுரி நாட்டுச் சிற்பிகள் அனைவரும் எனக்கு அடிமையாக வேண்டும்'' என்று கூறினான்.

இதைக் கேட்ட ராஜசிம்மன், ''சரி, இன்னும் மூன்று நாட்களில் போட்டி ஆரம்பமாகும்'' என்று கூறி சபையைக் கலைத்துவிட்டுச் சென்றான்.

அடுத்த நாளே, நாடு முழுவதும் இப்போட்டி பற்றிய விவரங்கள் பறைசாற்றப்பட்டன. மூன்றாம் நாள் போட்டி ஆரம்பம் ஆகியது. கைதேர்ந்த சிற்பிகள் பலர் வந்து போட்டியில் கலந்து கொண்டனர். எவராலும் யார் சங்கரன் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. இதைக் கண்ட அமைச்சர் மதியூகி உடனே வீடு சென்று சிற்பி போல் வேடம் அணிந்து அரண்மனைக்கு வந்தார். வந்தவுடன் நேராக சங்கரனின் சிலைகள் உள்ள இடத்திற்குச் சென்று, ''இந்தச் சங்கரனுக்குச் சிற்பமே செதுக்கத் தெரியவில்லை. ஒவ்வொரு சிலையிலும் ஒரு குற்றம் செய்திருக்கிறான். ஒன்றில் கை, ஒன்றில் கண், ஒன்றில் வாய் இப்படிப் பலவற்றிலும் குற்றங்கள் உள்ளன'' என்றார்.

இதைக்கேட்ட சிற்பி சங்கரன், நாக்கை வாய்க்கு வெளியே நீட்டிக் கடித்தான். உடனே சிற்பி வேடத்திலிருந்த மதியூகி சங்கரன் அருகில் சென்று அவனைப் பிடித்து வெளியே இழுத்து வந்து சபையினர் முன் நிறுத்தி, ''இவன்தான் சங்கரன்'' என்றார். சிற்பி சங்கரன் தன் தோல்வியை ஒப்புக் கொண்டான். உடனே சிற்பியாக வந்த மதியூகி, சங்கரனைப் பார்த்து, ''நீ உன் கர்வத்தை அடக்கி, உன் சிறந்த சிற்பத் திறனை வளர்த்துக் கொள்'' என்று கூறி தமது வேஷத்தைக் கலைத்தார். சிற்பியாக வந்தவர் மதியூகி என்பதை அறிந்து எல்லோரும் மகிழ்ந்தனர். சங்கரன் கர்வத்தை விட்டு, சிற்பத் திறமையை வளர்க்க அன்றே உறுதி எடுத்துக்கொண்டான்.



''கண்ணு, சாப்பிட வா'' என்று அழைத்தாள் அம்மா. கண்ணாயிரம் ''வரேன் அம்மா'' என்று கூறிவிட்டு கைகால் கழுவிவிட்டு வந்தான். அவன் தட்டின் முன் அமர்ந்தான். அம்மா பழைய சாப்பாடு போட அவன் அதை உண்டு கொண்டே,

"அம்மா நீ என்னை, அத்தை வீட்டுக்கு அனுப்புறேன்னு, சொன்னியே, எதுக்கம்மா?"

"கண்ணு, அத்தைகிட்ட போய் இரண்டு ரூபாய் வாங்கி வா."

"அத்தை கொடுப்பாளா, அம்மா?"

"நிச்சயம் அத்தை கொடுப்பா, உன் அத்தை ரொம்ப நல்லவள்."

தலை அசைத்தபடியே தலைவாரிக் கொண்டுபுறப்பட்டான் கண்ணாயிரம்.

அவன் அத்தை ஊர் பரியூர். அவன் வீட்டிலிருந்து ஒரு மைல் தொலைவில் உள்ளது. வேகமாக நடந்தான். சிறிது நேரத்தில் அத்தை வீட்டை அடைந்தான். கண்ணாயிரம் என்றால் அவன் அத்தைக்குக் கொள்ளை ஆசை. "கண்ணு வா! வா!," என்று கூறி வரவேற்றாள். அப்பொழுது மணி 12. "வா கண்ணு, சாப்பிடலாம்" என்று அத்தை அவனை அழைத்துச் சாப்பாடு போட்டாள். கண்ணாயிரம் சாப்பிட்டு, கை கழுவிவிட்டு எழுந்தான்.

அவன் இரண்டு ரூபாய்க்குப் பதிலாக மூன்று ரூபாய் கேட்டான்.

அதற்கு அவன் அத்தை, "தன்னிடம் இரண்டு ரூபாய்தான் உள்ளது" என்றாள்.

"மூன்று ரூபாய் வாங்கி வரச் சொன்னாள். இரண்டு ரூபாயென்றால் வேண்டாம். இதோ திரும்பிப் போகிறேன்" என்றான்.

அவனைச் சமாதானப்படுத்திய அத்தை, பக்கத்து வீட்டுக் கண்ணம்மாவிடம் ஒரு ரூபாய் வாங்கி மொத்தமாக மூன்று ரூபாயை, அவனிடம் கொடுத்தாள். அவன் மூன்று ரூபாயை பெற்றுவிட்டோம்' என்று மனம் மகிழ்ந்தான்.

அத்தையிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டான். தன் சட்டைப் பையில் உள்ள பணத்தை மகிழ்ச்சியால் தொட்டுப் பார்த்துக் கொண்டே நடக்க ஆரம்பித்தான். அவன் பெற்ற பணத்தில் இரண்டு ஒரு ரூபாய் நோட்டுக்களும் இரண்டு ஐம்பது பைசா நாணயங்களும் இருந்தன.

அவன் கொஞ்ச தூரம் சென்றதும் தண்ணீர்த் தாகம் எடுத்தது. சுற்று முற்றும் தேடிப் பார்த்தான். எங்கேயும் தண்ணீர் கிடைக்கவில்லை. வீடுகளும் அங்கே இல்லை. பின்பு சோர்வுடன் சற்றுத் தூரம் சென்றான். வழியில் ஒரு குளம் இருந்ததைப் பார்த்து மகிழ்ச்சியுடன் அருகில் சென்று பார்த்தான். துரதிர்ஷ்டவசமாக ஓர் எருமை தண்ணீரில் நீந்திக் கொண்டிருந்தது. தண்ணீர் செம்மை நிறமாகக் குடிக்கலாயக்கில்லாமல் இருந்தது. குளக்கரையில் மாமரம் இருந்தது. அதில் நிறைய மாம்பழங்கள் இருந்தன. அப்பொழுது அவனுக்கு மாம்பழம் தண்ணீர்த் தாகத்தை தணிக்கும் என்பது ஞாபகம் வரவே மாமரத்தின் அருகே சென்று மாம்பழம் அடிக்கக் கல்லைத் தேடினான். அவனுக்குக் கல் கிடைக்கவில்லை. அங்கு ஒரு மண் கட்டிதான் இருந்தது. இதாவது கிடைத்ததே என்று அதை எடுத்து மரத்திலிருந்த ஒரு மாம்பழத்தைக் குறி பார்த்து எறிந்தான். அவன் குறி தவறவில்லை! ஒரு மாம்பழம் 'பொத்'தென்று விழுந்தது. அதை அவன் கையில் எடுத்தான். பின்னர், மேலே பார்த்தான். 'இத்தனை மாம்பழங்கள் இருக்கும்பொழுது ஒன்றுதானா?' என்று நினைத்தான்.



'மண் கட்டியிலேயே ஒரு மாம்பழம் விழுந்தது என்றால் இந்த மாம்பழத்தைக் கொண்டு அடித்தால் நிறையப் பழங்கள் விழுமே!' என்று எண்ணி கையில் இருந்த மாம்பழத்தை மரத்தை நோக்கி வீசினான். குறி தவறவே அந்த மாம்பழம் அருகில் இருந்த குளத்தில் விழுந்தது. அதைக் கண்டு அவன் ஏமாற்றம் அடைந்தான். அவனுக்கு அழுகை வருவதுபோல் இருந்தது. அதைச் சமாளித்துக் கொண்டு தொங்கிய முகத்துடன் சோர்வாக நடந்தான். அப்பொழுது இடி இடித்தது. கருமேகங்கள் சூழ்ந்தன. மழை வரும் போல் இருந்தது. அதைக் கண்டு கண்ணாயிரம் வேகமாக நடந்தான். மழை வருவதற்குள் வீடு போய்ச் சேர வேண்டுமென நினைத்தான்.

வீட்டை நெருங்கியதும், ''அம்மா நீ சொன்னபடி அத்தையிடம் ரூபாய் இரண்டு வாங்கி வந்திருக்கிறேன்' என்று சொல்ல நினைத்து தன் பையில் இருந்த பணத்தை எடுத்தான். அவன் முகம்சுருங்கியது. ஏன் என்றால் அவன் பையில் இரண்டு ரூபாய் நோட்டுக்கள் மட்டுமே இருந்தன. இரண்டு 50 பைசா நாணயங்களைக் காணவில்லை. அவற்றைத்தான் அவன் மாம்பழம் அடிக்கும்போது கோட்டை விட்டு விட்டானே! 'ஐயோ!' என்று தன்னையும் அறியாமல் கத்திவிட்டான்.

சத்தத்தைக் கேட்ட அவன் அம்மா, ''ஏ கண்ணா, ஏன் அலறுகிறாய்?'' என்று கேட்டாள். அதற்கு அவன் நடந்ததை எல்லாம் கூறினான். அதற்கு கண்ணாயிரத்தின் அம்மா, ''கண்ணா, அலறாதே! ஒரு ரூபாய் போனால் போகட்டும். நீ நான் சொன்னபடி அத்தையிடம் இரண்டு ரூபாய் மட்டுமே வாங்கி வந்திருந்தால் இப்படியெல்லாம் நடந்திருக்காது. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து. அதனாலே நீ இனிமேல் அளவுக்கு அதிகமாக ஆசைப்படக் கூடாது'' என்று கூறி அவனுக்கு அறிவுரை கூறினாள். அன்றிலிருந்து கண்ணாயிரம் அதிகமாக ஆசைப்படுவதே இல்லை!



பிருந்தாவனக் கவியரங்கம்



எளியவர் தெய்வம்

எளியவர் தெய்வம் கணபதியாம்.
எளிதில் வரங்கள் தருபவராம்.

கஜமுகன் என்பதும் அவர்பெயராம்.
கருணை புரிவதில் முன்னவராம்.

அரச மரத்தடி அமர்ந்தவராம்
அரசரும் ஆண்டியும் அவர்க்கொன்றும்.

நாற்சந் தியிலும் வீற்றிருப்பார்.
நற்பண் பாளரைக் காத்தருள்வார்.

கொழுக்கட்டை கையில் வைத்திருப்பார்..
குழந்தைகள் தெய்வமாய் அமர்ந்திருப்பார்.

தலையில் குட்டி வணங்கிடுவோம்
தவறுகள் அகல வரம் கேட்போம்.

தோப்புக் கரணமும் போட்டிடுவோம்
துதிகள் பாடி வணங்கிடுவோம்.
தினம் தினம் அவரை நினைத்திடுவோம்.
திருவருள் பெற்றுச் சிறந்திடுவோம்.

—டி. சிவராமகிருஷ்ணன் (7246), மாதிரி மங்கலம்.

எங்கள் காமராஜர்



கருமை வண்ணம் உடையவர்
எங்கள் காமராஜர்.
கருணை மிகவும் கொண்டவர்
எங்கள் காமராஜர்.

படிப்பு அதிகம் படிக்கவில்லை
எங்கள் காமராஜர்.
பலரும் படிக்க வகைசெய்தவர்
எங்கள் காமராஜர்.

சீருடையாம் திட்டம் தந்தார்
எங்கள் காமராஜர்.
சிறப்பு மிகவும் பெற்றிருந்தார்
எங்கள் காமராஜர்.
இலவசமாய்க் கல்வி தந்தார்
எங்கள் காமராஜர்.
இனிமையாகப் பேசிடுவார்
எங்கள் காமராஜர்.

வறுமை ஒழிக்க முயற்சி செய்தார்
எங்கள் காமராஜர்.
மனத்தில், பேச்சில், செயலில் சுத்தம்
எங்கள் காமராஜர்!

—டி. ராஜ்சங்கர் (6937), திருச்சி—1.


சர்க்கஸ்

நகரின் நடுவே கூடாரம் — அதில்
நடக்குது சர்க்கஸ் நாம்மகிழ.

சக்கரம் உருட்டுது யானைக்குட்டி — புது
வஸ்திரம் உடுத்துது குரங்குக்குட்டி.

கண்டெலி குதித்து ஆடிடவே — அதை
வண்டியில் இழுக்குது பூனைக்குட்டி.

மயில்கள் ஆடுது புதுநடனம் — அதில்
மயங்கிப் பாடுது கழுதையுமே.



மோட்டார் ஓட்டுது மலைக்கரடி — நடு
ரோட்டில் தடுக்குது ஆமையுமே.

குதிரையில் ஏறுவார் குரங்கண்ணு — உடன்
கூடவே ஓடுவான் முயல்தம்பி.

உறுமும் சிங்கம் ஒருபக்கம் — கொடுஞ்
சிறுத்தையின் சீற்றம் மறுபக்கம்.

நடுவே நிற்கும் ஆட்டினையே — அவை
படுத்தே வணக்கம் செய்தனவே!

நரியார் எதற்கும் வரவில்லை — அவர்
புரியும் தந்திரம் அறியோமே!

—டி. எம். பர்வேஸ் (10058).

சின்னப் பாப்பா



சின்னச் சின்னப் பாப்பா
சிரிக்கும் மழலைப் பாப்பா

கன்னம் இரண்டும் உப்பி
கண்ணில் மையை அப்பி


கால்க ளிலே கொலுசு
கலீ ரென்று ஒலிக்க

நடை வண்டி தள்ளி
நடந்து வரும் பாப்பா.

எல்லை யில்லா மகிழ்ச்சி
எமக் களிக்கும் பாப்பா.

—ஜெ. செங்கமலம் (107 10), ஸ்ரீரங்கம்.

சேர்ந்து பாடணும்




சேர்ந்து பாடணும் — தம்பி
சேர்ந்து பாடணும்.
தேச பக்திப் பாடல்களைச்
சேர்ந்து பாடணும்.

பார்த்துப் படிக்கணும் — தம்பி
பார்த்துப் படிக்கணும்.
பார தத்தின் வரலாற்றைப்
பார்த்துப் படிக்கணும்.

நடித்துக் காட்டணும் — தம்பி
நடித்துக் காட்டணும்.
நல்ல பண்பை உணரவைக்க
நடித்துக் காட்டணும்.

வாழ்ந்து காட்டணும் — தம்பி
வாழ்ந்து காட்டணும்.
காந்தி போல எளிமையாக
வாழ்ந்து காட்டணும்.

—த. அருள்சிவபாலன் (47), செங்கல்
பட்டு—1.




நெருப்பு வேணும்

"நெருப்புக் கோழி அண்ணே, பட்டாக கூடக் கொஞ்சம் நெருப்பு கொடுங்க...!"

பிருந்தாவனம்

முன்னும் பின்னும்



நான்கு சக்கர வண்டியின் பின் பக்கத்து அச்சைவிட முன் பக்கத்து அச்சு சீக்கிரமாகத் தேயக் காரணம் என்ன?

முன் சக்கரங்கள் பின் சக்கரங்களை விடச் சிறியவை. ஒரே தூரம் செல்வதற்குக் குறைந்த சுற்றளவுள்ள வட்டம் அதிகச் சுற்றளவுள்ள வட்டத்தை விட அதிகச் சுற்றுகள் சுற்றியாக வேண்டும்.

—டி. சுமதி (1125), மதுரை—3.

படி படி

படிக்க விரும்பாத சோம்பேறி: எனக்கு வாசற்படி, மாடிப்படி, கொலுப்படி என்ற வார்த்தைகளைக் கேட்கவே பிடிக்காது.

மற்றவன்: ஏன் பிடிக்காது?

ப.வி.சோ: எல்லா வார்த்தைகளிலும் 'படி, படி'ன்னு வருதே!

— நா. விஜயகுமார் (985), திருச்சி.



யார் இவர்?



"ஜனத்தொகை குறைய மிகவும் உதவியாக இருக்கிறார் இவர்."

"யார் இவர்? குடும்ப நலத்துறை அதிகாரியா?"

"இல்லை. நம்ம ஊர் லாரி டிரைவர்."


— த. பாபு (1207), காரைக்குடி—1.

சேர்ந்தால்..?

இரண்டு தமிழ்ச் சொற்களை ஆங்கிலத்தில் எழுதினால் ஆங்கிலப் பெயர் ஒன்று கிடைக்கும்.

* பட்டாணியும் சேவலும் சேர்ந்தால்— Peacock.
* வெண்ணெயும் ஈயும் சேர்ந்தால்— Butterfly.
* வெள்ளை நிறமும் எறும்பும் சேர்ந்தால் — Whiteant.

—கே. சுகன்யா (7930).



இடங்களும் புகழ் பெற்றவர்களும்

பாண்டிச்சேரி	—	அரவிந்தர்
சாந்தினிகேதன்	—	தாகூர்
கபிலவாஸ்து	—	புத்தர்
சித்தூர்	—	ராணாபிரதாப்
திருவண்ணாமலை	—	ரமணரிஷி
செஞ்சி	—	தேசிங்குராஜன்
புத்தேரி	—	கவிமணி
எட்டயபுரம்	—	பாரதியார்

—கே. நரசிம்மன் (7378), ஒசூர்.



நீளமான சொல்

ஆங்கில அகராதியில் மிகவும் நீளமான சொல் எது என்று தெரியுமா?

SMILES


இந்தச் சொல்லின் முதலிலும் கடைசியிலும் உள்ள S என்ற எழுத்துக்களுக்கு இடையில் ஒரு மைல் தூரம் இருக்கிறதல்லவா?

—K. K. ஸ்ரீதர் கணேஷ், கரவேரிப் பட்டிணம்.



நாலணா வித்தை

இராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஒரு முறை கங்கைக் கரையில் தியானத்தில் அமர்ந்திருந்தார். தியானம் முடிந்து கண் திறந்தபோது ஒருவர் நீர்மேல் நடந்து வருவதைக் கண்டார். அதைப் பார்த்த பரமஹம்ஸருக்குச் சிரிப்பு வந்தது.



அந்த மனிதர் பரமஹம்ஸரிடம் வந்து, "இந்தக் கடினமான வித்தையைப் பத்து ஆண்டுகளாக முயன்று கற்றுத் தேர்ந்துள்ளேன். இதைக் கண்டு ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டார்.


"இல்லை. நீர் கற்ற வித்தை நாலணாவுக்குத்தான் பயன்படும்" என்று பதிலளித்தார் பரமஹம்ஸர்.

"அதென்ன அப்படிச் சொல்கிறீர்கள்?"

"நாலணாக் கொடுத்தாலே படகில் கரையைக் கடந்து விடலாமே!"

—என். செந்தில்குமார் (131), பேரூர்.

பெயர்கள் யாவை?



கீழே சில தமிழ் இலக்கிய நூல்களின் பெயர்கள் உள்ளன. கொஞ்சம் யோசனை செய்தால் அவற்றைக் கண்டு பிடித்து விடலாம். எங்கே கண்டுபிடியுங்கள், பார்க்கலாம்:

1. பாட்டு பாட்டு பாட்டு, பாட்டு, பாட்டு, பாட்டு, பாட்டு, பாட்டு, பாட்டு, பாட்டு
2. தொகை, தொகை, தொகை, தொகை, தொகை, தொகை, தொகை, தொகை.

3. குதிரைப் பாட்டு.
4. புறம் 100 + 100 + 100 + 100
5. இனியவை 10 + 10 + 10 + 10
6. பழமொழி 50 + 50 + 50 + 50 + 50 + 50 + 50 + 50

விடை: 1. பத்துப்பாட்டு, 2. எட்டுத்தொகை, 3. பரிபாடல், 4. புறநானூறு, 5. இனியவை நாற்பது, 6. பழமொழி நானூறு.

—த. அருள்சிவபாலன் (47), செங்கற்பட்டு.

நாடோடிப் பாடல்

ஏழு கடல் நீந்தி
எடுத்து வந்த தாமரைப்பூ.
பத்துக் கடல் நீந்தி
பறித்து வந்த தாமரைப்பூ.
அனைத்து மனம் மகிழ — நாங்கள்
அள்ளி வந்த தாமரைப்பூ.

—ப. தேவேந்திரகுமார் (1418), சென்னை—7.



23 பேர்

"என் பிறந்த நாளுக்கு இருபத்து மூனு பேர் வந்து வாழ்த்தினார்களே!"

"அப்படியா! யார், யாரு?"

"ஆறுமுகம், ஏழுமலை, பத்மநாபன்."

—ஹெச். பாரூக் (2467), இலால்குடி.



அழுக்குச் சட்டை



நண்பர்: ஏனய்யா, நல்ல வசதியிருந்தும் இப்படி அழுக்குச் சட்டையையே போட்டுக் கொண்டிருக்கிறீர்களே!

கஞ்சன்: இது நம் ஊர்தானே! எல்லாருக்கும் என்னைப் பற்றித் தெரியுமே! அழுக்குச் சட்டை போட்டால் என்ன?

நண்பர்: அது சரி, போன வாரம் பட்டணத்தில் பார்த்தேனே, அப்போதும் அழுக்குச் சட்டையோடுதானே இருந்தீங்க?

கஞ்சன்: அந்த ஊரில் என்னை யாருக்குத் தெரியும்? அங்கே எதற்கு நல்ல சட்டை?

—நெ. அன்பு செழியன் (1727), பண்ணுருட்டி.

வெடிச் சத்தம்



பானு: அம்மா, கடுகு ஏன் இவ்வளவு சத்தமா வெடிக்குது?

அம்மா: அது 'பாம்' ஆயிலில் வறுப்பதால் அப்படித்தான் வெடிக்கும்.

—எஸ். ஜெயஸ்ரீ (1254), திருச்சி—14.

அதே இடத்தில்



உல்லாசக் குழுவினர் ஏறிச் சென்ற தனிப் பேருந்தின் ஓட்டுநருக்கு நள்ளிரவில் உடம்பு சரியில்லை. அப்போது பயணிகளில் ஒருவர் பேருந்தை ஓட்ட முன் வந்தார். பேருந்து புறப்பட்டவுடன், பயணிகள் அயர்ந்து தூங்கி விட்டனர். பொழுது விடிந்ததும், விழித்தெழுந்த பயணிகள் திடுக்கிட்டனர். அந்தப் பேருந்து புதிய ஓட்டுநர் ஓட்ட ஆரம்பித்த இடத்திலேயே முன்னும் பின்னுமாகப் போய் வந்து கொண்டிருந்தது! என்ன காரணம்? அந்தப் புதிய ஓட்டுநர் ரோடு ரோலர் ஓட்டுபவர் என்பது அப்போது தான் தெரிய வந்தது. அவர் ரோடு ரோலரை ஓட்டுவது போலவே முன்னும் பின்னுமாக ஓட்டிக் கொண்டிருந்தார்!

—கே. ராதிகா (7095), தலைக்குளம்.

பழக்கம்



மூர்த்தி: டேய் கீர்த்தி, கார்த்திக் எப்பப் பார்த்தாலும் புத்தகமும் கையுமாக இருக்கிறான்.

கீர்த்தி: எனக்கு அந்தப் பழக்கம் கிடையாது.

மூர்த்தி: அவன் எல்லாத்தையும் உருப்போட்டு விடுவான்டா.

கீர்த்தி: எனக்கு அந்தப் பழக்கம் கிடையாது.

மூர்த்தி: அவன் சிறுவர் சினிமாவுக்கு மட்டுமே போவான்.

கீர்த்தி: எனக்கு அந்தப் பழக்கம் கிடையாது.

மூர்த்தி: அவன் எப்பவும் முதல் மார்க்தான் வாங்குவான்.

கீர்த்தி: எனக்கு அந்தப் பழக்கம் கிடை...?

—ஆர். ரமேஷ் (856), திருப்பத்தூர் (வ. ஆ.)

இந்தியக் கடற்படை



நம்நாட்டைக் காக்க மூன்று வகைப் படைகள் இருக்கின்றன. அவை தரைப் படை, கடற்படை, விமானப் படை ஆகும். கடற்படையில் மூன்று பிரிவுகள் உள்ளன. வெஸ்டர்ன் கமாண்ட் (பம்பாய்), ஈஸ்டர்ன் கமாண்ட் (விசாகப்பட்டினம்), சதர்ன் கமாண்ட் (கொச்சி).

நம் கடற்படையில் பல வகைக் கப்பல்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கப்பல் பெயருக்கும் முன்னால் (Ins) என்று எழுதப்பட்டிருக்கும். அதாவது (Indian Naval Service) இந்தியக் கடற்படைக் கப்பல் என்று பொருள்.

—ல. ஸ்ரீஹரி (2249),.

கணித மொழிகள்

நல்லனவற்றைக் கூட்டு	+
தீயனவற்றைக் கழி	−
அறிவைப் பெருக்கு	×
நேரத்தை வகு	÷
இன்ப துன்பங்களைச் சமமாக நினை	=
நாள்தோறும் அறிவை வளர்	+ + + + +
செலவைக் குறைத்து வரவைப் பெருக்கு	∠
அன்பைப் பெருக்கி ஆணவத்தைக் குறை	⌐
நல்லவர்களுக்கு இணையாக இரு	‖

— பி. கே. பாண்டியன் (7219) கண்ணமங்கலம்.



இத்தாலியக் கதை

கியூபே

தமிழில்: எச். கிருஷ்ணமூர்த்தி

தெற்கு இத்தாலியின் கடல் ஓரப் பகுதி. ஒரு சின்னக் கிராமம். அங்கே ஒரு சிறுவன் இருந்தான். பெயர் கியூபே. அவன் ஓர் அசடு. யார் எது சொன்னாலும் அப்படியே நம்பி விடுவான். கொஞ்சம் கூட யோசிக்க மாட்டான். அவன் தொட்ட காரியம் எதுவும் துலங்கவில்லை. அவனுடைய ராசி அப்படி.

கியூபேவுக்கு அம்மா மட்டும் இருந்தாள். அவள் பரம ஏழை. அவள் சந்தைக்குப் போய்ப் பன்றி இறைச்சியை விற்று வாழ்க்கை நடத்தினாள். கியூபேயால் அவளுக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களுக்குக் கணக்கே இல்லை.

ஒரு நாள் பன்றி இறைச்சியை எடுத்துக் கொண்டு அம்மா சந்தைக்குப் புறப்பட்டாள். கியூபே தானே போய் விற்று வருவதாகச் சொன்னான். "இதன் விலை பத்து வெள்ளி. அதற்குக் குறைவாக விற்காதே," என்று புத்திமதி சொல்லி அனுப்பினாள்.

இறைச்சிக் கூடையை எடுத்துக் கொண்டு கியூபே சந்தையை நோக்கி நடந்தான். எதிரே வந்த ஓர் ஆள், "தம்பி, கூடையில் என்ன?" என்று கேட்டான்.

"பன்றி இறைச்சி. விலை பத்து வெள்ளி. அதற்குக் குறைவாக அம்மா வாங்கிக் கொள்ள மாட்டாள்," என்றான் கியூபே.

"நியாயமான விலைதான். நானே வாங்கிக் கொள்ளுகிறேன்," என்று சொல்லி அந்த ஆள் பன்றி இறைச்சியைப் பெற்றுக் கொண்டான். பிறகு, "நான் காசு கொண்டு வரவில்லை. நாளைக்குத் தருகிறேன்," என்றான்.

"உங்கள் பெயர் என்ன?" கியூபே கேட்டான்.

"நான் — நானேதான்," என்று சொல்லிவிட்டு அவன் போனான். கியூபே வீடு திரும்பினான்.

"அம்மா! நீ சொன்னபடி அதைப் பத்து வெள்ளிக்கு விற்று விட்டேன்!" என்றான் கியூபே.

"பணம் எங்கே?" அம்மா கேட்டாள்.

"அந்த ஆளிடம் பணம் இருக்கவில்லை அம்மா. பெயரைக் கேட்டுக் கொண்டுவந்தேன். நாளைக்குப் பணம் தருவான்."

"என்ன பெயர்?"

"நானேதான்."

"என்னடா உளறுகிறாய்? உனக்கு நீயும் நானேதான். எனக்கு நானும் நானேதான். அது ஒரு பெயரா?" என்று அம்மா கோபித்துக் கொண்டாள். அம்மாவின் பேச்சு கியூபேவுக்குப் புரியவில்லை.

"உனக்குக் காசு வேணும், அவ்வளவுதானே? நானேதான் நாளைக்குத் தருவான். வாங்கி வருகிறேன்," என்றான்.

மறுநாள் அதே சாலையின் வழியாகக் கியூபே நடந்தான். போவோர், வருவோரை எல்லாம் நிறுத்தி, "நீங்கள் நானேதானா?" என்று கேட்டான். அவர்கள் அவனை ஒரு தினுசாகப் பார்த்தனர். பைத்தியம் என்று நினைத்துப் பேசாமல் போய் விட்டனர்.

சிறிது நேரங்கழித்துக் கியூபே ஒரு வழிப்போக்கனைப் பிடித்தான். "நீ நானேதானா, இல்லையா? இல்லாவிட்டால் அவனை எங்கே பார்க்கலாம்? சொல்லு!" என்று கேட்டான்.

"அவனை எங்கு வேண்டுமானாலும் பார்க்கலாம். அதோ அந்த மரத்தடியில் படுத்திருக்கிறானே அவனாகவும் இருக்கலாம்," என்று சிரித்துக் கொண்டே அவன் பதிலளித்தான்.

கியூபே மரத்தடி மனிதனிடம் விரைந்தான். அவன் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தான். "நானேதான்! நானேதான்! எழுந்திரு! காசு கொடு!" கியூபே கத்தினான்.

"தொந்தரவு செய்யாதே. நான் நானேதான்!" என்று சொல்லி அவன் வேறு பக்கம் திரும்பிப் படுத்தான்.

"நானேதான்! நானேதான்! உன்னை எவ்வளவு நேரமாகத் தேடுகிறேன் தெரியுமா? பன்றி இறைச்சிக்குத் தர வேண்டிய பத்து வெள்ளியைக் கொடு!" என்று கியூபே கூச்சலிட்டான்.

"இறைச்சியா? காசா? ஒன்றும் புரியவில்லையே?" என்று அந்த மனிதன் தூக்கக் கலக்கத்தோடு பேசினான்.

அதைக் கேட்டதும் கியூபேவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. "எனக்குத் தர வேண்டிய பத்து வெள்ளியை உடனே கொடு. இல்லாவிட்டால் இந்தக் கல் உன் தலையைப் பதம் பார்க்கும்," என்று சொல்லி அருகிலிருந்த பாறாங்கல்லைத் தூக்கினான். அந்த மனிதன் சாலையை நோக்கினான். வேறு யாருமே தென்படவில்லை. "இந்தப் பைத்தியத்திடமிருந்து எப்படியாவது தப்பினால் போதும்," என்றெண்ணி அவன் கேட்ட பத்து வெள்ளியை எடுத்து நீட்டினான்.

"நீ ஒழுங்காகக் காசைக் கொடுத்து விடுவாய் என்று எனக்கு நேற்றே தெரியுமே!" என்று கியூபே அதை நன்றியுடன் வாங்கிக் கொண்டான். மரத்தடியில் குறட்டை ஒலி தொடர்ந்தது. கியூபே வீடு திரும்பி, அம்மாவிடம் பெருமையாக அந்தக் காசைக் கொடுத்தான்.

அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அம்மா கியூபேயைச் சந்தைக்கு அனுப்பவில்லை. அவன் வீட்டிலேயே தங்கினான். சோம்பேறித்தனமான வாழ்க்கை விரைவில் அவனுக்கு அலுத்துவிட்டது. ஒரு வேலையில் சேர ஆசைப்பட்டான்.

கிராமத்திலிருந்த ஒரு ஓட்டலுக்குப் போய் அந்த முதலாளியிடம் வேலை கேட்டான். அவர் அவனிடம் சில தட்டுக்களைக் கொடுத்துக் கடற்கரைக்குச் சென்று கழுவி வரச் சொன்னார். எடுத்த எடுப்பிலேயே ஓர் ஓட்டல் வேலை கிடைத்தது பற்றிக் கியூபே ரொம்ப சந்தோஷப்பட்டான்.

தட்டுக்களை எடுத்துக் கொண்டு அவன் கடற்கரைக்கு ஓடினான். அவற்றை வெகு நேரம் தேய்த்துக் கழுவினான். அவை பளபளவென்று மின்னின. முதல்நாள் வேலையை நன்றாகச் செய்து முடித்த திருப்தி அவனுடைய முகத்தில் தெரிந்தது. நீலவானும், கடலும், பளிச்சென்று அடிக்கும் வெயிலும் கியூபேவுக்குப் புதிய உற்சாகத்தை ஊட்டின. அப்போது கடற்கரைக்கு மிக அருகில் ஒரு கப்பல் வந்தது. உற்சாக மிகுதியால், கியூபே தன் வெள்ளைக் கைக்குட்டையை எடுத்து ஆட்டினான். கரையில் உள்ள சிறுவன் ஏதோ கஷ்டத்தில் இருப்பதாக நினைத்துக் கப்பலைக் கரைக்கு அருகில் நிறுத்தி, அதன் தலைவன் கீழே இறங்கி வந்தான்.

கியூபேவுக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. அருகிலிருந்த தட்டுக்களைக் காட்டி, "இந்தத் தட்டுக்களைக் கழுவியது போதுமா?" என்று கேட்டான். அவன் ஓர் அசடு என்பதையும், விளையாட்டாகக் கைக்குட்டையை ஆட்டினான் என்பதையும் கப்பல் தலைவன் ஒரு நொடிப் பொழுதில் உணர்ந்தான். அவனுக்குக் கோபம் வந்தது. "உன் அழுக்குத் தட்டைப் பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும்?" என்று திருப்பிக் கேட்டான். பிறரிடமிருந்து நல்ல விஷயங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். என்று

கியூபே ஆசைப்பட்டான். ஆகவே, ''அப்படியானால்நான்என்னசொல்லியிருக்க வேண்டும்?'' கியூபே கேட்டான். கப்பல் தலைவன் அன்று இரவுக்குள் தன் ஊரை அடைய வேண்டும். ஆகையால் கப்பலின் சீரான ஓட்டத்தைப் பற்றியே அவன் எண்ணிக் கொண்டிருந்தான். ஆகவே கியூபேயின் கேள்விக்கு அவன், ''தேவன் உனக்கு நல்ல ஓட்டத்தைக் கொடுக்கட்டும் — என்று இந்த மாதிரி ஏதாவது சொல்ல வேண்டும்,'' என்று பதிலளித்தான்.

கப்பல் நகர்ந்தது. கியூபே தட்டுக்களை எடுத்துக் கொண்டு கிராமத்தை நோக்கிப் புறப்பட்டான். வழியில் ஒரு காடு இருந்தது. அங்கே ஒரு வேடன் ஒரு மானைச் சுடுவதற்காகத் துப்பாக்கியால்குறிவைத்துத்தயாராக இருந்தான்.

கியூபே அந்த வேடனுக்கு உதவி செய்ய நினைத்து, ''தேவன் உனக்கு நல்ல ஓட்டத்தைக் கொடுக்கட்டும்,'' என்று திடீரென உரக்கக் கூவினான். அந்தச் சத்தத்தைக் கேட்ட மான் மிரண்டு ஓடி மறைந்தது.

''முட்டாள், காரியத்தையே கெடுத்துவிட்டாயே. முன்பின் தெரியாதவர்களைக் கண்டால் இப்படியா வாழ்த்துச் சொல்லுவது?'' என்று கோபித்துக் கொண்டான்.

''அப்படியானால் நான் என்ன சொல்லியிருக்க வேண்டும்?'' என்று கியூபே கேட்டான். வேட்டை மிருகங்களைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்த வேடன், ''தேவனே, அவை கொல்லப்படட்டும்! — என்று சொல்லலாமில்லையா?'' என்று கூறினான். கியூபே நன்றி சொல்லிவிட்டுக் கிராமத்தை நோக்கி நடந்தான்.

வழியில் இரண்டு ஆட்களுக்கிடையே சச்சரவு. அது வாய்ச்சண்டையாகத் தொடங்கி, கைச்சண்டையாக முற்றியிருந்தது. எந்த வகையிலாவது அவர்களுக்கு உதவி செய்ய நினைத்த கியூபே, ''தேவனே, அவர்கள் கொல்லப்படட்டும்!'' என்று உற்சாகமாகச் சொன்னான்.

அந்த இரண்டு ஆட்களும் உடனே சண்டையை நிறுத்தினர். ''என்ன தம்பி, எங்களிடம் என்ன விரோதம்?



ஏன் சாகச் சொல்லுகிறாய்?'' என்று இருவரும் ஒரே சமயத்தில் கேட்டனர்.

''விரோதம் ஒன்றும் இல்லை. உங்களுக்கு மரியாதையோடு என் வாழ்த்துக்களைத் தெரிவிக்கவே அப்படிச் சொன்னேன். அது சரியில்லை என்றால், நான் வேறு என்ன சொல்லியிருக்க வேண்டும்?'' என்று கியூபே கேட்டான். சண்டையை முடிக்க விரும்பிய ஒருவன், ''தேவனே, அவர்களைப் பிரித்து விடு — என்ற அர்த்தத்தில் ஏதாவது சொல்லியிருக்கலாமே!'' என்றான்.

அதைக் காதில் வாங்கிக் கொண்டு கியூபே மேலே நடந்தான். கிராமத்தின் எல்லையில் இருந்த மாதா கோயில் கண்ணில் பட்டது. அங்கே அப்போது தான் ஒரு திருமணம் முடிந்திருந்தது. கல்யாணப் பெண்ணும், மாப்பிள்ளையும் உறவினர்கள், நண்பர்கள் சூழப் படிக்கட்டில் நின்று கொண்டிருந்தனர். அவர்களை வாழ்த்துவதாக நினைத்துக் கொண்டு, ''தேவனே, அவர்களைப் பிரித்துவிடு!'' என்று கியூபே உரக்கக் கத்தினான்.

கல்யாணப்பெண்ணும்,பிள்ளையும் அதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தனர். ஒருவரை ஒருவர் இறுகப் பற்றிக் கொண்டு, ''வேண்டாம், வேண்டாம்!'' என்று அலறினர். கூட்டத்தில் இருந்த சிலர் கியூபேயை மடக்கி, ''ஏண்டா இப்படி அபசகுனம் மாதிரி பேசுகிறாய்?'' என்று அதட்டினர். ''என் வாழ்த்துக்களைச் சொன்னேன். அவ்வளவுதான். வேறு என்ன சொல்லியிருக்க வேண்டும்?'' என்று கியூபே கேட்டான். கல்யாணத்திற்காக ஏற்பாடு செய்திருந்த பிரமாதமான விருந்துச் சாப்பாட்டையே நினைத்துக் கொண்டிருந்த அவர்கள், ''தேவனே, இந்த மக்களைச் சிரிக்கச் செய்யுங்கள் — என்று நீ சொல்லியிருக்க வேண்டும்.'' என்றனர். கியூபே நன்றி சொல்லிவிட்டு ஒட்டல் இருந்த தெருவை நெருங்கினான்.

அந்தத் தெருவில் நுழைந்ததும் எதிரில் ஒரு சவ ஊர்வலம் வந்தது. கறுப்பு நிறச் சவப்பெட்டியைச் சுமந்து கொண்டு எட்டு ஆட்கள் சோகமாக நடந்து வந்தனர். அவர்களுக்குப் பின்னால் பெருந்திரளான மக்கள் அழுது கொண்டே வந்தனர். கியூபே பக்தியோடு சிலுவைக் குறியிட்டுப் பாதையிலிருந்து ஒதுங்கி நின்றான். சவப்பெட்டி அவனைக் கடந்ததும், ''தேவனே, இந்த மக்களைச் சிரிக்கச் செய்யுங்கள்!'' என்று கூவினான். துக்கத்தில் மூழ்கியிருந்த அவர்கள் வாய் திறந்து ஒன்றும் பேசவில்லை. இருந்தாலும் அவனைக் கண்டிக்கும் வகையில் பார்வையை வீசினர்; முகத்தைச் சுளித்தனர். ''இந்த முறையும் ஏதாவது தவறு செய்து விட்டேனா?'' என்று கியூபே சந்தேகப்பட்டான். ''தேவனே, எப்போது நான் நான் முறையாகப் பேசக் கற்றுக் கொள்ளப் போகிறேனோ, தெரியவில்லையே?'' என்று சொல்லி அவன் உள்ளம் வருந்தினான்.

தட்டுக்களை எடுத்துக் கொண்டு காலையில் புறப்பட்ட கியூபே மாலை ஆகியும் திரும்பி வரவில்லை. ஒட்டல் முதலாளி மிகுந்த கவலையுடன் வாசலுக்கும், உள்ளுக்கும் நடந்து கொண்டிருந்தார். கியூபே திடீரென ஒட்டலுக்குள் தோன்றினான். தட்டுக்களைப் பிடுங்கிக் கொண்டு கியூபேயின் கன்னத்தில் அவர் ஓங்கி ஓர் அறை வைத்தார். ''உன் மூஞ்சியை மறுபடியும் இங்கே காட்டாதே. தொலைந்து போ, கழுதை!'' என்று கூறிக் கதவைப் படீரென்று சாத்தினார். வேலை போன வருத்தத்தோடு கியூபே வீடு திரும்பினான்.

கியூபே உழைப்பதற்குத் தயாராக இருந்தான். ஆனால் வேலை கிடைக்கவில்லை. தப்பித் தவறிக் கிடைத்தாலும் அது நீடிக்கவில்லை. கியூபேயின் ஆடைகள் கிழிந்து விட்டன. அவன் விநோதமான விளையாட்டுப் பொருள்களை எல்லாம் வாங்க ஆசைப்பட்டான். காசு இல்லாததால் அவனால் எதுவும் வாங்க முடியவில்லை.

குளிர்காலம் வந்தது. ஒரு நாள் கியூபே கடைத் தெருவில் நடந்து கொண்டிருந்தான். தலை முதல் கால் வரை அணிவதற்கு ஏற்ற கம்பளி ஆடைகள் விதவிதமான வண்ணங்களில் கடைகளில் தொங்கிக் கொண்டிருந்தன. அழகான அந்த ஆடைகள் கைநீட்டி அவனை அழைப்பது போலத் தோன்றின. கியூபே ஒரு தீர்மானத்



திற்கு வந்தான். முதல் கடையில் சிவப்பு நிற விளையாட்டுத் தொப்பி, இரண்டாவது கடையில் கம்பளி ஆடைகள், மூன்றாவது கடையில் சாக்ஸ் — இப்படியாக இன்னும் பல பொருள்களையும் அவன் கடனாக வாங்கினான். ஒவ்வொரு கடையிலும் குறிப்பிட்ட சில தினங்களுக்குள் பணத்தைக் கட்டுவதாகச் சொல்லி விட்டுச் சென்றான்.

நாட்களும் மாதங்களும் நகர்ந்தன. கியூபேவுக்குப் பணம் கிடைக்கவில்லை. ஆகையால் அவனால் கடனை அடைக்க முடியவில்லை. அவன் வெளியே போகும் போதெல்லாம் கடைக்காரர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டு பணத்தை உடனே கட்டும்படி வற்புறுத்தினர். "முதலில் என் கைக்குப் பணம் வரட்டும். உடனே உங்களுக்குச் சேர வேண்டிய மொத்தப் பணத்தையும் கொடுத்து விடுகிறேன்," என்று கியூபே ஒவ்வொருவரிடமும் பொறுமையாகச் சொன்னான். வழக்கமான அந்த பதில் அவர்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. வாங்கிய கடனை விரைவில் அடைக்காவிட்டால், அவனை ஜெயிலில் அடைக்கப் போவதாகக் கடைக்காரர்கள் பயமுறுத்தினர்.

கியூபேயால் நிம்மதியாக வெளியே தலைகாட்ட முடியவில்லை. கடைக்காரர்களின் தொல்லைகள் அதிகரித்தன. அவனுக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது. "இப்படிப் பயந்து பயந்து கேவலமாக உயிர் வாழ்வதைவிடச் செத்துப் போவதே மேல்" — என்ற எண்ணம் அவனுடைய மனத்தில் உதித்தது! "அதுதான் சரியான வழி," என்று சொல்லிக் கொண்டே அவன் பூக்கடைக்குப் போனான்.

"சீக்கிரமே காசு அனுப்புகிறேன். ஒரு அல்லி மலர் கொடு," என்று அவன் பூக்காரியிடம் கேட்டான். கொடுத்தாள். அதைப் பெற்றுக் கொண்டு வீடு வந்து சேர்ந்தான். சமீபத்தில் வாங்கிய சிவப்புத் தொப்பி, கம்பளி ஆடைகள், சாக்ஸ் ஆகியவற்றை அணிந்து கொண்டு அவன் தன் படுக்கையில் மல்லாந்து படுத்தான். கால்கள் நீட்டப்பட்டிருந்தன.

கைகள் குறுக்காக மார்பின் மீது கிடந்தன. கையில் வெள்ளை வெளேரென்ற புதிய அல்லி மலர் காட்சி அளித்தது.

திடீரென்று அறையில் நுழைந்த அம்மா பிள்ளை கிடக்கும் கோலத்தைக் கண்டு திடுக்கிட்டாள். "ஐயோ! என் பிள்ளை செத்து விட்டானே!" என்று அலறினாள். அண்டை அயலார்களை அழைத்தாள். கிராமத்து மக்கள் திரண்டு வந்தனர். கியூபேவுக்கு மரியாதை செலுத்தினர். ஓட்டல் முதலாளி முதல் பூக்காரி வரை எல்லாக் கடைக்காரர்களும் வந்து கியூபேயின் அம்மாவைச் சமாதானப்படுத்தினர். அவர்கள் ஒவ்வொருவராகக் கியூபேயின் படுக்கை அருகில் சென்றனர். அவர்கள் முழங்கால் மண்டியிட்டுச் சிலுவைக் குறி செய்து, கியூபேயின் ஆன்மா சாந்தி அடைய ஜபம் பண்ணினர்.

"கியூபே அந்தச் சிவப்புத் தொப்பியை என்னிடம் தான் வாங்கினான். இன்னும் பணம் தரவில்லை. இருந்தாலும் பரவாயில்லை. செத்துப் போனவர்களைப் பற்றி நாம் குறை சொல்லக் கூடாது," என்றான் ஒரு கடைக்காரன். "அவன் அணிந்துள்ள கம்பளி ஆடைகளை நான்தான் விற்றேன். கடன் இன்னும் அப்படியே இருக்கிறது. பரவாயில்லை. அவனை மன்னித்து விடுகிறேன்," என்றான் இரண்டாவது கடைக்காரன்.

"அந்த சாக்ஸ்களை என் கடையில் தான் வாங்கினான். காசே கொடுக்கவில்லை. பரவாயில்லை. மன்னித்து விடுகிறேன்," என்றான் மூன்றாவது கடைக்காரன். இப்படி ஒவ்வொரு கடைக்காரரும் வரிசையாக வந்து கியூபேயை மன்னித்துவிட்டு ஜபம் பண்ணினர்.

அந்தச் சொற்கள் கியூபேயின் காதுகளில் தேனாகப் பாய்ந்தன. "செத்துப் போனால் இவ்வளவு சௌகரியமா?" என்று அவன் ஆச்சரியப் பட்டான். அத்தகைய சூழ்நிலையில் மீண்டும் உயிர் பெற்று உடனே எழுவது கூடாது என்பதையும் உணர்ந்தான். ஆகவே, அவன் மூச்சை அடக்கிக் கொண்டு ஒரு சிலையைப் போல அசையாமல் கிடந்தான்.

மாலை நேரம். சவ அடக்கத்திற்கான ஏற்பாடுகள் தொடர்ந்தன. சவப் பெட்டி வந்தது. கியூபேயை அதில் தூக்கிப் போட்டு ஊர்க் கோடியில் இருந்த மாதா கோயிலுக்கு மௌன ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். சவப்பெட்டி திறந்தே இருந்தது. அடுத்த நாள்தான் அதை ஆணி அடித்து மூடிச் சடங்குகளைச் செய்வது அந்த கிராமத்து வழக்கம். அந்த வழக்கப்படி திறந்திருந்த சவப்பெட்டியை மாதா கோவிலைச் சார்ந்த கல்லறையில் வைத்து விட்டு எல்லோரும் திரும்பினர்.

நன்றாக இருட்டி விட்டது. மாதா கோவிலின் ஜன்னல் வழியாக வெளியே பாய்ந்த ஒளிக்கற்றைகள் கல்லறைப் பிரதேசத்தைப் பிரகாசமாக்கிக் கொண்டிருந்தன. ஐந்தாறு கொள்ளைக் காரர்கள் மாதா கோயிலின் உள்ளே நுழைந்தனர். இத்தாலியில் உள்ள மாதா கோயில்களுக்குள் போகக்குறிப்பிட்ட நேரமோ, நாளோ எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. விசாலமான அந்தக் கோயில்களில் எல்லோரும் போகலாம். எப்போது வேண்டுமானாலும்போகலாம். மேலும் அது ஊர்க் கோடியில் இருந்ததால், மற்றவர்கள் கண்ணில் படாமல் தப்பிக்கலாம் என்ற எண்ணத்தோடு கொள்ளைக்காரர்கள் அங்கே நுழைந்தனர்.

கியூபேவுக்குச் சமீபத்திலேயே ஒரு வெளிச்சமான இடத்தில் அவர்கள் வட்டமாக உட்கார்ந்தனர். கொள்ளை அடித்து வந்த தங்க, வெள்ளி நகைகளை எல்லாம் தங்களுக்குள் பங்கு வைத்துக் கொண்டனர். ஒரே ஒரு தங்கக் காசு மட்டும் மிச்சம் இருந்தது. அதை யார் எடுத்துக்கொள்வது என்ற பிரச்னை எழுந்தது. விட்டுக் கொடுக்க யாரும்தயாராகஇருக்கவில்லை. அந்தக் காசுக்காக அவர்களிடையே ஒரு சண்டையே மூண்டது. திருடர்களின் தலைவன் அவர்களைச் சமாதானப்படுத்தி, "அதோ அந்தப் பெட்டியில் ஒரு சவம் இருக்கிறது பாருங்கள். நாம் ஒவ்வொருவராக அந்தச் சவத்தினுடைய மூக்கைக் குறி பார்த்துச் சுடுவோம். யார்சரியாகச்சுடுகிறார்களோ, அவர்க


ளுக்குத்தான் இந்தத் தங்கக் காசு.'' என்று தீர்ப்பளித்தான்.

அதைக் கேட்ட பின்னும் ஒரு சவத்தைப் போல அங்கே படுத்துக் கிடக்க கியூபே என்ன அவ்வளவு முட்டாளா? உடனே அவன் குதித்து எழுந்தான். நிமிர்ந்து நின்றான். ''சகோதரச் சவங்களே! வேளை வந்து விட்டது எழுங்கள்! நாம் மீண்டும் உயிர் பெறுவோம்!'' என்று கூவி அழைத்தான்.

ஆயுதங்களையும், கொள்ளையடித்த விலையுயர்ந்த ஆபரணங்களையும் அங்கேயே போட்டுவிட்டுத் திருடர்கள் ஓடி மறைந்தனர். திருடர்கள் விட்டுச் சென்றபையிலேயே கியூபே அவற்றை மூட்டையாகக் கட்டினான். அதைத் தோளில் சுமந்து உற்சாகமாகப் பாடிக் கொண்டே அவன் வீட்டை அடைந்தான். மகன் உயிர் பெற்றுத் திரும்பி வந்ததில் அம்மாவுக்கு ரொம்ப சந்தோஷம். அவள் அண்டை அயலார்களை மீண்டும் கூவி அழைத்தாள். கியூபே தன் முழுக்கதையையும் சொன்னான். அதைக் கேட்டு அவர்கள் அதிசயித்தனர்.

கியூபே அந்த நகைகளுக்கு ஆசைப்படவில்லை. அவற்றை அரசாங்க அதிகாரிகளிடம் ஒப்படைத்தான். அவை முறையாக உரிமையாளர்களிடம் சேர்க்கப்பட்டன. கியூபேயின் நேர்மைக்கும், திறமைக்கும் ஏராளமான பரிசுகளும், பாராட்டுக்களும் குவிந்தன. அவன் ஓர் அரசகுமாரனைப் போலச் சுகமாக வாழ்ந்தான்.

ஒவ்வொன்றிலும் சில வித்தியாசங்கள் கண்டுபிடியுங்கள்!



விளையும் பயிர்



இலங்கையிலிருந்து கலவரத்துக்குப் பயந்து அந்தச் சிறுமி தன் பெற்றோரோடு 1982—ல் இந்தியாவுக்கு வந்தாள். இலங்கையில் சுநீதாவின் தந்தை ஓய்வு பெற்ற பள்ளி ஆசிரியர். சென்னை வந்ததும் சிறுமி சுநீதாவுக்கு நீச்சல் கலையில் ஆர்வம் ஏற்பட்டது. அவளுக்கு நீச்சல் பயிற்சியாளர்கள் சாலமனும், ராமசாமியும் முறைப்படி நீச்சல் கலையைக் கற்றுத் தந்தனர். நீச்சலோடு வாழ்க்கையில் எதிர் நீச்சல் போடக் கல்விக்கு எட்டாம் வயதில் குட் ஷெப்பர்ட் கான்வெண்டில் சேர்ந்தாள்! சுநீதா படிப்பிலும் படுசுட்டி; நீச்சலிலும் விற்பன்னள்!

ஒரு மாத காலம் நீச்சலில் தீவிரப் பயிற்சிக்குப் பிறகு சுநீதா தமிழக ராஜ்ய நீச்சல் போட்டியில் கலந்து கொண்டாள்; இவளுக்கு நான்கு பரிசுகள்; முதல் இடம் கிட்டாவிட்டாலும் நான்கும் இரண்டாம் பரிசுகள்! 1985—ஆம் ஆண்டு நீச்சல் சாம்பியன் போட்டியில் குட் ஷெப்பர்ட் கான்வெண்டின் தனிப் பிரதிநிதியாக ஷீல்டு வாங்கிக் கொடுத்தது அவளது தனிச் சிறப்பு. நீச்சலோடு நடனமும் கற்றுக் கொள்ளச் சிறுமி சுநீதா சண்முகானந்தா நாட்டியப் பள்ளியில் சேர்ந்திருக்கிறாள்.

இப்பொழுது சுநீதா ஆசிய நீச்சல் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெற்றிருக்கிறாள். புதுதில்லியில் நடக்கும் நீச்சல் பயிற்சி முகாமில் அவளைச் சேர்க்க அவளுடைய அன்னையும் டில்லி வரை கூடவே செல்கிறாள்! பெற்ற குழந்தை முன்னுக்கு வர வேண்டும் என்ற ஆவலில் அன்னை எடுத்துக் கொள்ளும் சிரமம் கொஞ்ச நஞ்சமல்ல.

அண்ணா நீச்சல் குளத்தில் டி. வி. எஸ். லூகாஸ் நிறுவனத்தின் ஆதரவில் ஜூலை 26—லிருந்து 28 வரை தமிழக நீச்சல் போட்டிகள் வயது வாரியாக நடைபெற்றன. இந்த நீச்சல் போட்டியில் சுநீதா ஆறு போட்டிகளில் கலந்து கொண்டாள். அவற்றில் ஐந்து ரிகார்டுகள் கண்டு அனைவரையும் மூக்கின்மேல் விரல் வைக்கச் செய்து விட்டாள்! விளையும் பயிருக்கு ஊக்கமும் உற்சாகமும் கிட்டினால் முன்னேறக் கேட்பானேன்!

லக்னோவில் நடைபெற்ற தேசிய நீச்சல் போட்டியில் சுநீதா கலந்து கொண்டு, நூறு மீட்டர் ப்ரீஸ்டைல், ஐம்பது மீட்டர் ப்ரீஸ்டைல் பந்தயங்களில் மூன்றாவது இடத்தைப் பெற்றாள்! நீச்சல் சாம்பியன் சுநீதாவுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது! கூடிய விரைவில் சர்வதேசப் போட்டிகளிலும் கலந்து கொள்ளப் போகும் வாய்ப்பு இவளுக்குக் கிட்டும்.

—பி. எஸ். எம்.



பாயும் புலி

கங்கா ராமமூர்த்தி

"புலித் தேவன்."

பெயரைக் கேட்டாலே நடுக்கம் ஏற்படுகிறதல்லவா? மகாவீரனை புலித் தேவன், ஆங்கிலேயரையும் நடுநடுங்க வைத்தவன்தான். வீரமறவர் குலத்திலே பிறந்தவன். வாள் வலிமையும், தோள் வலிமையும் மிக்கவன்.

1759—ம் ஆண்டு தென்னகம் முழுவதையும், ஆற்காட்டு நவாபு தன் வசப்படுத்தியிருந்தார். தென்னாட்டில் பாளையக்காரர்கள், ஆற்காட்டு நவாபை எதிர்த்துப் போராடி வந்தார்கள். பாளையக்காரர்கள் ஒவ்வொருவரும் கோட்டை, கொத்தளம், வீர மறவர் படை என்று சிறப்பாக அரசாட்சி செய்து வந்தார்கள்.

ஆற்காட்டு நவாபின் செலவுகளுக்கு அவ்வப்போது கடன் கொடுத்து வந்தது கிழக்கிந்தியக் கம்பெனி. கொஞ்சம் கொஞ்சமாகக் கடன் அதிகரிக்கவே, நவாபு வெள்ளையரின் அடிமை போல ஆனார். அவர்கள் சொல்வதைக் கேட்கும் நிலையிலிருந்தார். "கொடுத்த கடனைத் திருப்பிக் கொடு" என வெள்ளைக்கார வியாபாரிகள் கேட்டனர். நவாபு பணத்துக்கு வழி தேடினார். பாளையக்காரரிடம் வரி வாங்க வேண்டும். ஆனால், அவர்களோ வரி தர மறுக்கிறார்கள். எனவே, பாளையக்காரருக்குச் சொந்தமான இடங்களை வெள்ளையருக்குக் கொடுத்தார் ஆற்காட்டு நவாபு.

இப்போது வசூலிக்கும் உரிமை வெள்ளையனுக்கு வந்துவிட்டது. இதைத்தானே எதிர்பார்த்துக்கொண்டிருந்தது வெள்ளை வியாபாரக் கூட்டம். கும்பினியாரின் வரி வசூலிக்கும் கையாளான முகமது யூசுப், ஒரு படையுடன் திருநெல்வேலிக்குச் சென்றான். சூழ்ச்சியும், போர்த் தந்திரமும் மிக்கவனை யூசுப், திருவாங்கூர் மன்னனின் உதவியைப் பெற்றுக் கொண்டான்.

வாசுதேவநல்லூரில் இருந்த புலித்தேவனது கோட்டையைக் கைப்பற்றி, தரையோடு தரை ஆக்க வேண்டும் என்ற வெறியோடு, யூசுபின் படைகளும், திருவாங்கூர்ப் படைகளும் சென்றன.

வாசுதேவநல்லூரில் ஒருபுறம் இயற்கை அரணான மலையும், காடும், மறுபுறம் காட்டாறு, இவை கோட்டையைப் பகைவரிடமிருந்து பாதுகாத்தன. கோட்டை, மண்ணால் ஆகியது தான் எனினும் வலிமையானதாக விளங்கியது.

மறவரின் வீரப்படைகள் கோட்டையின் மேலும், உள்ளும் நின்று கவண் வீசி, பகைவர்களைக் கோட்டையை நெருங்க விடாமல் தடுத்தன., அம்புகள் முகமது யூசுப்பின் வீரர்களைப் பின் வாங்க வைத்தன. யூசுப்பின் பீரங்கிகள் கோட்டையைத் துளைக்க, குண்டுமாரி பொழியத் துவங்கின. பீரங்கிகளால் துளைப்பட முடியாமல், வாசுதேவநல்லூர்க் கோட்டை, கல் கோட்டையாக நின்றது.

குண்டு மழை பொழிந்து கொண்டிருந்த நேரத்தில், புலித்தேவன், மறவர் படையைக் கூட்டிக் கொண்டு, கோட்டையைச் சுற்றிச் சென்று, யூசுப்பின் கூலிப்படையைப் பின்புறமிருந்து தாக்கத் தொடங்கினான். முகமது யூசுப்பின் படை வீரர்கள் கோட்டையிலிருந்து எதிர்ப்படும் அம்புகளையும், பின்புறமிருந்து தாக்கும் அம்புகளையும் ஒருசேர எதிர்க்க முடியாமல், மாண்டு விழலாயினர். பல வீரர்கள், 'பிழைத்தோம்' என்று ஓடத் தொடங்கினார்கள்.

போர்த்திறமை மிக்க யூசுப் பின் வாங்கி ஓடி வந்ததைக் கண்ட ஆங்கிலச் சேனாதிபதிகளோ, சீறிப் பாய்ந்தனர்.

''ஒரு சிறிய மண் கோட்டையைத் தகர்க்க முடியவில்லையா! இதென்ன வேடிக்கை? புலித்தேவனை வென்று, வாசுதேவநல்லூர்க் கோட்டையை இடித்து வா'' என்று கர்னல் காம்பெல்லை, கம்பெனி அனுப்பியது.

1766—ம் வருடம். மீண்டும் கோட்டை முற்றுகைக்கு, கம்பெனியின் கூலிப்படை பீரங்கிகளுடன் வந்ததைக் கண்டு எள்ளி நகையாடினான் புலித்தேவன்.

கோட்டையைப் புலித்தேவனின் மறப்படை மிகவும்விழிப்புடன்காவல் புரிந்தது.

சண்டை மும்முரமாகியது. ஒரே சமயத்தில் பல பீரங்கிகள் முழங்கின. குண்டுகள் மழைபோல் பொழியத் தொடங்கின. அதற்குப் பதிலடியாக, அம்பு மாரி பொழிந்தனர் புலித்தேவனின் வீரர்கள். குண்டடி பட்டும், அம்பால் உயிரிழந்தும் பலர் வீழ்ந்து கிடந்தனர்.

கர்னல் காம்பெல் எல்லா பீரங்கிகளையும்ஏககாலத்தில்ஏவினான்.நாலா புறம் குண்டுகள் சீறிப் பாய்ந்தன. கோட்டையின் சுவர்களில் துளைகள் ஏற்பட்டதைக் கண்ட காம்பெல் அக மகிழ்ந்து போனான்.

ஆனால், என்ன அதிசயம்! கோட்டைக்குள் இருந்த வீரர்கள், துளை ஏற்பட்ட இடங்களையெல்லாம் உடனுக்குடன் களிமண் பூசி நிரப்பிக் கொண்டே வந்தனர். கர்னல் காம்பெல், திகைத்துப் போனான். எவ்விதம் குண்டுகளால் துளைக்கப்பட்ட இடங்கள் உடனடியாக அடைபடுகின்றன என்று மலைத்தான். மதில் சுவரில் விழும் துளைகளால் வாசுதேவநல்லூர் கோட்டை விழுந்துவிடும் என்று பகற்கனவு கண்ட கர்னல் காம்பெல் இப்போது செயலிழந்து நின்றான்.

பீரங்கிகள், உயிர்த் தோழர்களை யெல்லாம் உயிரற்றவர்களாக ஆக்குவதைக் கண்ட மறவர்களின் இரத்தம் கொதித்தது. ஆத்திரம் பொங்கியது. உயிரைத் திருணமாக எண்ணிப் போர் செய்ய முடிவு செய்தனர் புலித்தேவனின் படை வீரர்கள்.

உடனே, கோட்டை மேலேறிப் புயலெனப் பாய்ந்து பீரங்கிகளிலிருந்து பாய்ந்த குண்டுகளைக் கைப்பற்றி, கைவெந்து கீழே விழுந்தனர். குண்டடி பட்டு விழும் வீரர்களைத் தொடர்ந்து, ஒன்று, பத்து இருபது என மற்ற வீரர்களும் பாய்ந்து வருவதைக் கண்டு, பீரங்கியை இயக்கவும் மறந்து நின்றது கூலிப் படை. சில வீரர்கள் பீரங்கியின் மேலேயே அமர்ந்து கொண்டனர். பீரங்கிகளையே அசைத்துத் திருப்பிச் செயலிழக்கச் செய்தார்கள்.

கர்னல் காம்பெல்லும், அவனது வீரர்களும், உயிரையே பணயம் வைத்துப் போர் புரியும் மறவரைக் கண்டு அஞ்சினார்கள். பீரங்கியையே செயலிழக்கச் செய்தவர்கள், நம்மையும்

புலிபோலப் பாய்ந்து அடித்துக் கொன்று விடுவார்களோ என எண்ணினார்கள்.

ஏழு நாட்கள் நடந்தது புலித்தேவனுக்கும் கர்னலுக்கும் இடையிலான யுத்தம். கோரமான முறையில் மாண்டு கிடந்த தம் அருமைச் சோதரர்களான வீர மறவர்களைக் கண்டு மனம் கலங்கிய புலித்தேவன், இனியும், தமது வீர மக்களை இழக்க முடியாது என நினைத்தான்.

அதுசமயம், அந்தக் காட்டுப் பிரதேசத்தில் பெருமழை பெய்யத் தொடங்கியது. புயலும், காற்றும், மழையும், மறவர் காட்டிய வீரமும், கர்னல் காம்பெல்லை நிலைகுலைய வைத்தன. தனது படை பரிவாரங்களுடன் பின்வாங்கிச் சென்றான். இதை அறியாமல் புலித்தேவனும், கோட்டையின் பின் வாசல் வழியாக, தமது மக்களுடன் கோட்டையை விட்டு வெளியேறினான்.

மறுநாள் விடிகிற போது கோட்டை யாருமின்றிக் கிடக்கிறது. கோட்டையைப் பிடிப்பதற்கும் ஆள் இன்றிக் கிடக்கிறது. சில நாட்கள் மனித நடமாட்டமே இல்லாமல் பிணம் தின்னும் கழுகுகளும் நரிகளும் நடமாடிக் கொண்டிருந்தன, அந்தக் கோட்டைக்குள்.


சில நாளில், யாரும் கோட்டைக்குள் இல்லை என்பதை அறிந்து கொண்ட ஆங்கிலப் படை வீரர்கள், இச்செய்தியைக் கர்னலிடம் ஓடோடிச் சென்று கூறினார்கள். அகமகிழ்ந்து, புலித்தேவனது கோட்டையைப் பிடிக்கச் சென்றார்கள். யாருமில்லாத கோட்டையைக் கண்டதும், புலித்தேவனையே பிடித்தது போல மகிழ்ந்து, இடிக்கத் துவங்கினார்கள். கோட்டை பல பேர்களின் இடியைத் தாங்காமல், மண்ணோடு மண்ணாகியது.

"பிறருக்கு அடிமையாக வாழ்வதை விட எதிர்த்துப் போராடுவதே மானமாகும்" என எண்ணிய பாளையக்காரர்களில் ஒருவனான புலித்தேவனின் வீர வரலாறு, நெஞ்சங்களில், வீரத்தை விதைக்கும் வரலாறு ஆகும். பாயும் புலியாக விளங்கியவன், பகைவரை, இறுதிவரை ஒரு பாயும் புலியாகவே இருந்து எதிர்த்து நின்றான்! புலித்தேவன் புகழுக்குரியவன்!




விந்தை உலகம்!


விமலன்




கடல்குதிரை மீன் இனத்தைச் சார்ந்தது. இது தனது எதிரிகளைக் கண்டால் கடல் பாசி போல தனது உருவத்தை மட்டுமின்றி நிறத்தையும் மாற்றுவதால் கடல் பச்சோந்தி எனவும் அழைக்கப் படுகிறது



பாவாடைப் பனைமரம் என்று இவ்வகை தனது தடிப் பகுதியினை தனது இலையாலேயே சூரிய ஒளி படாதவாறு மூடிக் கொண்டிருக்குமாம், கலிபோர்னியாவில் இதனை வாஷிங்டனியா பாம் என அழைக்கப் படுகிறது.



பச்சிபோடியம் நாமக் வானம் என்று முட்செடிவகை எப்போதும் வடக்கு நோக்கி சாய்ந்திருக்குமாம், எனவே பயணிகள் திசைகாட்டி ஆக கொள்வர். இது தென் ஆப்பிரிக்காவில் உள்ளது.



1899-ல் ஒரு ரயிலை முழுமையாகவும் ஒவ்வொரு பகுதியும் மிகத் துல்லியமாக படம் பிடிக்க 20 அடி நீளம், 1400 பவுண்டு கனமும் கொண்ட காமிரா செய்யப்பட்டதாம். இதில் 10 அடிக்கு 8 அடி கொண்ட நெகடிவ் பிலிம் பயன்படுத்தப் பட்டதாம்.

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431542)
Editor: K. Rajendran



சித்தரஞ்சன்தாஸ்

பிறந்தநாள்: 5.11.1870 மறைந்தநாள்: 16.6.1925

REGISTERED No. TN MS (8) 281
Registered as a Newspaper in Sri Lanka



சன்னல் ஓரம் நிற்கிறோம்;
சாய்ந்து கொண்டே சிரிக்கிறோம்.
சின்னஞ் சிறுமி எம்முடன்
சேர்ந்து கொஞ்சம் சிரியுங்கள்.

புகைப்படம்: கோவை சிதாராம்.